www.tamilarangam.net

# அலை ஓசை

## "MANVASANI" FAME REVATHY



உள்ளே ரேவதியின் பேட்டி

வாசகர்களுக்கு எமது
நத்தார் புதுவருட வாழ்த்துகள்.

தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம்
பரவும் வகை செய்தல் வேண்டும்.

லண்டனில் இருந்து வெளிவரும் தமிழ்ச் சஞ்சிகை

OCTOBER-DECEMBER 1990 ALAI 5 OSAI 5

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


Sri Lankan & South Indian Food Products, Magazines,News Papers, Cine-Publications,Tamil Audio & Video Cassettes and C.D

KUMARANS

also
Fax Services to
Sri Lanka & India

Fax: 081 521 9482

உங்கள் அனைத்து உணவுபபொருட்களையும் ஒரே இடத்தில் தெரிவு செய்யுங்கள்

* தமிழ், ஆங்கில மாதாந்த வாராந்த சஞ்சிகைகள், பத்திரிகைகள்,பஞ்சாங்கம்
* தமிழ் ஓடியோ, வீடியோ, கொம்பக்ட் டிஸ்குகள்
* இலங்கையிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட நண்டு, சுறா, மீன், இறால், அரிசிமா, ஊறுகாய், நலலெண்ணெய, பழவகைகள், இடியப்பம், பல சரக்கு வகைகள், கறிவேப்பிலை, இன்னும் பல பல...

ஒரு முறை விஜயம் செய்யுங்கள், உண்மை புரியும்!

# KUMARANS

**142, Hoe Street, Walthamstow, London E17 4QR**
**Tel: 081 521 4955 & 081 520 5960**
**Tube: Walthamstow Central**
**Open Seven Days a Week. (9a.m. - 10.p.m.)**
**Mail Order Service Available**



VEEKAY

# VEE KAY AUTOS

**EXTENSIVE RANGE OF SPARES ACCESORIES AND BODY PANELS FOR ALL MAKES OF CARS**

*OPEN 7 DAYS A WEEK*
*MON-FRI*
*8AM TO 8PM*

**TEL: 081-806 2294/5**
76 STAMFORD HILL, LONDON N16 6XS

www.tamilarangam.net


# அலை ஓசை
# ALAI OSAI

தமிழ் - ஆங்கில விஞ்ஞான கலாச்சார மாதாந்த சஞ்சிகை

Tamil-English Science & Cultural Monthly Magazine

அலை 5 ஓசை 5 **ஐப்பசி - மார்கழி** **1990**



*EDITORS:*

**Bala.Ravindran**
**K.Jeyakumar**

**ASST.EDITORS:**
***TAMIL:***

**G.Meganathan**
**S.N.Raguram**

***ENGLISH***

**Dr.S.Maheswaran**

***SCIENCE & TECHNOLOGY:***

**P.Nanthacumar**

**REPORTERS:**

**AUSTRALIA:**
**V.Aravindan**

**FRANCE:**
**S.Karunanithi**

**NORWAY:**
**Sinthu**

**NEDERLAND:**
**K.Nadarajah**

**DENMARK**

**R.Karunakaran**

**MIDDLE EAST:**
**A.J.Gnanendran**

**TYPE SETTING:**
**Miss.U.Shanmugam**


## என்று மலரும் எங்கள் தாயகம்?
## என்று மடியும் எங்கள் அடிமை வாழ்வு?

**1990**ம் ஆண்டும் வந்து இன்னமும் சிறிது நாட்களில் விடைபெறப்போகிறது. ஆனால் எமது தாயக மலர்ச்சிதான் இன்னமும் பின்போடப்படுகின்றது. தமிழ்த்தாய் தனது மழலைகளை நாள்தோறும் இழந்து தவிக்கிறாள். "தை பிறந்தால் வழி பிறக்கும்" என்பது நம் முன்னோர் வாக்கு. இப்படி எத்தனையோ தை வந்து போய்விட்டன. ஆனால் எமக்குத்தான் இன்னமும் வழி பிறக்கவில்லை.

சிறிலங்காவின் மிலேச்ச அரசோ சதிகார எட்டப்பர் கூட்டமான தமிழ்த் துரோகக் கும்பல்களுடன் கூட்டுச்சேர்ந்து மேலும் தமிழ் மக்களின் போராட்டத்தை மழுங்கடிக்கிறது. நாளொரு வண்ணமும் பொழுதொரு செயலுமாக இனவாத அரசு வடக்கு கிழக்குப் பகுதிகளில் குண்டுமாரி பொழிந்து தமிழ் மக்களையும் அவர்களது அத்தியாவசிய தேவைகளையும் அழித்தொழிக்கிறது. எல்லாவற்றிற்கும் மேலாக தமிழ் மக்களின் சோதனை என்னவென்றால் சர்வதேச அரங்கில் சிறிலங்காவின் தறிகெட்ட அரசு கபடநாடகமாடி உலகவங்கியில் கடனுதவி பெற்றமையே. இக் கடனுதவி நிச்சயமாகத் தமிழ்மக்களின் அழிவுக்கே பயன்படுத்தப்படும் என்பதில் எவ்வித சந்தேகமுமேயில்லை. இக் கடனுதவியை வழங்கி வரும் உலகநாடுகளில் தமிழ் மக்கள் அகதிகளாக இடம்பெயர்ந்து வருவது அண்மைக் காலங்களில் பெருகி வருகின்ற பொழுதும் அந்நாடுகள் தமிழ்மக்களின் அழிவைப் பெரிது படுத்தாமல், சிறிலங்காவின் மிலேச்ச அரசைத் தட்டிக்கேட்காமல் இருப்பது விந்தைக்குரியதொன்று.

* * * * *

அன்பான வாசகர்களுக்கு!

எமது அலை ஓசை சஞ்சிகை கடந்த ஐந்து வருடங்களாக வளர்ச்சி அடைந்து ஆறாவது வருடத்தில் காலடி எடுத்து வைக்கப்போகின்றது. வாசகர்களாகிய உங்கள் ஆதரவில் தான் இச்சஞ்சிகையின் வளர்ச்சி தங்கியுள்ளது. எனவே எமது இச் சஞ்சிகையில் வரும் ஆக்கங்களுக்கு உங்கள் விமர்சனங்களை எமக்கு மேலும் அனுப்பிவைத்தீர்களானால் நாம் மேலும் முன்னேற்றப் பெரும் வாய்ப்பு உண்டு. மேலும் வாசகர்கள் அனைவருக்கும் அலை ஓசையின் ஆசிரியர் குழு தமது நத்தார் புதுவருட வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றது,

'OSAI'
5 RUE HERMEL
75018 PARIS
FRANCE

### HOW TO SUBMIT ARTICLES:

Readers are welcome to write to ALAI OSAI publication.Please send your articles to: **THE EDITOR, ALAI OSAI, 109 Philip Lane, Tottenham, London N15 4JR.**

**PUBLISHERS: WALTHAM FOREST THAMIL SANGAM**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## அட்டைப்படம்




அன்புள்ள ஆசிரியரே,
அலை ஓசையின் கடந்த இதழின் அட்டைப்படம் எம் கண்களில் கண்ணீர் வர வைத்துவிட்டது. சரியான சந்தர்ப்பத்தில் இவ்வாறான அட்டையைப் பிரசுரித்த தங்களுக்கு எமது நன்றிகள்.

- திவ்யா - -எட்மன்ரன்-

அலைஓசையின் அட்டைப்படம் எம்மையும், எமது உடன் பிறப்புக்களையும் எந்த வகையில் சொந்த நாட்டிலேயே அகதிகளாக மாற்றியுள்ளதென்பதைத் தெளிவாகக் காட்டியுள்ளது.

- மயூரன் - - என்பீல்ட் -

அலை ஓசையின் அட்டைப்படத்தில் சிறுபிள்ளைகள் தட்டேந்தி நிற்கும் நிலை கண்டு மனம் துடிதுடித்தேன். அவர்களுக்கு உதவுவதற்கு ஏதாவது வழிகளுண்டா?

- சிவா- - சுற்றிஸ்-

## இலங்கைச் செய்திகள்/ தாயகத்துச் செய்திகள்.

ஆசிரியரே,
அலை ஓசையில் பிரசுரிப்பதற்கு உமக்குப் புதிய செய்திகளே கிடைப்பதில்லையா? எந்நாளும் பழையனவற்றையே போட்டு ஏன் எமது கழுத்தை அறுக்கிறீர்?

- யோகன்- - ரொற்றினம்-

அலைஓசையில் வெளிவந்த, வந்து கொண்டிருக்கும் தாயகத்துச் செய்திகள் எமக்கு நன்கு பிரயோசன
மாய் இருக்கின்றது. செய்திகளைச் சாராம்சமாகத்
தொகுத்து வழங்கும் ஆசிரியர் குழுவிற்கு எமது நன்றிகள்.

- பாக்கியம்- - குரொய்டன்-

அலை ஓசையில் தாயகச் செய்திகளுக்கெனக் கூடிய பக்கங்களை ஒதுக்கமுடியுமா? தற்போதைய சூழ்நிலையில் செய்திகள் கிடைப்பது அரிது என்பதால் தாங்கள் இதனைக் கவனத்தில் எடுத்து ஆவன செய்வீர்கள் என எண்ணுகின்றேன்.

- சங்கர்- - ஸ்கொட்லண்ட்-

## கவிதை

கணபதிப்பிள்ளை கோணேஸ்வரனின் கவிதை இந்நாட்டிலிருக்கும் எமது சிற்றிசன்களுக்கும் தாய்நாட்டை மறந்திருக்கும் அகதிகளாக வந்திருக்கும் சிற்றிசன்களுக்கும் மனதை உறுத்தியிருக்கும். இப்படியான கவிதைகளைப் பிரசுரித்து எல்லோருக்கும் விழிப்புணர்ச்சி ஏற்படுத்த வேண்டும்.

- கிருபா- -வோல்த்தம்ஸ்ரோ-

கணபதிப்பிள்ளை கோணேஸ்வரனின் கவிதை நன்றாக அமைந்திருந்தது. இதனை மறுபடியும் வேறு எவ்விதத்திலாவது மக்களை அடையும் வழியில் பிரசுரிக்க முடியுமா?

- மாதவன்- - ஈஸ்ட்காம்-

## கேள்வியும் நானே பதிலும் நானே

கேள்வியும் நானே பதிலும் நானே கட்டுரை தரமான
ஆக்கமாயிருந்தாலும் சிலவேளைகளில் போரடித்து விடுகின்றது.

-திரு- -ஈஸ்ட்காம்-

கேள்வியும் நானே பதிலும் நானே கட்டுரை உலகநாடுகளுடன் எம்நாட்டு அரசியலையும் தரம்பட
அலசப்பட்டு எழுதப்படுவதால் மிகவும் சுவாரசியமாக உள்ளது.

- ராகவன்- - விம்பிள்டன்-



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## சிறுகதை

சில்லறைச் சந்தங்கள் சிறுகதை நல்ல கருத்தான கதையாக அமைந்திருந்தது. அலை ஓசையில் சிறுகதைகளுக்கு படங்கள் போட்டால் நன்றாக இருக்குமே.

- சங்கரி- - வோல்த்தம்ஸ்ரோ-

சிறுகதைப் பகுதியில் மேலும் ஒன்றிரண்டு சிறுகதைகளைச் சேர்த்தால் நன்றாக இருக்கும், அத்துடன் அலை ஓசை தரமானதாயும் வெளிவரும் என்பது எனது ஆசை. இதனை ஆசிரியர் குழு சற்றுச் சிந்திக்க வேண்டும்.

- மாலா- -கிங்ஸ்பரி-

## இலங்கைக் கலைஞனோடு ஒரு சில நிமிடங்கள்

வானொலிக் கலைஞர் அப்துல் ஹமீதுடன் ரகுராமின் பேட்டி மிகவும் நன்றாக இருந்தது. ஆனால் படத்தில் யார் நிற்கிறார்கள் என்று தெரியவில்லையே.

- ரஞ்சன்- - பாரிஸ்-

ஆசிரியரே ஏன் உமது கமராவைக் கொஞ்சம் திருத்தினால் தான் என்னவாம்? பேட்டியின் தரத்தைப் படம் கெடுத்துவிட்டதே? இனிமேலாவதுபடப்பிடிப்பில் கோட்டை விடாமல் இருக்கப் பாரும்.

- நாதன்- - விம்பிள்டன்-

## சட்டமும் சிரிக்கும்

சட்டமும் சிரிக்கும் கட்டுரை, அலை ஓசையில் நகைச்சுவை இல்லை என்ற குறையை நிவர்த்தி செய்ததுடன், எம்மையெல்லாம் ஈழத்திற்கு ஒரு சில நிமிடநேரங்கள் இழுத்துச் சென்றுவிட்டது.

- லிங்கம்- - சவுத்தோல்-

சட்டமும் சிரிக்கும் கட்டுரை சிரிப்போடு சிந்தனையையும் தூண்டக்கூடியதாய் அமைந்திருந்தது. ஆக்கியோனுக்கு எனது மனமுவந்த பாராட்டுக்கள்.

-பாபு - - ஈஸ்ட்காம்-

சட்டமும் சிரிக்கும் கட்டுரையைத் தொடர்ந்து பிரசுரிப்பீர்களா? அலை ஓசையின் நகைச்சுவைத் தரமும் உயர்த்தப்படும்.

- யோகா- - இல்போட்-

## அபிநயசுந்தரி ஆடுகிறாள்

அலை ஓசை ஆசிரியர்களே, நீங்கள் எப்பொழுது நடனம் பயின்றீர்கள்? உங்களது விமர்சனத்தை வாசித்தபின்னர் எனக்கு, என்னிடம் இருக்கும் நடனக்கலையில் சந்தேகம் தோன்றும் போலுள்ளது. இவ்வளவு துல்லியமாக அவதானித்து இந்த விமர்சனத்தை எழுதிய தங்களது ஆற்றலைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

- கவிதா- - மிச்சம், சறே.-

இந்தியாவில் ஒரு சுப்புடு போல, அலை ஓசையின் விமர்சனங்கள் மிகவும் தரமானதாகவெளிவருவது மிகவும் வரவேற்கத்தக்கது. பிழைகளைச் சுட்டிக் காட்டி, அதேவேளை நல்லவற்றையும் எடுத்துக் கூறும்அலை ஓசையின் விமர்சனங்கள் மேலும் தரமானதாய வெளி வரவேண்டும் என்று வாழ்த்துகின்றேன்.

- சுந்தரம்- - சவுத்தோல்-

ஆசிரியரே, நேரகாலம் பிந்தினால் அதற்குக் காரணங்களையும் சுட்டிக் காட்டவேணுமா? அத்துடன் நீர் என்ன எந்நேரமும் மணிக்கூட்டைப் பார்த்தபடிதான் இருந்தீரா? எழுதும் போது ஒரு பக்கச் சார்பாய் எழுதாதையும்.

- தினேஷ்- -ஈஸ்ட்காம்-

விமர்சனத்தை எழுதும் போது என்னயோசனையில் எழுதுகிறீர்கள்? பக்கவாத்தியங்கள் இல்லாமலா அரங்கேற்றம் நடந்தது?. பக்கவாத்தியக்காரரை மறந்தது ஏனோ?

- குமார்- - நீஸ்டன்-



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## மர்மக்கதை ராணி
## அகதாகிறிஸ்டி

அ. ஜே. ஞானேந்திரனின் கட்டுரை கிறிஸ்டியின் வாழ்க்கை வரலாற்றை முழுமையாகச் சித்தரித்துக் காட்டியிருந்தது. அதனை சரியான சமயத்தில் வெளியிட்ட ஆசியர் குழுவிற்கு எமது நன்றிகள்

**- ராஜ்-** **- கிங்ஸ்பரி-**

அகதா கிறிஸ்டியின் கட்டுரை மிகவும் நன்ருக அமைந்திருந்தது. அதனை எழுதிய அ. ஜே. ஞானேந்திரனுக்கு எமது பாராட்டுக்கள்.

**- அனபாயன்-** **- நோர்வே-**

அலை ஓசை கணணியில் பொறிக்கப் பட்டுப் புதுப் பொலிவுடன் உலகளாவிய நிருபர்கள் கொண்டதொரு சஞ்சிகையாக, உலக நாடுகளில் நடைபெற்ற நிகழ்ச்சிகளின் விமர்சனங்களோடு வெளிவந்துள்ளதைப் பார்க்கும் போது அலை ஓசையின் வளர்ச்சியையும் அதற்குராமிடும் ஆசிரியர்களையும் பாராட்டாமல் இருக்க முடியாது.

**- காங்கேசன்-** **- ஜேர்மனி-**

அலை ஓசையில் எண்ணற்ற எழுத்துப் பிழைகளும் பொருட்பிழைகளும் உள்ளன. அதனை உடனடியாக நிவர்த்தி செய்யுங்கள்.

**- தயாளன்-** **- கிறீன்போட்-**

All right reserved. No part of this publication may be reproduced without prior written permission of the publisher. The publisher cannot accept any responsibility for claims or error articles, programs or advertisements published. The opinions expressed on the pages of this magazine are those of the authors and do not necessarily represent those of the authors and do not necessarily represent those of the publisher WALTHAM FOREST THAMIL SANGAM.


# A L A I O S A I

**Subscription Rates (12 Copies) £9.60 only.**
**Payment by Cheque or Money order only**

in favour of **"WALTHAM FOREST THAMIL SANGAM"**
Please complete this form and post to :-

**ALAI OSAI, Waltham Forest Thamil Sangam,**
**109 Philip Lane, Tottenham, London N15 4JR.**

NAME :.......................................................................................................

ADDRESS:...................................................................................................

.........................................................................................................

TEL:.............................

.................................... ...../...../19.... ..........................

Signature Date Starting Month




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தாயகத்துச் செய்திகள்

## யாழ் வைத்தியசாலை மீது குண்டு வீச்சு

யாழ் வைத்தியசாலை மீது சிறிலங்கா இனவெறி அரசு நடத்திய விமானக் குண்டு வீச்சை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மிகவும் வன்மையான முறையில் கண்டித்துள்ளது. இவ்வாறான அத்துமிறல்கள் நடைபெறமாட்டாதென அரசாங்கம் உறுதியளித்தால் மட்டுமே வைத்தியசாலை மீண்டும் இயங்க வைக்கப்படும் என்றும், வைத்தியசாலைக் கட்டிடங்களுக்கு தெளிவான முறையில் அடையாளங்கள்இடப்பட்டிருந்தும் சிறிலங்காவின் ஆகாய விமானங்கள் போட்ட குண்டுகளினால் வைத்தியசாலைக் கட்டடங்களும் ஜன்னல்களும் சிதறடிக்கப்பட்டதென்றும் சங்கம் பத்திரிகையாளர்களுக்குத் தெரிவித்துள்ளது.

## தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் செயற்பாடுகள்

வடக்கு கிழக்குப் பகுதியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் அளிக்கும் பணியில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர் பெரிதும் ஈடுபட்டுள்ளனர். பெருமளவில் வெளிநாடுகளில் வாழும் தமிழ் மக்கள் நிதியுதவி செய்துவருகின்றனர். தாயகத்தில் அல்லல்படும் மக்களுக்காகவே இந்நிதி பயன்படும்.மேலும் அரசசார்பற்ற சர்வதேச நிறுவனங்கள்மூலமும் உதவிகள் பெறுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் இலண்டன்கிளை இலண்டனில் வாழும் அனைத்துத் தமிழ் மக்களையும் தாழ்மையுடன் வேண்டிக் கொள்வது தாயகத்தில் வாழும் உங்கள் உடன்பிறப்புக்கள், தாய், தந்தையரின் துயர்துடைக்க உங்களால் ஆன உதவி செய்யுங்கள் என்றே. தற்போது தாயகத்தில் அன்றுடு தமிழ் மக்களின் துயர்துடைக்கும் ஒரே ஸ்தாபன தமிழர் புனர்வாழ்வுக்கழகமே.

## மட்டக்களப்பில் மூன்று இராணுவத்தினர் பலி

போராளிகளின் கிளைமோர் தாக்குதலினால், மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள களுவாஞ்சிக்குடிஎனும் இடத்தில் மூன்று இராணுவத்தினர் பலியாகியுள்ளனர். இராணுவத்தினருடன் மாற்று இயக்கத்தைச் சேர்ந்த எட்டப்பர் கூட்டத்தைச்சேர்ந்த தலையாட்டிகள் சேர்ந்து தமிழ்மக்களைக் காட்டிக் கொடுக்கின்றனர்.

## அகதிகளின் படகை இலங்கை கடற்படை தாக்கியது.

அன்று இரவு யாழ் மாவட்டத்திலுள்ள அனலைத்தீவு என்னும் கிராமத்திலிருந்து இந்தியாவுக்கு அகதிகளாகச் சென்ற மக்கள்மீது காரைநகர் முகாம் கடற்படையினர் தாக்குதல் நடத்தினர். இதன் போது 6 பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

## இனவாதப்படைகளின் வெறியாட்டம்

முஃலீம் ஊர்காவற்படையினரால் தம்பலகாமம் பகுதியில் 24 வயதுடைய ஆறுமுகம் குட்டியன், 18 வயதுடைய இலட்சணன் ஆகிய இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டு இழுத்துச் செல்லப்பட்டுள்ளனர், இதனால் அச்சமுற்ற ஏனைய ஆண்கள் காட்டுப்பகுதிக்குள் ஓடி விட்டனர்.

மட்டக்களப்பு களுதாவளை மகாவித்தியாலயத்தில் பணியாற்றும் ஆசிரியரான பாஸ்கர் என்பவர் சிறிலங்கா இராணுவத்தினராலும் தமிழ்த் துரோகக் கும்பல்களினாலும் பிடித்து செட்டிப்பாளையம் முகாமுக்கு இழுத்துச் செல்லப்பட்டுள்ளார். இவர் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கலாம் என நம்பப் படுகின்றது.

காத்தான்குடி இராணுவ முகாம் இராணுவத்தினர் கொக்கட்டிச்சோலை பகுதியில் வைத்து மூன்று தமிழர் பயணிகளைச் சுட்டுக் கொன்றனர். இவர்கள் மண்முனைதுறைக்கு செல்லும் வழியில் பிடித்துச் சுட்டுக் கொல்லப்பட்டனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**விமானத் தாக்குதலுக்கு அஞ்சி முஸ்லீம் மக்கள் வெளியேற்றம்**

தொடர்ச்சியாக இடம் பெறும் விமானக்குண்டு வீச்சு காரணமாக பாதுகாப்பு நிமித்தம் வட பகுதி வாழ் முஸ்லீம் மக்கள் இடம் பெயரவேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாகி இருந்தனர். மேலும் கிழக்கில் சிங்கள படைகளுடன் இணைந்து முஸ்லீம் ஊர்காவல்படையினர் நடத்திய மிக மோசமான பயங்கரவாத நடவடிக்கைகளால் அகதிகளாக வடக்கு நோக்கி இடம் பெயர்ந்த தமிழ் மக்களினால் வடபகுதி முஸ்லீம் மக்கள் இச்சதிக்கு உள்ளாகியிருந்தனர். இந்நிலையில் புத்தளம் போன்ற முஸ்லீம் மக்கள் நிறைந்த பகுதிகளில் இயற்கையான பாதுகாப்பு உணர்வை தந்ததால் வடபகுதி முஸ்லீம் மக்கள் அப்பகுதிகளுக்கு இடம் பெயர்ந்துள்ளனர். இதனை சிறிலங்கா அரசும் முஸ்லீம் காங்கிரஸ் கட்சியும் விடுதலைப் புலிகளால் உருவாக்கப்பட்ட பிரச்சினையாக்க முயன்று வருகின்றனர். விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி இதனை வன்மையாகக் கண்டித்துள்ளது.

**செங்கலடி முகாம் அருகே பவலோ சிதறுண்டது.**

உலகில் தலைசிறந்த கவசவண்டி எனக் கருதப்படும் தென்னாபிரிக்க பவலோ கவச வண்டிகள் தமிழீழம் மீதான சிறிலங்கா போரின் பல தடவைகள் சேதமாக்கப்பட்டுள்ளன. விடுதலை வீரர்களின் அதிசக்தி வாய்ந்த கண்ணிவெடித்தாக்குதல் ஆர். பி. ஜி தாக்குதல் என்பன பவலோ கவச வண்டிகளை சேதமாக்கி வருகின்றன. கடந்த 28.10.90 அன்று மட்டக்களப்பு செங்கலடி இராணுவத்தினர் முன்னேறிய போது மேஜர் கண்ணன் தலைமையிலான போராளிகள் தாக்குதலை ஆரம்பித்தனர். விடுதலை வீரர்களிடமுள்ள கால்கஸரோ ஏவுகணைகள் பவலோ வண்டியை சிதறடித்து.

**சிகிச்சை வசதி இன்றி கர்ப்பிணிப் பெண்கள்**

யாழ்ப்பாணப் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்து நாவற்குழியில் அகதிகளாக இருக்கும் கர்ப்பிணிப் பெண்கள் பலர் கிளினிக் வசதி இன்றி அவதிப் படுகின்றனர்.

நாவற்குழிப் பகுதியில் இயங்கி வந்த கர்ப்பிணிகளுக்கான கிளினிக் நீண்டகாலமாக இயங்காதிருப்பதைத் தொடர்ந்து இப்பகுதி மக்கள் நெடுங்குளப் பகுதியில் தற்போது இயங்கிக் கொண்டிருக்கும் கிளினிக்கில் சிகிச்சை பெற்று வந்தனர்.

தற்போது அந்நிலையைத்துக்கு வரும் கர்ப்பிணிப் பெண்களின் எண்ணிக்கை அதிகரித்ததை அடுத்து அங்கு செல்லும் பலர் திருப்பி அனுப்பப்படுகிறார்களாம்.

நாவற்குழிப்பகுதியிலிருந்து சென்ற சுமார் 15 கர்ப்பிணிப் பெண்கள் கடந்த 11ஆம் திகதி இவ்வாறு திருப்பி அனுப்பப்பட்டனர் என்று தெரிவிக்கப் படுகிறது.

**தமிழகத்தில் 1,18,000 அகதிகள்**

தமிழ்நாட்டில் 19 மாவட்டங்களில் உள்ள 320 முகாம்களில் ஒரு லட்சத்து 18 ஆயிரம் இலங்கைத் தமிழ் அகதிகள் தற்சமயம் தங்கி உள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அகதிகள் மறுவாழ்வுத் துறை சிறப்பு ஆணையாளர் சி. எம. இராம்தாஸ் மதுரையில் இத்தகவலைத் தெரிவித்தனர்.

**பரீட்சார்த்த மின் இணைப்பு சுன்னாகத்திற்கு கிடைத்தது**

கிளிநொச்சியிலிருந்து 32 கே.வி. மின் இணைப்பூடாக சுன்னாகம் மின் நிலையப் பகுதிவரை மின்சாரத்தைப் பெறும் பரீட்சார்த்த முயற்சி வெற்றியடைந்ததாக அறியவருகிறது.

தென்மராட்சி, வடமராட்சி பகுதிகளுக்கு பரீட்சார்த்தமாக வழங்கப்பட்ட மின்சாரம், நேற்று கோப்பாய் ஊடாக சுன்னாகம் வரை பரீட்சார்த்தமாக வழங்கப்பட்டதாக அறியவந்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

டிரான்ஸ் போமர்களிலிருந்து திருட்டுப் போன ஓயில் மீண்டும் நிரப்பப்படும் பட்சத்தில் குடாநாட்டு மக்களுக்கு உடனடியாக சுழற்சி முறை மின்சாரத்தை ஓர் ஒழுங்கு முறையில் வழங்க முடியும் என நம்பிக்கை தெரிவிக்கப்பட்டது.

**<u>மாங்குளம் இராணுவமுகாம் போராளிகள்</u>**

**கையில்.**

கடந்த சில நாட்களாக போராளிகளுக்கும், சிங்கள இராணுவத்திற்கும் இடையில் இடம் பெற்ற கடும் மோதலைத் தொடர்ந்து மாங்குளம் இராணுவமுகாம் போராளிகள் கைவசம் கிடைத்தது. விமானப் படைகளின் உதவியுடன் தரைமார்க்கமாகவும் போராடிய சிங்களக் கூலிப்படை, போராளிகளின் உக்கிரமான தாக்குதலைச் சமாளிக்க முடியாமல் காடுகளுக்குள் தப்பி ஓடிவிட்டனர். போராளிகள் தரப்பில் 52 பேர் வரையில் இறந்துள்ளனர். சிறிலங் காவின் கூலிப்படையில் 200க்கும் அதிகமானோர் அழிக்கப்பட்டும், மேலும் பல்லாயிரக் கணக்கானோர் தப்பியோடியும் உள்ளனர். தப்பியோடிய கூலிப் படை யினரை சிறிலங்காவின் அரசு காடுகளுக் குள் தேடிக்கொண்டிருப்பதாக இச் செய்தி அச்சுக்குப் போகும் வரையில் நமக்குக் கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

**மட்டக்களப்பு துரிதமாக வழமைக்குத்**

**திரும்புகின்றது**

மட்டக்களப்பு மாவட்டம் கடந்த ஐந்து மாத இடை வெளிக்குப் பின்னர் தற்போது துரிதமாக மீண்டும் வழமையான நிலைக்குத் திரும்புகின்றது. அரச அலுவலகங்கள், கடைகள் சினிமாத் தியேட்ட ர்கள் குறிப்பிட்ட சில மணித்தியாலங்களுக்கு இயங்குகின்றன.

## வோல்தம் பொறஸ்ற் தமிழ் சங்கம் உதைபந்தாட்டக் குழு

மேற்படி எமது கழகக் கூட்டம் திரு. தயாளன் தலைமையில் நடைபெற்றது. இப் பொதுக் கூட்டத்தில் கழக உறுப்பினர்களால் தெரிவு செய்யப் பட்ட அங்கத்தவர்கள் பெயர்கள் பின்வருமாறு--

திரு. அமலன் - தலைவர்

திரு. சுதர்சன் - உப தலைவர்

திரு. கிரி - கப்டன் ( அணித்தலைவர்)

திரு. கண்ணன் - உப அணித்தலைவர்

<u>விளையாட்டு வீரர்கள்</u>

1. ராஜ் 2. அருள் 3. விக்கி 4. ரஞ்சித்

6. சியாம் 7. சாந்தன் 8. குமார்

9. விஜே 10 காண்டீபன் 11. தாஸ் 12. மோகன்

எமது கழகம் இதுவரை விளையாடி வெற்றி பெற்ற அணிகள்

| | | | |
|---|---|---|---|
| THAMIL SANGAM | 8 | EASTHAM | 4 |
| THAMIL SANGAM | 6 | EDMONTON | 0 |
| THAMIL SANGAM | 6 | CATFORD | 1 |
| THAMIL SANGAM | 9 | ACTON BOYS | 0 |

தகவல் - தமிழ் சங்க விளையாட்டுக் குழு.



சர். சி. வி. ராமன் எப்போதுமே தலைப்பாகை அணிந்திருப்பார். அவரைச் சந்தித்த நண்பர் ஒருவர் அவரிடம், "எப்போதுமே தலைப்பாகை அணிகிறீர்களே, ஏன்?" என்று கேட்டார்.

"தலை, (கனத்தினால்) பெருத்து விடக் கூடாதே, அதற்காகத்தான்" என்றார் ராமன்!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## -ஓசைகள்-

தமிழ் முஸ்லீம் குழுக்கள் இராணுவரீதியில் தம்மைப் பலப்படுத்திக்கொள்ள அனுமதிப்பதில்லையென்று அரசாங்க உயர்மட்டத்தில் முடிவு செய்யப்பட்டிருப்பதாக நம்பகரமான வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

**- வீரகேசரி வாரவெளியீடு**

வட/கிழக்கு இணைந்த மாகாண அமைப்பிலேயே நிரந்தரத் தீர்வு உண்டு.

**- அஷ்ரப் வீரகேசரியில்**

விடுதலைப்புலிகள் பேச முன்வந்தால் அவர்களுடன் பேச அரசு தயார்.

**பி.பி.ஸி. பேட்டியில்**
**பிரதமர்விஜேதுங்கா**

யாழ்ப்பாணத்தில் அரசு சில நோக்கங்களுடன் செயற்படுகின்றது. இந்தியாவின் உருவாகும் எந்த ஒரு அரசியல் மாற்றங்களால் ஏற்படக்கூடிய எந்த ஒரு நிலையையும் எதிர்நோக்க இலங்கை தயாராக இருக்கின்றது.

**- ரஞ்சன் விஜயரத்தின வீரகேசரியில்**

ஜனநாயக வழியில் சமூக நீதியை நிலைநாட்ட முடியுமென்பதை நிருபிக்க முயற்சி செய்கிறேன்.

**- பிரேமதாசா வீரகேசரியில்**

கடந்த வருடங்களில் இலண்டனில் அகதிகள் வருகை கிட்லர் காலத்தில் ஜேர்மனியில் இருந்து வருகை தந்ததைப்போல் பல மடங்காகும்.

**- பி.பி.ஸி.யில் கில்ரேய் சிங்க்**

இந்தியாவின் புதிய பிரதமர் எஸ். சந்திரசேகர் தலைமையிலான அரசாங்கத்துடன் நல்லுறவு வளர்க்க இலங்கை அரசு நடவடிக்கை எடுக்கும்.

**- ரஞ்சன் விஜயரத்தின வீரகேசரியில்**

**நிருபர்:** நீங்கள் ஒரு முதல்த்தர கதாநாயகியாக இருந்து கொண்டு "வளர்மதி" என்ற புதுப் படத்தில் நீச்சல் உடையில் நடித்திருப்பதாக அந்த டைரக்டரே சொன்னாரே?..

**நடிகை-** ஐயையோ அப்படின்னா நான் நிர்வாண நிலையில் நடித்த காட்சியை வெட்டிவிட்டார்களா?

---

இலங்கைத் தமிழரின் உயிரையும் உடமையையும் பாதுகாக்க வழி தெரியாத பிரதமர் வி.பி. சிங்கும், முதல்வர் கருணாநிதியும் சிங்கள இராணுவத்திடமிருந்து இந்தியத் தமிழரைக்கூடக் காப்பாற்றத் துப்புக் கெட்டுப் போனார்கள் என்பது நிதர்சனம்.

**-நக்கீரன் 19.9.90**

தமிழர் - முஸ்லீம் மக்கள் இடையே பிளவை ஏற்படுத்த அரசு முயல்கிறது.

**- வாசுதேவ நாணயக்கார**
**வீரகேசரியில்**

வடக்கு- கிழக்கு இணைப்பை நிரந்தரமாக்குவது சாத்தியமாகாது.

**- மன்சூர் வீரகேசரியில்**

நாட்டின் பிரதான கட்சிகள்... இனவாத அரசியலையே தொடர்ந்தும் பின்பற்றுவதா?

**- சுரேஷ் பிரேமச்சந்திரன்**
**வீரகேசரியில்**

கிழக்கில் 100 வீதம் எமது கட்டுப்பாட்டில்! யாழ். 15 வீதம்,மன்னார் 20 வீதம், முல்லைத் தீவு 10 வீதம்!

**- ரஞ்சன் விஜேயரத்தின**
**வீரகேசரியில்**

www.tamilarangam.net

# ஆணவம்

**(உவமைக் கதை)**

ஆலயம் ஒன்றில் இறைவனுக்காக அகல் விளக்கு ஒன்று எரிந்து கொண்டிருந்தது. திடீரென அந்த விளக்கின் கொள்கலம் வீறுப்புடன் பேச ஆரம்பித்துவிட்டது. "என்னையும், விளக்குத் திரியையும் தாங்கி நிற்பவன் நானல்லவோ, நானில்லாவிடில் எப்படி ஒளி கிடைக்கும்".

இதனைக் கேட்டுக் கொண்டிருந்த எண்ணெய்க்குக் கோபம் வந்து விட்டது. கொள்கலத்தைப் பார்த்து " நீ என்னைத் தாங்கியிருந்தாலும் உனக்கும் விளக்குத்திரிக்கும் இடையில் நான்தானே பிரதானமானவனாக இருக்கிறேன். நான் இல்லாவிடில் நீயோ அல்லது விளக்குத் திரியோ எப்படி ஒளியைக் கொடுக்க முடியும்" என்று சற்றுக் கோபத்துடன் கேட்டது.

இவற்றைக் கேட்டுக் கொண்டிருந்த விளக்குத் திரியானது தனது முக்கியத்துவத்தைத் தெரியப்படுத்தாவிடில் மற்றவர்கள் மிஞ்சிவிடுவார்கள் என்று, தானும் கூறலாயிற்று. " கொள்கலமானாலும் சரி எண்ணெயானாலும் சரி நான் இல்லாவிடில் நீங்கள் இயங்கிப் பிரயோசனம் எதுவும் இல்லை. எம்மூவரில் நானே பெரியவன், உங்கள் விதண்டா வாதத்தை விட்டு நான் சொல்வதைக் கேட்டு இயங்குங்கள்" என்று தனது வாதத்தை முடித்து நெஞ்சை நிமிர்த்தி நின்றது.

திடீரெனப் பெரும் காற்று ஒன்று அகல் விளக்கில் மோதியது. கண் இமைக்கும் நேரம்தான், காற்று விளக்கின் ஒளியை அணைத்தது. சில நிமிடங்கள் ஆலயத்தினுள் மயான அமைதி. எங்கிருந்தோ ஒரு கை வந்து திரியில் ஒளியை ஏற்றியது.

கொள்கலமும் எண்ணெய்யும், விளக்குத் திரியும் ஒருவரை ஒருவர் பார்த்து ஆணவம் அகன்ற நிலையில் " நாம் மூவரும் ஒன்றிணைந்து இயங்கினாலும் எம் மூவரையும் விட மேலான ஒரு சக்தி எம்மை இயக்குகின்றது" என்ற ஒருமித்த மன நிறைவுடன் ஒன்றிணைந்து இயங்கின.

*மு.சிவராஜா*



**நண்பன்-** என்ன மச்சான் நாளைக்கு கல்யாணம்நீ இஞ்சை சோகமாய் இருக்கிறாய்?......

**மற்றவர்-** இல்லையடாப்பா... அவள் பெட்டை போய் இயக்கத்திலை சேர்ந்திட்டாளாம். இரண்டு இலட்சம் காசும், 10 பவுண் நகையும் சீதனமாய் கேட்டனான் அதுதான் பயமாய்க் கிடக்கு அவள் நாளைக்கு துவக்கோடை இஞ்ச வரப்போறாள்?....

www.tamilarangam.net

# நடிகை ரேவதியுடன் எமது உதவி ஆசிரியர்

கடந்த முதலாம் திகதி நாட்டிய நிகழ்ச்சிக்காக இலண்டன் வந்திருந்த பிரபல நாட்டிய நாயகியும், மண்வாசனை மூலம் அறிமுகமாகி அஞ்சலி வரை கிட்டத்தட்ட 60 படங்களுக்கு மேல் கதாநாயகியாக நடித்துப் பிரபல்யம் அடைந்திருக்கும் நடிகை ரேவதி அவர்களைச் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. பிரான்ஸ், கனடா ஆகிய நாடுகளிலும் தனது நாட்டிய நிகழ்ச்சியை நடாத்தியுள்ளார். ரேவதி அவர்கள் அஞ்சலி படத்தின் நடிப்பின்மூலம் எல்லோருடைய கண்களிலும் கண்ணீரை வரவழைத்தவர், சிரித்தமுகத்துடன் பேட்டிக்கு தயாராகிறார். அந்த பிரபல நடிகையா இவர் என்ற எண்ணத்துடன் கேள்விகளைத் தொடுக்கின்றேன்.

**கேள்வி** வணக்கம் ரேவதி அவர்களே

**பதில்** வணக்கம்

**கேள்வி** நீங்கள் முதல் முதல் அறிமுகமாகிக் கதாநாயகியாக நடித்த படம் பாரதிராஜாவின் மண்வாசனை. அந்தப் படத்தில் நடிக்கும் சந்தர்ப்பம் உங்களுக்கு எப்படிக் கிடைத்தது.

**பதில்** அப்ப நான் இறுதியாண்டு படித்துக் கொண்டிருந்தேன். அந்த நேரத்தில் என்னோட பரத நாட்டியப் படங்கள் சில சஞ்சிகைகளில் வெளியாகியிருந்தன. அந்த நேரத்திலே பாரதிராஜா அவர்கள் புதுமுகங்களை தேடிக் கிட்டிருந்தாரு, அப்போ அவர் இந்தப் படங்களைப் பார்த்திட்டு என்னைத் தொடர்பு கொண்டு நடிக்கும்படி கேட்டாரு. அதன்மூலம்தான் நடிக்கத் தொடங்கினேன்.

**கேள்வி** நீங்கள் முதன் முதல் அதுவும் ஒரு பிரபலமான டைரக்டரின் படத்தில் நடித்த போது உங்களது அனுபவம் எப்படி இருந்தது?

**பதில்** எனக்குப் பயமா ஒன்றும் இருக்கலே, ஏனென்னா நான் சினிமாவில நடிக்க வேண்டும் என்று இருக்கல. டைரக்டர் சொன்னதை அப்படியே நடிச்சேன். எனக்கு ஆர்வமாயும் மனத்திருப்தியாயும் இருந்தது ஆனபடியாலே அப்படியே நடிப்பைத் தொடர்ந்தேன்.

**கேள்வி** நீங்கள் நாட்டியத் துறையில் சிறந்து விளங்குகிறீர்கள். உங்களது நடிப்புத் துறையில் விதத்தில் நாட்டியத்துறை உதவி புரிகிறது?

**பதில்** நாட்டியத்தைப் பொறுத்த மட்டில் அங்க அசைவுகள் சரியான நேர அமைவுகள் இருக்கு. ஆனா அது அவ்வளவா நடிப்புத்துறையில் ஒன்னும் உதவிபண்றதில்லே. பாட்டுக் கட்டங்களின் அமைவில் கொஞ்சம் உதவியா இருக்கும்.

**கேள்வி** நீங்கள் கூடுதலாக விரும்புவது அதாவது ஆத்ம திருப்தியைத் தருவது நாட்டியமா? நடிப்பா?

**பதில்** எனக்கு இரண்டும் பிடிக்கும்.

**கேள்வி** திருமணம் முடித்த பின்னர் நடிக்க வரமாட்டேன் என்று கூறியிருந்தீர்கள். ஆனால் பின்னர் மீண்டும் நடிப்புத்துறைக்குள் வந்த காரணம்?

**பதில்** காரணம் வந்து பெரிசா ஒன்னும் இல்லே. முதல்ல நடிக்கக் கூடாது என்று முடிவெடுத்திருந்தேன். பின்னர் மீண்டும் நடிக்க வேண்டும் என்று முடிவெடுத்தேன். தனிப்பட்ட முறையிலே எனக்கு என்னைப்பற்றி முடிவெடுக்க சுதந்திரம் இருக்கு அவ்வளவுதான்.

**கேள்வி** உங்களது நடிப்பைப் பற்றி உங்களது கணவர் ஏதாவது கருத்துக்கள் கூறுவாரா?

**பதில்** அநேகமாக அம்மா, அப்பா, கணவர், நண்பர்கள் எல்லோரும் கலந்துரையாடுவோம். அப்போ எனது நடிப்பைப் பற்றிக் கருத்துக்களைச் சொல்வாங்க. அதை நான் வரவேற்கின்றேன். ஏனென்னா என் நலத்திற்குத் தானே சொல்றாங்க.

**கேள்வி** நீங்கள் கங்கை அமரன் குழுவின் நிகழ்ச்சிகள் சிலவற்றில் கலந்து கொண்டு அவருடன் பாடல்கள் பாடியிருக்கிறீர்கள். குரல் வளம் நன்றாகவே இருந்தும் ஏன் நீங்கள் சினிமாவில் பாடக்கூடாது?

**பதில்** அது வந்து சும்மா வேடிக்கைக்காக அவங்களோடை சேர்ந்து பாடினேன் அவ்வளவுதான்.

**கேள்வி** நீங்களும் உங்களது கணவரும் சேர்ந்து ஏதாவது படம் இயக்க வேண்டும் என்ற எண்ணம் உண்டா?

**பதில்** படம் தயாரிக்கலாம் ஆனா இப்போ தைககுப் பண்யதில்லே. ஆனா ஏற்கனவே டெலிவிஷன்தொடர்ஒன்னுபண்ணியிருக்கோம். "இரவில் ஒரு பகல்". அது ஏற்கனவே டெலிவி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஷனிலே ஒளிபரப்பாச்சு. அதில என் கணவரு க்குச் சிறந்த தொலைக்காட்சித் தயாரிப்பாளரு க்காகவும், எனக்குச் சிறந்த தொலைக்காட்சி நடிகைக்காகவும் பரிசு கிடைச்சுது.

**கேள்வி** திரைப்படத்துறையில் உள்ளவர்களைப் பற்றி பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் பல விதமாக எழுதுகிறார்கள். இது உங்களது வாழ்க்கையில் ஏதாவது பாதிப்பை ஏற்படுத்தியிருக்கிறதா?

**பதில்** இல்லை. பாதிப்பு இருக்காது. ஆனா நான் அப்படியான எந்த அர்த்தமற்ற செய்திகளையும் கருத்தில் எடுப்பதில்லை. நான் நேரடியாகவே பத்திரிகை ஆசிரியருடனோ அல்லது கடிதமூலமோ தொடர்பு கொண்டு மன்னிப்புக் கேட்கச் சொல்வேன். அவங்க பொதுசன சேவை ஆட்களா இருக்கலாம். ஆனா எதுக்கும் ஒரு எல்லையிருக்கு. அதுக்கு மேல போனா நான் அமைதியா இருக்க மாட்டன்.

**கேள்வி** உங்களுக்கு இதுதான் முதல் இலண்டன் விஜயமா?

**பதில்** இல்லை. இதற்கு முன்னாலை இரண்டு மூன்று தரம் விடுமுறையில வந்திருக்கிறன். ஆனா நிகழ்ச்சிக்காக வந்தது இது தான் முதற் தடவை.

**கேள்வி** நீங்கள் உங்களது நடிப்புத்துறையை ஒரு கால எல்லை வைத்து அத்துடன் சினிமாவுக்கு முழுக்குப் போடவேண்டும் என்றோ அல்லது ரசிகர்கள் விரும்புமட்டும் நடித்துக்கொண்டே இருக்க வேண்டும் என்று விரும்புகிறீர்களா?

**பதில்** அப்படியொன்றுமில்லை. ஆனா நான் ஏற்கனவே எனது பாத்திரங்களைத் தெரிவு செய்துதான் நடிச்சுக்கிட்டுவாறன். இப்ப இன்னமும் படங்களைக் குறைத்திருக்கிறன். அதாவது வருடத்திற்கு ஆறு படங்கள் சில வேளைகளில் இனிவரும் காலங்களிலே இரண்டு மூன்று படங்களாயும் குறைக்கலாம். ஏனென்னா எனக்கு நாட்டியத்திற்கு நேரம் தேவைப்படுது. அதோடை என்னோட குடும்பத்தோடையும் கொஞ்சம் நேரத்தைச் செலவழிக்க விரும்புறன்.

**கேள்வி** டைரக்டர் மணிரத்தினத்தின் இரு படங்களில் நடித்திருக்கிறீர்கள். அவருடைய டைரக்ஷனில் ஏற்பட்ட அனுபவம் பற்றி?...

**பதில்** அவர் வந்து ஒரு வித்தியாசமான டைரக்டர். அவரோட படத்தில நடிக்கும் போது அவர் ஒரு டைரக்டராகவே பழகிறதில்லை. நண்பராகத்தான் பழகுவாரு. அதோடை அவர் எங்களுக்கு கூடுதலாக சுதந்திரம் தருவாரு. அதனால நாங்களும் கூடுதலாக யோசிச்சு நடிக்கவேண்டியிருக்கும். அதோடை புதுப்புது எண்ணங்களையும் போட்டு நடிக்க வேண்டியிருக்கும். அதனால நாங்க அந்தப் பாத்திரங்களோடை ஒன்றிவிடுவோம்.

**கேள்வி** "அஞ்சலி" படம் முற்றிலும் வேறுபட்ட கதையம்சம் கொண்ட ஒரு படம். இந்தப் படத்தில நடிக்கும் போது உங்களுக்கு ஏதாவது பாதிப்பை இந்தப் பாத்திரம் ஏற்படுத்தியதா?

பதில் ஆமா. இந்தப் படத்தில நடிக்கும்போது எனக்கு கொஞ்சம் மனசுக்குள்ள தாக்கமா இருந்தது. ஏனென்னா உண்மையாக வேறு பாதிக்கப்பட்ட சில குழந்தைகளையும் நாங்கள் பார்த்தோம். ஆனா இந்தப் படத்தின் மூலம் எனக்குக் கொஞ்சம் படிப்பினைகளையும் கற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்தது.

**ஏசு** இவ்வளவு நேரம் சிரமம் பாராமல் பேட்டியளித்ததற்காக அலை ஓசை சார்பிலும் வாசகர்கள் சார்பிலும் நன்றி கூறி விடை பெறுகின்றேன். வணக்கம்.

***"அலை ஓசை" சார்பில் நடிகை ரேவதியைப் பேட்டி கண்டவர் எமது உதவி ஆசிரியர் சி. கு. ஏசுராசம்.***

---

இலங்கையில் இருந்து இடம்பெயரும் அகதிகளை இலண்டனில் பி. பீ. சி நிறுவனம் பேட்டி கண்டு அந்நிகழச்சியை டிசம்பர் மாதம் (20, 12, 90) இருபதாம் திகதி மாலை மணிக்கு பி. பீ. சி 2வில் ஒளிபரப்ப உள்ளனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மனிதம்

- ஏறுவூர் தாஹிர்

தமிழரென்றும், முஸ்லிமென்றும்
தரணியிற் பிறப்பினும்.
பேசு மொழி ஒன்று1, தொழில்
செய்யு முறை ஒன்றுதான்

காலிரண்டு; கையிரண்டு,
கண்களு மிரண்டுதான்!
உள்ளமொன்றிருக்கும், போது
உதிப்பதேனோ பிரிவினை?

இந்துவென்றும் இஸ்லா மென்றும்
இரண்டு கூறுயாகி நாம்
சிரித்து வாழும் வழி மறந்து
சிக்கல்களைக் குவிப்பதா?

'மனிதன்,என்ற வரையறைக்குள்
மாந்த ரெல்லாம் கூடினால்
புனிதராக வாழலாமே!,
புவியும் நன்றாய் ஆகுமே!

பிறக்கும் போது வேற்றமைகள்
எம்மிடத்தி லிருந்ததா?
பிறர் கருத்தைக் கேட்ட பின்பே
"சமுகம்" என்று ஆயினோம்!

கிழக்கிலுங்கைச் சரித்திரத்தைக்
கீழ்நோக்கிப் புரட்டினால்,
தலைமுறைக்குத் தலைமுறைக்குத்
தலைமுறைக்கு முந்தி நாம்,
தந்தை-தனயன், அண்ணன்-தம்பி,
மாமா-மாமி உறவுடன்
மகிழ்ச்சியாகக் கூடிவாழ்ந்து,
குதூகலித்த கதைகளைச்
சரித்திரமும் புரட்டிடும்
சான்றோர்களும் கூறுவர்!
தமிழரென்ற முஸ்லிமென்ற
தடுப்புக்களை நீக்கினால்
தரணி போற்ற வாழாலாமே!
தலைநிமிர்ந்தும் திரியலாம்!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சட்டமும் சிரிக்கும்

## மயிரையா புடுங்கும்?

வழக்காளியோ பரம ஏழை. வழக்கோ மிகவும் பலவீனமான வழக்கு. கனம் காத்திரமான சட்டத்தரணியின் உதவியைப் பெறவேண்டுமாயின பணம் தேவை. எனவே அவன், தமிழ மூலம் சட்டம் படித்துச் சட்டத்தரணியான ஒருவரின் உதவியை நாடினன். அந்தச் சட்டத்தரணி தன்னால் இயன்றவரை வாதாடினர். எதிராளிக்காக ஏறபட்ட வழக்குரைஞர் ஆங்கில வழக்குகளை ஆதாரம் காட்டி, அழகாக ஆங்கிலத்திலும் அழகுகெடாமல் தமிழிலும வாதாடினர். தமிழ்மூலச் சட்டத்தரணி இடைக்கிடை ஆங்கிலத்திலும் பேசமுயன்றார். ஆனால் ஆங்கிலம் **No Come** என்று விட்டது.

வழக்கு, இளஞ்சட்டத்தரணிக்குப் பாதகமாகத் தீர்க்கப்பட்டது. வழககாளிக்குப் பெரியகவலை. பென்சாதியில் தோடுகள் இரண்டை அடைவு வைத்துத்தான சட்டத்தரணிக்குப்பணம் கொடுத்திருந்தார் அவர். எனவே, அவன், என்ன ஐயா எலலாம் கூழாய்ப்போச்சே. இந்தக் கடலிலே இருந்து இனி எப்ப மீளுறது என்று அழாக்குறையாகச் சொன்னன். சட்டத்தரணி, வழக்காளியைச் சாந்தபபடுத்த விரும்பியவராய்த் தத்துவஞானம ஒன்றை உதிர்த்தார். நீதிமன்றத்தில் ஆங்கிலம் வர மறுததென்றாலும், இந்தத் தததுவஞானத்தையாகுதல வழக்காளியிடம் ஆங்கிலத்தில் அடித்துச்சொல்ல விரும்பினர். உடனே வழககாளியைப பார்த்து **Don't worry man; if the time and period are good what will poverty do; will it pull the hair.**

அவர் தமிழில் யோசித்து ஆங்கிலத்தில் சொன்னர். அவர் சொல்ல நினைத்தது இதுதான் கவலைப்படாதே அப்பா. நேரகாலம் நல்லாயிருந்தால் வறுமை என்ன செய்யும். மயிரையா புடுங்கப்போகிறது.

## கோட்டிலே மீன்பிடித்தார்

சாதி இரண்டொழிய வேறில்லை என்று அவ்வையார் பாடினலும், யாழ்ப்பாணததார் குலத்தளவேயாகும் குணம் என்ற சொற்களை மறக்கத் தயாராக இல்லை. சாதி பாராட்டும் குணம் சில கோட்டடிக்கும் வந்து விடுகின்றது.

மீனவர் குலத்தைச் சேர்ந்த ஒரு நீதிபதியின், முன்னர் ஒரு குற்ற வழக்கு விளக்கத்துக்கு வந்தது. எதிரியின் சார்பில் ஏற்பட்ட வழக்கறிஞர் ஒரு கீர்த்தி வாய்ந்த வழககறிஞர். அவருக்கும் அந்த நீதிபதிககும் பன்னிரண்டு பொருந்தவே பொருந்தாது. அவருடைய ஆற்றலை நம்பித் துணிச்சலுடன் கொலை செய்து விட்டு, நம்பியபடியே கொலைக் குற்றச் சாட்டிலிருந்து விடுதலை செய்யபபட்டவர்களும் உண்டு. அந்த வழக்கறிஞர் மற்றப் பக்கத்துச் சாட்சிக்காரரைக் குறுக்கு விசாரணை செய்து கொண்டிருக்கிறார். சாட்சியோ சிறுங்காமல் மறுமொழி சொல்கிறான் மடங்க மறுக்கிறான். வழக்கறிஞர் தமக்கு வேண்டிய மறுமொழியைச் சாட்சிக்காரரிடமிருந்து பெறுவதற்காக, ஒரே வினவை, வெவ்வேறு போர்வைகளில் கேட்டுக் கொணடிருக்கிறார். இதை அவதானித்த நீதிபதி, அந்த வழக்கறிஞரை நோக்கி அனுபவப்பட்ட உமக்கு நான் புத்திசொல்லவேண்டியதிலலை. ஒரே கேள்வியைத திரும்பத் திரும்பக் கேட்பதில் அர்த்தமில்லை என்றார். வழக்கறிஞருககு இக்கூற்று சுட்டு விட்டது. அவர் ஒரு நக்கல் சிரிப்புச் சிரித்த வாறே பிரபு நீங்கள் என்னைத் தவறுகப்புரிந்தவிட்டீர்கள். ஒரே கேள்வியை நான திருப்பித் திருப்பிக் கேட்பதாகக் கூறினலும், அவற்றுக்கிடையே ஒரு நுண்ணிய வேறுபாடு இழையோடுகிறது. எப்படியென்று கேட்டால், பரவைக்கடல் மீனபிடிக்கும், ஆழ்கடல் மீன்பிடிக்கும இடையிலான வேறுபாடு போன்ற ஒரு நுண்ணிய வேறுபாடு, இரண்டும் மீனபிடியே என்றாலும் இவற்றுக்கிடையே வேறுபாடு உண்டு. இந்தத் தொழிலைச் செய்பவர்கள் தான் இந்த நுண்ணிய வேறுபாட்டை உணர்ந்து கொள்ளமுடியும். சட்டத்துறையில் ஆற்றல் பெற்ற நீங்கள் இப்போ தாகுதல் எனது கேள்விகள் ஒரே கேள்வியல்ல என்பதைப் புரிந்து கொள்வீர்கள் என நம்புகிறேன் என்றார். நீதிபதிக்குப் புளிப்பற்றிக் கொண்டுவந்தது. அவர் அவருக்கே உரிய பாணியில் செருமியபடி, **come on Ponna, go ahead, don't waste my time.** என்றார்.

செ.சிறீக்கந்தராசா BSc LLM

www.tamilarangam.net

# எரிக்க முடியாத நிஜங்கள்

- சீர்மாறன் -

அப்பா, நேற்று ஆஸ்பத்திரிக்குப் போகாதது "உலக அதிசயங்களில் ஒன்றுதான்"- கண்மணி சிரித்துக்கொண்டே சொன்னாள்.

எந்தக் குண்டுவீச்சென்றாலும், எவ்வளவு "ஷெல்" அடி விழுந்தாலும், காரில் போகமுடியாத சந்தர்ப்பங்களில் எல்லாம் தன்னுடைய "பச்சை நிற சைக்கிளில் " மேலே "ஹெலி" வருகிறதா? "பொம்பர்" வருகிறதா? "ஷெல்" விழுகிறதா? என்று பார்த்து பார்த்து ஆஸ்பத்திரிக்குப் போய் விடுவார். ஆஸ்பத்திரியும் நோயாளிகளும் தான்.... முதல் மனைவி. நான் இரண்டாம் தாரம் என்று பார்வதி அடிக்கடி கிண்டல் பண்ணுவாள். இன்று மீண்டும் புறப்பட்டார்

முப்பதாண்டு தாம்பத்தியத்தில் இவரைப் பற்றியநுணுக்கங்கள் நிறைவுகள் குறைகளையெல்லாம் நன்கு தெரிந்து வைத்திருந்த படியால், இவர் எங்காவது புறப் படும்போது அதுவும் விடியற்காலையில் முதன்முதலாக வீட்டை விட்டு வெளியேபோகும்போது "எங்கே....போறீங்கள்?" எப்போ வருவீங்கள்" என்று கேட்பதெல்லாம் அபசகுனம் என்று பேசுவார் என்று தெரிந்தும் மழைமாதிரி "ஷெல்" "டும், டும் "என்று விழுகிறதையும், இயந்திர துப்பாக்கி வேட்டுகளுக்கு யார் தான் பயப்படமாட்டார்கள்?

அவனவன், தான் தன் பெண்டாட்டி, தன்பிள்ளை, என்று அலையும்போது, இவர் மட்டும், நான்கு பெண்பிள்ளைகளையும் தன்னையும் விட்டு விட்டு அப்படியென்ன ஆஸ் பத்திரி வேண்டிக்கிடக்கு? என்று மனதுக்குள் கொதித்துக்கொண்டு- "ஏன்.... போறீங்கள்? இன்றைக்கு?" என்று கேட்டாள். வெளியில் நிலைமை "அவ்வளவுக்கு" மோசமாக இருப்பதால், இவள் கேட்பதிலும் ஒரு நியாயம் இருக்கத்தான் செய்கிறது? -என்று இன்று வழமைபோல கத்தவில்லை! பாயவில்லை!

"....பார்வதி...." இரண்டு நோயாளிகளின் நிலைமை மோசமாக இருந்தது நேற்றைக்கு வேறு... என்றால் போகமுடியவில்லை...." என்று சமாளித்துக் கொண்டு நான் பன்னிரண்டு மணிக்கு முதல் வந்துவிடுவேன், அதற்குள் ஏதேனும் ஷெல் பிரச்சனை என்றால், நீ பிள்ளைகளையும் கூட்டிக்கொண்டு மகளிர் கல்லூரி அகதிமுகாமிற்குப் போ... நான் ஆஸ்பத்திரியிலிருந்து எப்படியும் வந்துவிடுவேன், என்று, தன் நான்கு பிள்ளைகளையும் என்றுமில்லாதவாறு கட்டிப்பிடித்து கொஞ்சிவிட்டு, புறப்பட்டார்.

ஆங்காங்கே வழிநெடுகிலும் துப்பாக்கிச் சூடுகளும் ஷெல் அடியும் கேட்டாலும்,
குச்சொழுங்கைகளுக்குள்ளாலும் வீடுகளின் வளவுகளுக்குள்ளாலும் ஆஸ்பத்திரியின் பின் மெயின் வாசலுக்குள்ளால் உள்ளே நுழைந்தபோது, வழமையை விட, மயானம் போல் அமைதியாக இருந்தது ஆஸ்பத்திரி. நேராக அதி விசேச சிகிச்சைப் பகுதிக்குப் போனார். வழமையாகக் காலைவேளையென்றால் இரவு கடமை முடிந்து போக, பகல் நேர தாதிமார் பொறுப்பேற்று நோயாளிகள் அனைவரையும் எழுப்பி முகம் கழுவி ஆடைகள் மாற்றி, ஒரே சுறுசுறுப்பாகவும் கலகலப்பாகவும் நிற்பார்கள். இன்று மூன்றே தாதிமார் தான் இரவு பூராவும் வேலை செய்தார்களா? அல்லது பயத்தில் கண்மூடாமல் இருந்தார்களா? தெரியவில்லை- கண்கள் சிவந்து முகம் காய்ந்து தலையும் சற்று கலைந்திருந்தது. இவரைக்கண்டதும்இரண்டு தாதிகள் "விம்மி" அழவே தொடங்கிவிட்டார்கள்.

கல்யாண சுந்தரத்தார் நேற்று, மிகவும் அதிசயமாக வராததால், நேற்றுமாலை ஆஸ்பத்திரியில் நடந்த அனர்த்தனங்கள் ஒன்றுமே தெரியாது! திடீரெனப் படைபோல் நுழைந்த இராணுவம் எந்த வித விசாரணையோ கேள்வியோ மனிதாபிமானமோ இல்லாமல் போர்க்காலத்தில் எதிரிகளைக் கண்ட இடத்தில் கொன்று விட்டதுபோல், நோயாளிகள், உறவினர்கள் என்றும் பாராமல், கண்டபடி சுட்டுப்பொசுக்கியிருந்தது.

இந்த மூன்று தாதிமாருக்குக் கூட உண்மையில் என்ன நடந்ததென்று இன்னும் தெரியாது! கடந்த பதினொரு நாளாக நடைபெறுகின்ற உக்கிரப் போரினதும் வன்முறையினதும் உச்சக்கட்டம் நேற்று! காலையிலிருந்து "ஷெல்" தாக்குதல்களும் "ஹெலி"யிலிருந்து இயந்திரத் துப்பாக்கிப் பிரயோகமும், "ஷெல்" போடுதலும், "பொம்பர் தாக்குதலும், விடியற்காலை ஆறரை மணிபோல் வைத்திய சாலையின் இடதுபுற மூலையில் உள்ள தாதிமார் பயிற்சி நிலையத்தின் விடுதியின் கூரையில் பாரிய "ஷெல்" ஒன்று விழுந்து முழுக் கூரையுமே தரையிறங்கியது. நல்லவேளை மாணவ தாதிகள் கீழ் மாடியில் இரவு தூங்கியதால் "மயிரிழையில்" உயிர்தப்பினார்கள். உடுத்திருந்த உடுப்புக்களோடு "கியோ" "முயோ" என்று ஓடி வேறு விடுதிகளில் தஞ்சம் புகுந்தார்கள்.

எட்டரை மணிபோல் மீண்டும் ஒரு "ஷெல்" "எட்டாம் வாட்டுக்குள்" வீழ்ந்து கூரை இடிந்து வீழ்ந்து மூன்று நோயாளிகள் ஸ்தலத்திலேயேகொல்லப்பட்டு, நாற்பதுக்கும் மேல் காயப்பட்டதும், அதன்பின்பு தான் அங்கு அன்று கடமையிலிருந்த அனைவரும் மனம் சோர்ந்தார்கள். இன்று ஏதோ விபரீதம் அந்த ஆஸ்பத்திரிக்குள் நடக்கப்போகிறது. அதற்கான அறிகுறிகள் தான் இவை என்று பயந்தார்கள்.

தாறுமாறான "ஷெல்" இன் சத்தங்களும் பொம்பர்களின் இரைச்சல்களுமே காதைக் குடைந்தது. இவ்வளவுக்கும் நான்கு வருடங்களாக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நடை பெறுகின்ற இராணுவ அடவாடித் தனங்களுக்காக, ஆஸ்பத்திரியின் கூரை எங்கும் "சிவப்பு சக குறி" போடப்பட்டிருக்கிறது. எல்லோருமே, அந்த பாதுகாப் பான கட்டிடத்திற்குள் ஒன்றடி மன்றடியாக நெருக்குப்பட்டும்இடிபட்டுக் கொண்டும் ஆட்டு மந்தைக்கூட்டம்போல், ஒருவருக்கொருவர் துணையாகவும் ஆறுதல் சொல்ல முடியாமலும் என்னே பரிதாபமான நிலை.

பிறந்தமண்ணில், சொந்தஊரில், அதுவும் ஒரு பொது ஆஸ்பத்திரிக்குள் நோயாளிகள் தாதிகள் ஊழியர்கள் டாக்டர்களின் பரிதாபமான நிலையைப் பாருங்களேன். இப்படி வேறு எந்த நாட்டிலாவது நடக்குமா? இடிமுழக்கம்போல் திடீரென்று புகுந்த இராணுவம் கண்டபடி கேட்டுக்கேள்வியின்றி சுடுவது? அங்கிருந்து வெளியிலோ, வெளியிலிருந்து உள்ளேயோ யாரையும்போகவிடாமல் காவல் வேறு புரிந்து, இதோ, அந்த மெயின் வாசலிருந்து வந்தால் இடதுபுற நடைபாதையில் செத்த பிணங்கள் ஆங்காங்கே சிதறிக்கிடக்கின்றன. .....ஐயா.....நேற்று...மாலை...வைத்தியர்கள் விடுதியில்....இராணுவம் சுட்டுச் சத்தம் கேட்டது...என்ன நடந்தது என்று இன்னும்... எங்களுக்குத்...தெரியாது...!

ஆனால் நேற்று மாலையின் பின்பு. டாக்டர்கள், தாதிகள், ஊழியர்கள்யாரையுமே...காணவில்லை.... வழி நெடுங்கிலும்... ஆங்காங்கே ஊழியர்களினதும்..நோயாளிகளினதும் கொலை செய்யப்பட்ட பிணங்கள் கிடக்கின்றன..." என்று சொல்லவே அவர்களுக்கு நாத்..தழுத்தது, தொண்டை கரகரத்தது.

கல்யாண சுந்தரத்துக்கு, கற்பனையில் யாரோ மனநோயாளி கதை சொல்வது போலிருந்தது! இதென்ன பைத்தியகாரத்தனம் என்றார். இந்த 35 வருட வைத்திய நிபுணர் சேவையில் இங்கிலாந்தில் கூட ஏழு வருடம் இருந்திருக்கிறார். உலகின் பல நாடுகளிலும் பல பிரச்சனைகளைப்பற்றியும் போராட்டங்கள் பற்றியும் கேள்விப்பட்டிருக்கிறார், அறிந்திருக்கிறார், வாசித்திருக்கிறார்.

ஆனாலும் இதுதான், வாழ்க்கையிலே முதல்தடவையாக, அதுவும் ஒரு. ஆஸ்பத்திரிக்குள் வைத்து, அதுவும் மக்களைக்காக்க வென்று வந்த இராணுவம் சுட்டிருக்கிறார்கள் என்று கேள்விப்பட்டு அதிர்ந்து போனார்.

இவருடைய மனசில் ஏற்பட்ட வெறுமைக்கும் வெறுப்புக்கும் வார்த்தைகள் இல்லை. ஆனால் இன்னும் அவர் நம்பவில்லை.

"என்னது? ஆஸ்பத்திரிக்குள் சுட்டிருக்கிறார்களா? யாரைக் கேட்டு அவர்கள் உள்ளே வந்தார்கள்? நான் நினைக்கவில்லை சுட்டிருப்பார்கள் என்று? பணயக்கைதிகளாக வைத்திருப்பார்களாக்கும் வாருங்கள் நாம் போய் மனிதாபிமாக எமது நிலையைச் சொல்வோம் அவர்கள் விடுவிடுப்போம் என்றதும்

இவருடைய சுயநலமில்லாத முயற்சி, துணிச்சல், உறுதி தாதிகளை திகைக்கவைத்தது, அவர்களுக்கும் இழந்த நம்பிக்கை மீண்டும் வந்தது.

கல்யாணசுந்தரம் தலைமையில் மூன்று தாதிகள் சமாதான தூதுவர்களாக இறந்தவர்களையும் இறந்துகொண்டிருப்பவர்களையும் சிறைமீட்கப் புறப்பட்டது.

வழிநெடுகிலும் ஆங்காங்கே இறந்துகிடந்த ஊழியர்களையும் நோயாளிகளையும் கண்டதும் சரஸ்வதிக்கு பயம் கவ்விக் கொண்டது கால்கள் நடுங்கி நடக்க மறுத்தது. "பயப்பட வேண்டாம் நாம் டாக்டரும் தாதிகளும் தானே அதுவும் நிராயுதபாணிகளாக சமாதானத்தூதுவர்களாக நியாயம் கேட்கப் போகிறோம் வாருங்கள் என்று மனதில் நல்ல எண்ணமும் தூய்மையான நோக்கமும் இருந்தபடியால் முன் வைத்த காலை பின்வைக்காமல் முன்னுக்குப்போனார்.

இந்த நெடுபாதையின் முடிவில் வலதுபுறம் திரும்பி பின்பு இடதுபுறம் திரும்பினால் ஒரே கும் மிருட்டு. ஒருவருக்கும் தங்கள் கண்களை நம்பவே முடியவில்லை.

நேற்று வைத்தியம் பார்த்த நோயாளிகள் குழந்தைகள், பெண்கள் இதோ ஒன்பதாம்வாட்டில் கடமைபுரிந்த குறிஞ்சி, மல்லிகா எல்லாம் கண்ட துண்ட மாக சுடப்பட்டு ஒரே பிணக்குவியல் பிணக்காடு.

அந்த பயங்கரமான காட்சியும், பதினாறு மணித்தியாலங்களுக்கு மேலாக தங்கள் தங்கள் இரத்த வெள்ளத்திலேயே இறந்து கிடக்கின்ற பிணங்களிலிருந்து வீசுகின்ற வாடையும் மூக்கைத் துளைத்து வயிற்றைக் குமட்டி கண்கள் இருண்டு மயக்கம் வருவது போலிருந்தது.

செத்துப்போன பிணங்களை காவல்காக்கிற "பேய்" போல் ஒரு இராணுவ சிப்பாய் அதோ மேலே விடுதிக்குப் போகிற மாடிப்படிகளில் தன் துப்பாக்கியை பக்கத்தில் வைத்துக் கொண்டு தூங்கிக் கொண்டிருக்கிறான்.

மணிக்குரல் கேட்டதும், தாம் நேற்று கொன்றவர்கள் தான் எழுந்து பேசுகிறார்களோ? என்று திடுக்கிட்டுவிழித்துக் கொண்டான்.

"ஐயா அதோ சிப்பாய் ஒருவன் காவலுக்கிருக்கிறான் பார்க்கவே பயமாக இருக்கிறது வந்த விஷயத்தை பேசுங்கள்" என்று கற்பகம் இவரின் காதுக்குள் பதட்டத்துடன்முணுமுணுத்தாள்.

கல்யாண சுந்தரமும், இந்தப் பயங்கர கொடுமையான காட்சியைக்கண்டு ஆடிப்-போயிட்டார். குரல் கூட வரமாட்டேன்கிறது. ஒருமாதிரி செருமிக்கொண்டு.

www.tamilarangam.net

நான் டாக்டர் கல்யாணசுந்தரம் இந்த வைத்தியசாலையின் குழந்தை வைத்திய நிபுணர் இவர்கள் கற்பகம், சரஸ்வதி, கோகிலா இங்குள்ள தாதிமார்கள் இது ஆஸ்பத்திரி இங்கிருப்பது டாக்டர்களும் தாதிமார்களும் ஊழியர்களும் நோயாளிகளும் தான் இவர் ஆங்கிலத்தில் நிதானமாக அழகாகச் சொன்னார்.

இங்கு "மனிதர்கள்" யாராக இருந்தாலும் அவர்களை உயிரோடு காணக்கூடாது! உயிர் மனிதர்கள் எல்லாம் எம் எதிரிகள் அவர்களை கொல்லுவோம் இதுதான் எமக்கு இடப்பட்டுள்ள கட்டளை என்பது போல் ,அவர் பேசிக்கொண்டிருக்க, அவன் இந்தப் பேச்சுக்கும் தனக்கும் சம்பந்தமில்லாததுபோல், தன் இயந்திர துப்பாக்கியை உருவிக் குறிபார்த்தான்.

"ஐயோ சுடப்போறான் ஐயோ சுடவேண்டாம்" என்று கற்பகமும் சரஸ்வதியும் அலற "...நோ..நோ..பிளீஸ்டோன்ட்சூட்...வீஆர் இனசன்ற். செவிடன் காதில் ஊதிய சங்குபோலிருந்தது. "படார்படார்" இயந்திர துப்பாக்கி தீப்பொறியுடன் முழங்கியது.

தனக்கருகில் நின்ற சரஸ்வதியையும் கோகிலாவையும் இரு கைகளால்களும் தள்ளி விட்டு, ஐயோ முருகா என்று கொண்டே அந்த ஆலமரம் சரிந்தது. ஐயோ தண்ணி தண்ணி அந்த ஒளி அணைந்தது. மறுநாள் இராணுவ அதிகாரிகள் இறந்தவர்கள் அனைவரையும் வெளியில் எடுத்து, அவர்களுடைய பெயர்கள், விலாசம், இறுதியாக அவர்களிடம் எஞ்சிய உடைமைகள் எல்லாவற்றையும், எஞ்சிய டாக்டர்களையும் தாதிமார்களையும் கொண்டு இனங்கண்டு பதிவு-செய்தார்கள்.

ஆஸ்பத்திரி நிறைய இராணுவ அதிகாரிகளும் சிப்பாய்களும் மூலை முடுக்கெல்லாம் புற்றீசல் போல் குவிந்து போய் நின்றதால், நேற்றைய "படுகொலையில்" எஞ்சிய டாக்டர்களும் தாதிகளும் நோயாளிகளும் அதிர்ச்சியிலும், இனியும் என்ன நடக்குமோ? என்று பயந்து போயும் நடுங்கிக் கொண்டு நின்றார்கள்.

அதற்குள்ளும், சில இரகசிய இராணுவப் பிரிவினர் தாங்கள் அட்டூழியத்தை வெளிஉலகுக்குத் தெரிவிக்கக் கூடிய கண்சாட்சிகள் இருக்கிறார்களா? என்று குறுக்கு விசாரணையில் ஈடுபட்டிருந்தார்கள்.

சிற்றம்பலம் நேற்று உயிர்தப்பிய இன்னுமொரு வைத்தியநிபுணர்.

கல்யாண சுந்தரத்துக்கு மனைவி நான்கு பெண்பிள்ளைகள் இருக்கு அவருடைய இறுதிச்சடங்கில் அவர்கள் கலந்து கொள்வதுதான் முறை. ஆகக் குறைந்தது, அவருடைய பூதவுடலைத் தகனம் செய்ய முன்பு அவர்களுக்கு தெரியப்படுத்துவது தான் நல்லது என்று மிகவும் பணிவாகச் சொன்னார்.

அறுபத்தி ஒன்பது சடலங்களும் அடையாளம் காணப்பட்ட பின்பு ஆஸ்பத்திரியின் பின்புறத்தில் ஒன்றாகக் குவிக்கப்பட்டு இராணுவம் கொண்டு வந்த இரண்டு பீப்பாய் பெற்றோலை ஊற்றித் தீமூட்டப்பட்டது.

அன்று அப்பா வீட்டை விட்டு போனதுமே, நிலைமை இன்னும் மோசமாகியது ஷெல் அடி அகோரமானது. அயலவர்கள் எல்லாம் அல்லோல கல்லோலப்பட்டு அருகிலுள்ள இந்து மகளிர் கல்லூரி அகதி முகாமிற்குள் அகதிகளாக தஞ்சம் புக பார்வதியும் நான்கு பிள்ளைகளையும் கூட்டிக் கொண்டு அங்கே தஞ்சம்புகுந்தாள்.

மறுநாளும் அப்பா வரவில்லை. பிள்ளைகள் மாறிமாறிக் கேட்டார்கள். தாய் சமாதானம் சொன்னாள். மறுநாள் "வதந்தி" வந்தது ஆஸ்பத்திரியில் வைத்திய நிபுணர் கல்யாண சுந்தரம் உட்பட பலர் கொலை என்று. பார்வதி சபித்தாள் பிள்ளைகள் அப்பா அப்பா என்று கதறினார்கள். அந்த அகதிமுகாமே மரணகோலமானது. உண்மையை அறியக் கூட எந்த விதமான வாய்ப்புமில்லாமல் தவித்தார்கள். ஒரு நாள், இரண்டு நாள் என்று ஒன்பது நாளாகிவிட்டது. யாருக்கும் நடந்த உண்மை தெரியாது. டாக்டர் குழு ஒன்று பார்வதியைத்தேடி அகதிமுகாமிற்கு வந்தது.

பார்வதி துடித்து பதைத்து என்ன நடந்தது? எங்கே என் அவர்? என்று அழ, பிள்ளைகள் எங்கே அப்பா? எங்கே எங்கள் அப்பா? என்று கதறினார்கள். உண்மையைச் சொன்னார்கள், வந்தவர்கள் அவருடைய உடம்பையாவது நான் பார்க்க முடியாதா? என்று வெதும்பினாள்.

இராணுவம், எரித்துவிட்டு, ஒருபிடிசாம்பலை டப்பா ஒன்றுக்குள் போட்டுக் கொடுத்ததை பார்வதியிடம் கையளித்தார்கள்.
அவள் மயங்கி வீழ்ந்து விட்டாள். *



**ஒருவர்:—** என்ன மச்சான் இவ்வளவு நேரமும் தமிழ்ப்பாட்டுப் போட்டாய், இப்ப உடனை ஹிந்திப்பாட்டுப் போடுறாய் எனக்கொண்டும் விளங்கேல்லை

**மற்றவர்;—** உஷ் சத்தம் போடாதே......, பெடியள்இயக்கத்திற்குக் காசு சேர்க்க வாறாங்கள் போலை இருக்கு.... கேட்டால் இந்தியாக்காரர் என்று சொல்லிவிடு.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சைவத் திருக் கோயில்களில்

# இசையும் நடனமும்

பல்லாண்டுகாலமாகக் கலைகள், சமயத்துடன் இணைந்து வளர்ந்து வருகின்றன. வேதாகம முறைப்படி கோவில்கள் தொடங்கின. எனவே கோவில்கள் சமய உணர்வினைப் புகட்டும் நிலையமாக மட்டுமன்றிக் கவின் கலை மையங்களாகவும் மிளிரலாயின. கோவில் அமைப்பு அதில் இடம் பெறும் சிற்பங்கள், ஓவியங்கள், கிரியைகள் முதலியவற்றிலே இசையும் நடனமும் முக்கிய இடத்தைப் பெறுகின்றன.

சைவசமயத்தின் முழு முதற் கடவுளான சிவபெருமான் ஆடற்கரசனாக, நடராஜனாக விளங்குகின்றான். நடராஜனின் வடிவமே இதற்கு எடுத்துக்காட்டு. சிலப்பதிகாரத்திலே மாதவி கற்றதாகக் கூறும் பதினொரு வகை ஆடல்களும் வெவ்வேறு கடவுளர் ஆடியவையே. எனவே தெய்வங்களுக்குரிய கோவில்களும் கலைக்களஞ்சியமாக விளங்கியதில் வியப்பில்லை.

இத்தகைய ஆடல் வல்லான் கோவில்களிலே, சிற்பங்களும், ஓவியங்களும் இடம் பெறலாயின. நர்த்தன கணபதி, வீணாதர தட்சணாமூர்த்தி, வீணையினை ஏந்தி வாசிக்கும் சரஸ்வதி,சிவபெருமானின் 108 கரணங்கள், கண்ணனின் வேய்ங்குழல் பற்றிய சிற்பங்களைக் குறிப்பிடலாம். கோவில் அமைப்பிலே நிருத்த மண்டபம் என்ற ஒரு பகுதி நடனத்திற்காக ஒதுக்கப்பட்டு இருந்தது.

மலரினாலும், இலையினாலும், மனதினாலும் வழிபடுதல் போன்று இசையினாலும், நடனத்தினாலும் இறைவனை வழிபடும் முறை நன்கு போற்றப்பட்டது. "ஏழிசையாய் இசைப்பயனாய்" "ஆரியம் தமிழோடிசையானவனாக" இயங்கும் இறைவனை "ஆடுகின்றிலை கூத்துடையான் கழற்கு அன்பிலை என்புருகப் பாடுகின்றிலை" எனவும் "ஆடிப்பாடி அண்ணாமலை கைதொழ ஓடிப்போம் நமதுள்ள வினைகளே" என சைவ நாயன்மார்களும், "பாடோமே எந்தை பெருமானைப் பாடி நின்றாடோமேயாயிரம் பேரானை" என வைணவ ஆழ்வார்களும் ஆடல் பாடல் மூலம் ஆண்டவனை வழிபட்டு உய்யும் முறையினை நன்கு விளக்கியுள்ளனர்.

நால் வேதங்களின் சாரமாக ஐந்தாவது ,பொதுமக்களின் வேதமாக நாட்டிய வேதம், நாட்டிய சாஸ்திரம் இருக்கின்றது. சங்கீத ரத்னாகரம் போன்ற நூல்களும் இசை, நடனம் ஆகியனவற்றின் சிறப்புகளைத் தெய்வீக அடிப்படையில் வலியுறுத்திக் கூறுவன. கர்நாடக "சங்கீத சாஸ்திர ஞானமு சாருப்ய சௌக்யதமே மனஸா" என சங்கீதத்தை நன்கு மேம்படுத்தியுள்ளமை குறிப்பிடற்பாலது.

கோவில்களில் இடம் பெற்ற கிரியைகளில் ஆடலும் பாடலும் நன்கு இடம்பெற்றன. சைவத்திருமுறைகள் பண்ணுடன் ஓதப்பட்டு வந்தன. தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருப்புராணம் ஆகிய ஐந்தும் பஞ்ச புராணங்கள் என அழைக்கப்பட்டன. கோவில்களில் இடம் பெறும் நவசந்திக் கிரியைகள் குறிப்பிடற்பாலன. பிரம்மசந்தி, இந்திரசந்தி, அக்கினிசந்தி, யமசந்தி, நிருதி சந்தி, வருணசந்தி, வாயுசந்தி, குபேரசந்தி, ஆசான சந்தி ஆகிய நவசந்திகளிலும் அவ்வச்சந்திகளுக்குரிய தெய்வங்களைக் குறித்துக் கொடியேற்ற கொடியிறக்க திருவிழாவின் போது அவரவர்களுக்குரிய தாளம், இராகம், பண் நிருத்தம், வாத்யம் நன்கு அமைய வேண்டுமென ஆகமங்களும் அவற்றின் வழிநூல்களும் எடுத்தியம்புகின்றன.

முற்காலத்திலே இசை நடன நிகழ்ச்சிகளை அளிப்பதற்காக இசைக்கலைஞர், வாத்தியக்கலைஞர், நாட்டியக்கலைஞர் (தேவரடியார்) கோவில்களிலே அவற்றின் வருமானம், தேவைகளுக்கேற்ப நியமிக்கப்பட்டிருந்தனர் என்பதை சாசனங்கள் வாயிலாக அறிகின்றோம். குறிப்பாகப் பல்லவர், சோழர், பாண்டியர், நாயக்கர் ஆட்சிக்காலங்களில் இத்தகைய ஒழுங்கு நிலவியதை அறியலாம். ஆனால் இந்த முறை இன்று அனுசரிக்கப்படுவதில்லை. குறிப்பாக நடனம் சொல்லில் மட்டும் பண் இராகம் ஆகியன செவ்வனே இடம் பெறுகின்றனவா என்பது ஐயத்துக்கு இடமாகும்.

இன்று எம் தாய் நாடாம் ஈழத்திலே சைவ மக்கள் மத்தியிலே சமய விழிப்புணர்வும், ஆர்வமும் நிலவுகின்றன. கடந்த சில ஆண்டுகளாகச் சமய பாடம் கல்விப்பொதுத்தராதர பத்திரப்பரீட்சை வரை மாணவர்களுக்கு க் கட்டாய பாடமாக விளங்குகின்றது. இதே வேளையில் நடனம், இசை ஆகிய பாடங்களுக்கு இலங்கையிலே அரசாங்க ரீதியிலும் தற்பொழுது முன்னிலும் பார்க்க கூடுதலான முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றது. மேலும் இசை நடனம் ஆகியவற்றை சிறப்பான வகையிலே உயர்கல்விமட்டத்தில் புகட்டும் வகையில் நுண்கலைத்துறை ஒன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ஒரு பகுதியாக இயங்கி வருகின்றது. இந்த சூழ்நிலையிலே இந்த இசை நடனம் ஆகிய கவின் கலைகள் சமய ரீதியில் சிறப்பான இடத்தைப் பெற வாய்ப்புகள் நிறைய உண்டு.

திருமதி அன்னபூரணி சத்தியமூர்த்தி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இங்கிலாந்துச் செய்திகள்

## தட்சர் சகாப்தம் முடிவுக்கு வந்தது

ஃ இங்கிலாந்தின் முடிசூடா இராணியெனவும், இரும்பு மாது எனவும் அழைக்கப்பட்ட இங்கிலாந்தின் பிரதமர் திருமதி. மார்க்கிரட். தட்சர் 22,11,90 அன்று காலை யாரும் எதிர்பாரக்கா வண்ணம் தனது பதினொன்றரை வருடப் பதவியை இராஜினுமாச் செய்து உலகையே பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கினுர்.

ஃ இங்கிலாந்தின் ஆளும் கட்சியின் பாராளுமன்றத் தலைவருக்கான தேர்தலில் வழமைபோல ஆனுல் இம்முறை சற்று வித்தியாசமாகத் திருமதி. தட்சரை எதிர்த்து அவரது மந்திரி சபையிலங்கம் வகித்து பின்னர் அவருடன் ஏற்பட்ட கொள்கை வித்தியாசத்தால் இராஜினுமாச் செய்ததிரு. மைக்கல். கசெல்ரைன் என்பவரும் போட்டியிட்டார். கடந்த வருடத்திலும் இதேபோல ஒரு பாராளு மன்ற உறுப்பினர் திருமதி. தட்சரை எதிர்த்துப் போட்டியிட்டாலும் அவர் இறுதியில் திருமதி.தட்சரால்தோற்கடிக்கப்பட்டார். ஆனுல் இம்முறை திருமதி .தட்சரின் கொள்கையில் ஏற்பட்ட விரோதம் காரணமாக அவரது மந்திரி சபையில் இருந்து மேலும் பல அமைச்சர்கள் விலகிகொண்டனர்.இதனுல் திருமதி .தட்சர் தனது செல்வாக்கை நாட்டு மக்களிடம் வலுவாக இழந்தார்.இதன் விளைவே திரு. மைக்கல். கசெல்ரைன் திருமதி.தட்சரை எதிர்த்ததன் நோக்கமாகும்.

ஃ இப் போட்டிக்கான தேர்தல் கடந்த 20,11,90 அன்று நடைபெற்றது. இங்கிலாந்தின்சவேர்ட்டிவ் கட்சியில் மொத்தமாக 372 அங்கத்தவர்கள் பாராளுமன்றத்தில்கம் வகிக்கின்றனர். இப்போட்டியின் முடிவுகள் அன்று மாலையே அறிவிக்கப்பட்டன.

| | | |
|---|---|---|
| திருமதி. தட்சர் | -- | 204 ஆதரவாளர்களாலும் |
| திரு. மைக்கல். கசெல்ரைன் | -- | 157 ஆதரவாளர்களாலும் |

தெரிவு செய்யப்பட்டனர். எனினும் முதலாவது சுற்றுப் போட்டியில் நான்கு ஆதரவான வோட்டுக்கள்இல்லாத காரணத்தால் அவர்களது கட்சிக் கொள்கைகளுக்கிணங்க இரண்டாவது சுற்றுப் போட்டிக்குத் தான் தயார் என பாரீஸ் மகாநாட்டில் கலந்து கொள்ளச் சென்ற திருமதி.தட்சர் உடனடியாகப் பாரீஸில் இருந்தவாறே அறிவித்தார். திரு.மைக்கல். கசெல்ரைனும் சற்றும் சளைக்காதவராகத் தானும்போட்டிக்குத் தயார் என அறிவித்தார்.

ஃ இதனையடுத்து இருமுனைகளிலும் பலமான பிரச்சாரங்கள் முடுக்கிவிடப்பட்டன.திருமதி.தட்சர் அவசர அவசரமாக அடுத்த நாளே நாடுதிரும்பினுர். நாடு திரும்பிய அவர் தமக்கே உரியபாணியில் நிருபர்களுக்கு நான் போட்டியிடுவேன் அத்தோடு வெற்றியும் பெற்றே தீருவேன் என்று கூறனுர். ஆனுல் அடுத்தநாட்காலை அதாவது 22,11,90 அன்று தான் தனது பிரதமர் பதவியை இராஜினுமா செய்வதாக அறிவித்து பின்னர் இங்கிலாந்தின் முடிக்குரிய இராணியிடமும் அதனை வழமைபோலஅறிவித்தார். இதனுல் ஏற்பட்ட மாற்றங்கள் காரணமாக திருமதி. தட்சருக்கு ஆதரவாக இருந்த அவரது மந்திரிசபையில் இருக்கும் நிதி ச்செயலாளர், வெளியுறவச் செயலாளர் தனித்தனியாக திரு.மைக்கல்.கசெல்ரைனை எதிர்த்துப் போட்டியிட்டனர். இரண்டாவது சுற்றுப் போட்டி 27,11,90 அன்று நடைபெற்றது. போட்டி முடிவுகள் அன்று மாலையே அறிவிக்கப்பட்டன.

திரு. யோன் .மேயர் (நிதிச் செயலாளர்) 185 ஆதரவாளர்களாலும்
திரு .மைக்கல்.கசெல்ரைன் 131 ஆதரவாளர்களாலும்
திரு.டக்ளஸ் . கேட் (வெளியுறவச் செயலாளர்) 56 ஆதரவாளர்களாலும்

தெரிவு செய்யப்பட்டனர். ஆனுல் இம்முறையும் பாராளுமன்றத் தலைவருக்கு இருக்க வேண்டிய பெரும்பான்மை வாக்குக்களைப் பெறவில்லை. ஏனெனில் இரண்டாவது சுற்றில் கூடுதலாக 187 வோட்டுக்கள் ஒருவர் பெருத பட்சத்தில் மூன்ருவது சுற்றுப் போட்டி நடைபெறல் வேண்டும். ஆனுல் மற்றைய இரண்டு போட்டியாளர்களும் விட்டுக் கொடுத்தனுல் இம்முறை ஆகக் கூடுதல் வாக்குக்களைப் பெற்ற திரு. யோன் .மேயர் அதாவது நிதிச் செயலாளரே தெரிவு செய்யப்பட்டார்.

ஃ இதனைடுத்து 28,11,90 அன்று உத்தியோக புர்வமாக திருமதி .தட்சர் தனது பதினொன்றரை வருடப் பதவியை இங்கிலாந்து இராணி முன்பாக இழக்க இந்நூற்ருண்டின் மிகவும் இளைய பிரதமராக திரு. யோன் .மேயர் இராணியால் அழைக்கப்பட்டு பதவியை ஏற்ருர்.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அஞ்சலி
## (பட விமர்சனம்)

எல்லா டைரக்டர்களாலும் இலகுவாக எடுக்க முடியாத ஒரு புதுக்கருவை மிக அழகாகமக்கள் பார்வைக்கு வழங்கியிருக்கும் மணிரத்தினம் நிச்சயமாக பாராட்டப்பட வேண்டியவர். அவரது வெற்றிப்பட வரிசையில் நிச்சியமாக அஞ்சலியும் இணையப்போவது உறுதி. மூளை வளர்ச்சி குறைந்த ஒரு குழந்தை அதன் பெயர்தான் அஞ்சலி. அதன்பெற்ருேர்களாக ரகுவரனும், ரேவதியும். அவர்களுக்கு ஏற்கனவே இரு குழந்தைகள்,மூன்ருவது குழந்தைதான் இந்த அஞ்சலி. அது பிறந்தவுடனே இறந்துவிட்டதாக மனைவியிடம்பொய் சொல்லி அக்குழந்தையை மருத்துவமனையில் சேர்த்துவிடுகிருர் ரகுவரன். இதைபபின்னர் அறிந்து கொண்ட ரேவதி அக்குழந்தையை வீட்டிற்குக் கொண்டுவந்து வளர்க்போவதாகஅடம்பிடிக்கவே அக்குழந்தை வீட்டிற்கு அழைத்து வரப்படுகின்றது. வீட்டிற்கு கூட்டிவரப்பட்ட அக்குழந்தை மெல்ல மெல்ல சுவரைப் பிடித்து தனது சகோதரர்களிடம் போக அவர்கள் அக்குழந்தையை வெறுத்தொதுக்கும் கட்டத்திலும் அக்குழந்தையாக நடித்த ஷார்மிலியின் நடிப்பு அபாரம்.ஆனல் அக்குழந்தையை அப்படி நடிக்க வைத்த டைரக்டர் ஒரு படி மேலேயே போய்விடுகிருர். பின்னர் அக்குழந்தை அக்காலணி யில் இருப்பதால் ஏற்படும் பிரச்சனைகள், கொலைசெய்து மறியல் சென்றுவந்த பிரபு ஆகியோரைச் சுற்றி க் கதை தத்துரூபமாக பின்னப்படுகின்றது. கடைசியில் அக்குழந்தை சுகவீனமுற்று இறக்கின்றது. முழுக்க முழுக்கச் சிறுவர்களைக் கொண்டே சிக்கலான ஒரு கரு வைத் திறம்பட கையாண்டிருக்கிருர் மணிரத்தினம். இசையமைப்பு இளையராஜா.

அத்தனை பாடல்களுமே அபாரம். முக்கியமாக "அஞ்சலி அஞ்சலி" பாடல் எல்லோர் வாய்களையும் முணுமுணுக்க வைக்கின்றது. ஆரம்பத்தில் அந்தக் காலணிச் சிறுவர்களின் கலாட்டா சற்றுக் கூடுதலாகத் திணிக்கப்பட்டிருந்தாலும் அஞ்சலியின் வருகை அதை மறக்கச் செய்கிறது. படம் முடிந்து வெளியே வந்த ஒவ்வொருவரும் கண்களைத் துடைததபடியே வருவார்கள். கடைசியில் அஞ்சலி ரசிகர்களை அவ்வளவு தூரம் பாதிக்கும்என்பது திண்ணம்.

**சி.ந.ரகுராம்**


---

முழங்காலைக் கட்டிக் கொண்டு நம்மால் ஆவதென்ன என்று
சொல்லும் வேதாந்தம் சமுதாய அறிவை எதிரொலிக்கும்
மரணச் செய்தியே! — இக்பால்


---

www.tamilarangam.net

# குறுக்கெழுத்துப் போட்டி வினா இல 16



# குறுக்கெழுத்துப் போட்டி விடை இல 15



**குறுக்கெழுத்துப் போட்டியில் பங்குபற்றிச் சரியான விடையளிக்கும் அதிர்ஸ்டசாலிக்கு இங்கிலாந்து நாணயத்தில் பத்துப் பவுண்கள் வழங்கப்படும்.**

www.tamilarangam.net

**இடமிருந்து வலம்**

1. இவர் அர்த்தமுள்ள இந்து மதம், இயேசு காவியம் படைத்தவர்.(6)

2. பழங்காலத்தின் மாவாக்கும் இயந்திரம்.(3)

3. ஆபிரிக்கக் காடுகளில் இலட்சக் கணக்கில் வருவாயைத் தரும் ஒரு பொருள்.(4)

4. மத்திய கிழக்கு நாடுகளில் குற்றம் செய்தவர்களின் இதனைத் துண்டிப்பார்கள்.(தலை கீழ்)(3)

5. இதனை வேண்டிக் கொடுத்தவரை உடனேயே இந்தியா இழந்து தவித்தது.(6)

10. விவேகத்துடன் கூடிய இது இருக்க வேண்டும்.(3)

11. தத்தளிக்கும் ஓடத்திற்கு இது ஒளிக்கீற்று.(2) (தலைகீழ்)

12. நாராயணன் கைகளில் சக்கரத்துடன் இதுவும் இருக்கிறது.(தலை கீழ்)(3)

13. இதனை அறிய இறைவன் எமக்கு நாவைப் படைத்துள்ளான்.(2)

**மேலிருந்து கீழ்**

1. ஈழத்திலிருந்து இந்நாட்களில் இது வருவதுமில்லை, அங்கு போவதுமில்லை.(4)

2. நெட்டையின் ஒத்த கருத்துப் பொருள் (4)

4. சீதை இதன் மூலம் இராமனுக்கு மாலையிட்டாள்.(6) (தலைகீழ்)

6. தமிழீழப் போராட்டத்தில் பங்கு பற்றும் அனைவரும் இது செய்தவர்களே(4)

7. ------------ மீட்புப் பணியில் தமது புத்திரச் செல்வங்களையும், மாங்கல்யங்களையும் பறிகொடுத்த வீரத்தாய்மார்கள் எத்தனையோபேர்.(4)

8. தவளை இனத்தைச் சேர்ந்தது.(2)

9. இதனில் குளித்தாலும் காக்கை அன்னமாகுமா? என்று ஒரு பழமொழியுண்டு(3)

10. இன்று தமிழீழத்தில், காடுகளை விட நாட்டினுள் இதனது நடமாட்டம் அதிகம்(3)

— * — * — * —

கடந்த இதழின் குறுக்கெழுத்துப் போட்டியில், (இல 15) பங்கு பற்றிப் பரிசு பெறும் அதிர்ஸ்ட சாலி கஜேந்திரன். பாரிஸ்.
இவருக்கு எமது வாழ்த்துக்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net

# விஞ்ஞானமும் தொழில் நுட்பமும் SCIENCE & TECHNOLOGY

## நடைமுறைச் செய்திகள் CURRENT NEWS


### பிளாஸ்டிக் மைக்கிரோ சிப்ஸ்

அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள ஓர் புதிய பொலிம (Polymer) பிளாஸ்ட்டிக் பொருள், மலிவான மைக்றோ சிப்ஸ்ஐச் செய்யும் சாத்தியக்கூறுகளை ஏற்படுத்தியுள்ளது. இந்தப் பிளாஸ்டிக்கானது மின்கடத்தலிலியாக இருந்து, சாதாரன ஒளியில் பட வைக்கும்போது, நன்கு மின்கடத்தும் பொருளாக மாறவல்லது என இப்பொருளைக் கண்டுபிடித்த, கலிபோனியன் பல்களைக் களகத்தைச் சேர்ந்த இரசாயனவியலாளர் கூறுகிறார்.





படம்-1

பி-பீனைலின் சல்டைட் (P-phenylene Sulfide) என்பது இந்த பிளாஸ்டிக் பொருளின் இரசாயனப் பெயர். இந்த பிளாஸடிக்கை ஒளி பட வைக்கும் போது நிரந்தரமாக மின்கடத்தியாக மாறும் இத்தன்மை, மைக்ரோ சிப்ஸ் தயாரிப்பாளர் களைப் பரபரப்பிற்குள்ளாக்கியுள்ளது. மின் கடத்தும் தன்மையுள்ள வேறு பல பிளாஸ்டிக்குகள் இருந்தபோதிலும், இந்த பிளாஸ்டிக் மிக மலிவானதாக இருப்பதுடன் மிக இலகுவாக இதனை மின்கடத்தும் ஒன்றாக மாற்ற முடிகின்றது.




படம்-2a ஒளி படுவதற்கு முதல்




படம்-2b ஒளி பட்டபின்

இத்தகய பிளாஸ்டிக்கைக் கொண்டு இரண்டாம் படத்தில் விளங்கப்படுத்தியதுபோல், இலகுவான முறையில், நுணுக்கமானதும், சிக்கலானதுமான இலத்திரனியல் மின் சுற்றுக்களையும்(micro - electronic circuits), இதன்மூலம் மலிவான மைக்ரோ சிப்ஸ்களைத் தயாரிப்பதென்பது இலகுவான தொன்றாகும். மேலும் பல அடுக்கு மின் சுற்று களைக் கொண்ட 5ம் தலைமுறைக்கான கணனியந்திரங்களைத் தயாரிக்க உதவும் எதிர்கால மைக்றோ சிப்ஸ்ஐ (micro-chips) உருவாக்கும் முறையை மிகவும் இலகுவாக்கியுள்ளது.

### சிஸ்டிக் பைபரோசிஸ் வியாதிக்கு புதிய முறையில் சிகிச்சை

அண்மையில் மிசிகன் பல்கலைக்களகத்தைச் சேர்ந்த ஜேம்ஸ் வில்சன் என்பவரும் அவரது உதவியாளர் பிரான்சிஸ் கோலின்ஸ் என்பவரும் சேர்ந்து சிஸ்டிக் பைபரோசிஸ் என்ற வருத்தத் திற்குக் காரனமான ஜெனடிக் குறைபாட்டை அடையாளம் கண்டு உலகிற்கு அறிவித்திருந்தார்கள்.

இப்பேது பரிசோதனைக் குழாயில் வைத்து இவ்வருத்தம் உள்ள கலத்தினது ஜீனை மாற்றியமைத்து அதன்மூலம் நோயை நீக்கிக் காட்டியுள்ளார்கள்.

www.tamilarangam.net

# விஞ்ஞானமும் தொழில் நுட்பமும் SCIENCE & TECHNOLOGY

## கணனியந்திரம் COMPUTER


உள்நாட்டில் மட்டுமின்றி பிரான்ஸ், ஜேர்மனி, டென்மார்க், நோர்வே, இத்தாலி, அவுஸ்ரேலியா, இலங்கை போன்ற வெளிநாடுகளிலுமிருந்து அநேக மாணவ மாணவிகள், பெற்றோர் ஆகியோர் கேட்டுக் கொண்டதற்கிணங்கி உங்கள் கணனி மாமா இவ்விதழ் தொடக்கம் கணனியந்திரம் பற்றி எழுததத் தொடங்கியுள்ளார். குறை குற்றங்கள் ஏதேனும் இருப்பின் அவற்றை மன்னித்து உங்கள் கருத்துகளை தயவுகூர்ந்து பின்வரும் விலாசத்திற்கு அனுப்பி வையுங்கள்.

கணனி மாமா (Computer Uncle)
விஞ்ஞானமும் தொழில் நுட்பமும் (SCIENCE & TECHNOLOGY),
11 VIOLET ROAD, WALTHAMSTOW, LONDON E17 8HZ, UNITED KINGDOM.

## கணனியந்திரம்

மனித முன்னேற்றத்தின் சரித்திரத்திலேயே மிகமுக்கியமான ஒன்று பல்வேறு கருவிகளின் படைப்பும் அவற்றின் பாவனையும் ஆகும். இக்கருவிகளின் உதவியால் அவன் தன்னையும் தனது சுற்றாடலையும் நன்கு ஆய்ந்தறிந்து, அவ்வறிவை வெற்றிகரமாகத் தனது முன்னேற்றத்திற்குப் பயன்படுத்தியுள்ளான். சாதாரன ஊசி முதற்கொண்டு நவீன உலகத்தைச் சேர்ந்த சிக்கலான தானியங்கு இயந்திரங்களான றோபோட் (Robot) போன்றன வரை உள்ள இக்கருவிகளின் எண்ணிக்கை நாள்தோறும் வளர்ந்து கொண்டே இருக்கின்றது. மனித பரிணாமத்தை, குறிப்பாக அறிவு வளர்த்தியைத் துரிதப்படுத்துவதில் இக்கருவிகளின் பங்கு மிகப்பெரியது என்றால் அது மிகையாகாது.

மனிதனில் இயற்கையாய் அமைந்துள்ள கருவிளாகிய மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐந்து புலன்களும் மிக எளிமையானவையேயாகும். உதாரனமாக எமது கண்ணை எடுத்துக்கொண்டால், இதனால் இயற்கையில் உள்ள பல்வேறு மின்காந்தக் கதிர்களில் சிகப்பு நிறத்திற்கும் ஊதா நிறத்திற்கும் இடைப்பட்ட மின்காந்தக் கதிர்களையே பார்க்க முடியும். இது இயற்கையில் உள்ள மின்காந்த கதிர்களில் மிகச்சிறிய ஒரு பகுதியையே குறிப்பதாகும்.




படம் - 1




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# விஞ்ஞானமும் தொழில் நுட்பமும் SCIENCE & TECHNOLOGY

## கணனியந்திரம் COMPUTER




படம் -2

மேலே உள்ள படம்-1 மனிதக்கண்ணால் பார்க்கக்கூடிய வெள்ளை ஒளியை உருவாக்கவல்ல ஏழு நிறங்களையும் காட்டுகிறது. படம்-2 ல் காட்டியது போல் பெருமளவு கதிர்களை எமது கண்ணால் கண்டுகொள்ள முடியாது. கண்ணிருந்தும் குருடரானோம் என்றால் அது மிகையாகாது. எமது காதை எடுத்துக் கொண்டால், அதனால் கேட்கக்கூடிய ஒலியின் அதிர்வெண் ஏறக்குறைய 30 தொடக்கம் 30,000 வரையாகும். மிகுதிச் சத்தங்கள் எமது காதால் கேட்டுக்கொள்ள முடியாதனவாகும். இதுபோல் மற்றய புலன்களில் உள்ள குறைகளையும் எடுத்துக்காட்டலாம். மொத்தத்தில் நாம் பலகீனமான புலன்களை அடிப்படைக் கருவிகளாகக் கொண்டுள்ளோம். இவற்றைக் கொண்டு இயற்கையை ஆய்ந்து உண்மையை அறிவதென்பது இலகுவானதொன்றல்ல. இதனால் செயற்கருவிகளின் தேவை மிக இன்றியமையாத ஒன்றாகும். அதில் கணனியந்திரத்தின் பங்கு மிக பிரதானமான தொன்றாகும்.

உலகத்தில் உள்ள எந்த ஒரு இயந்திரமும், அது பொறியியல் இயந்திரமாக (Mechanical machine) இருந்தாலென்ன இலத்திரனியல் இயந்திரமாக (Electronic machine) இருந்தாலென்ன அவற்றைக் கொண்டு ஒரு தொழிலைச் செய்யவேண்டுமானால், அவற்றிற்குத் தகுந்த முறையில் கட்டளைகள் கொடுக்கப்பட வேண்டும்.

எந்த ஒரு இயந்திரமும் தகுந்தமுறையில் கட்டளைகள் கொடுக்கப் படாவிட்டால் வேலை செய்யப்போவதில்லை. தானியங்கு இயந்திரமும் கூட முன்னேற்பாடாகத் தயாரிக்கப்பட்டு ஏதோர்விதத்தில் சேர்த்துவைக்கப்பட்ட கட்டளைகளைக் கொண்டே இயங்குகின்றன. அதாவது மனிதனைப்போலே தானே சிந்தித்து ஓர் அலுவலைச்செய்யும் ஆற்றல் இயந்திரங்களுக்கு இல்லை. இதில் கணனி இயந்திரம் ஒன்றும் விதிவிலக்கில்லை. ஓர் தொழிலைச் செய்வதற்கென மனிதனால் தயாரிக்கப்பட்டு தொகுத்துக் கொடுக்கப்பட்ட கட்டளைகளைச் சேமித்து வைத்து திரும்பத் திரும்பப்பாவித்துத் தானே அத்தொழிலைச் செய்யும் ஆற்றல் கணனியந்திரத்திற்கு உண்டு. இதனால் கணனியந்திரத்திற்கு தானே சிந்திக்கும் ஆற்றல் உண்டோ என்ற அறிவு மயக்கம் சிலசமயங்களில் எம்மிடம் ஏற்படக்கூடும்.

(தொடரும்.....)

www.tamilarangam.net

## விஞ்ஞானமும் தொழில் நுட்பமும் SCIENCE & TECHNOLOGY

### Conferences Seminars Exihibitions

1. *6-9 December 1990*
   *Computer Shopper Show*
   *Wembley Exhibition Centre, London.*

2. *15th December 1990*
   *All Formats Computer Fair*
   *New Horticultural Hall, London.*

   *Organisers promise a Christmas party for micro buyers.*

3. *26th February 1991 - 1st March 1991*
   *IBM 91*
   *National Exhibition Centre, Birmingham..*

   *This show highlights applications, networking, connectivity and open systems within IBM.*

4. *26th-28 th February 1991*
   *Scottish Computer Show*
   *Scottish Exhibition Centre, Glasgow.*

5. *12th - 14th March 1991*
   *Mac World Expro*
   *National Exhibition Centre, Birmingham..*

6. *26th - 28th March 1991*
   *Interface 91*
   *Georgia World Congress Centre, Atlanta, GA..*

   *An exhibition and conference focusing on information networking and communication integration.*

7. *19th - 21st March 1991*
   *DEC Computing*
   *National Exhibition Centre, Birmingham..*

   *Second major show in six months for DEC users.*

8. *23rd - 26th April 1991*
   *Which Computer Show*
   *National Exhibition Centre, Birmingham..*
   *UK's number one computing event.*

9. *23rd - 26th April 1991*
   *Communications*
   *National Exhibition Centre, Birmingham..*

10. *29th April - 1st May 1991*
    *Network Design & Optimisation of Data Communications (Seminar).*
    *London.*

    *Learn how to: Apply design theory to most design questions and obtain useful results.*

11. *2nd - 3rd May 1991*
    *Data Network Management & Technical Control (Seminar).*
    *London.*

    *Learn how to: Design a network management and control centre for your organisation.*

12. *20th - 21st May 1991*
    *Voice Network Design & Optimisation. (Seminar).*
    *London.*

    *Learn to: Evaluate the effectiveness of your existing voice communication network. Design a new voice or voice/data network.*

13. *22nd - 24th May 1991*
    *An Introduction to Data Communications : Components, Systems & Networks.*
    *London.*

    *This seminar will allow delegates to: Understand the basic issues and concepts in data communications. Understand the relationship of the hardware and software.*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அழிந்து விடுமோ காண்டாமிருகம்

"பணம் இல்லாதவன் பிணம்" என்பார்கள். இதனுல் தானே தெரியவில்லை. இந்தப் பணத்தைத் தேட மனிதன் என்னென்னவோ எல்லாம் செய்து அல்லாட வேண்டியிருக்கிறது. ஒவ்வொரு மனிதனும், இந்தப் பணத்தைச் சம்பாதிக்க ஒவ்வொரு முறையில் இறங்கி, ஓடி ஓடி உழைக்கிருன். நேர்வழியில் இந்தப் பணத்தைத் தனதாக்கிக் கொள்ள முயற்சி செய்யும் ஒரு கூட்டம் ஒரு புறம் இயங்க, இன்னொரு புறம் வெகு சீக்கிரமாகப் பணக்காரனுகி விட வேண்டும் என்ற வெறியில், குறுக்கு வழியில் இறங்குகிறது இன்னொரு கூட்டம். யாரை அழித்தென்ருலும் எனக்கு இலாபம் கிடைத்தால் சரிதான் என்ற ரீதியில், ஒரு கூட்டம் வேகமாக இயங்கிப் பணத்தைத் தேட முயல்கின்றது.

இந்த வழியில், காட்டு விலங்குகளை அழித்துப் பணம் தேட முயல்பவர் ஒரு சாரார். தன்னிச்சையாகச், சுதந்திரமாக அடர்ந்த காடுகளில் நட மாடும் மிருகங்களுக்கு மனிதன் பரம விரோதி யாகி விட்டான். அவற்றைக் கொன்ருல் கொள்ளையாகப் பணம் சம்பாதிக்கலாம் என்று அறிந்த மனிதன், மிருகங்களை, வெறும் இறைச்சிக் காகக் கொல்வதை விடுத்து, வேறு வழிகளிலும் உபயோகிக்கக் காட்டு மிருகங்களை வதம் செய்ய ஆரம்பித்து விட்டான்.

மனிதனின் இந்தப் பேராசையால் இன்று பல வன விலங்குகள் அடியோடு இல்லாது ஒழிக்கப்பட்டு விடுமோ என்ற கிலி எழ ஆரம்பித்துள்ளது. ஆபிரிக்கக் காடுகளில் கம்பீரமாக உலாவி வரும் காண்டாமிருகங்கள் அருகி, அருகி அடியோடு அழிக்கப்பட்டு விடுமோ என்ற பயப்பிராந்தி எழுந்துள்ளது.

பிரமாண்டமான உருவமாக இருந்தாலும் இந்த மிருகம் சாப்பிடுவது வெறும் இலை குழைகளைத் தான்! எதற்காக மனிதன் அவற்றைக் கொன்று குவிக்கிருன்? காரணத்தோடு தான்! காண்டா மிருகத்தின் ஒற்றைக் கொம்பைப் பார்த்திருப்பீர்கள். அது உண்மையிலேயே கொம்பல்ல நகங்களாலும், தலைமுடிகளாலும் உருவாக்கப்பட்ட, கொம்பின் அமைப்பினுலான ஒன்று என்ருல் நீங்கள் நம்பியே தீரவேண்டும். அப்படியானுல் இந்தக் கொம்பில்லாத கொம்புக்கு ஏன் மனிதன் நாயாக அலைகிருன்? ஏன் கொன்று குவிக்-கிருன்? இந்தக் கொம்பில்லாத கொம்பை அரைத்துப் பவுடராக்கினுல் அது பாலியல் உறவுக்கான வீரியத்தை அளிக்கும், கைகண்ட ஔடதம் என்று கருதப்படுகிறது. அது மட்டுமா, யேமன் நாட்டவர்கள் தங்கள் இடையில் செருகி யிருக்கும் கத்தியின் பிடி, இதனுல் செய்யப் பட்டிருந்தால், அது ஆண்மைத்தனத்தின் சின்னம் என்று கருதுகிருர்கள்.

தனிமையைக் கூடுதலாக விரும்புவது காண்டா மிருகத்தின் சுபாவம். அத்துடன் இதற்கு சமயா சமயங்களில் முரக்க சுபாவமுண்டு. 60 கோடி வருடங்களாக வாழ்ந்து வரும் இந்தப் பாரிய மிருகங்களுக்கு இன்று மனிதனேடு யுத்தம் செய்ய வேண்டிய நிலை. ஏறத்தாழத் தோற்று விட்ட நிலையும் கூட!

ஒருகாலத்தில் 30 வித்தியாசமான இனங்கள் பூமியில் நடமாடிய போதிலும், இன்று ஆபிரிக்காவில் இரண்டே இரண்டு இனங்கள் மாத்திரமே எஞ்சியுள்ளன, வெள்ளைக் காண்டா மிருகம் என்று அழைக்கப்படுவது இலேசான சாம்பர் நிறத்தை உடையது. கறுத்தக் காண்டா மிருகம் என்பது தடித்த சாம்பர் நிறத்தைக் கொண்டது. தென் ஆபிரிக்காவில் தீவிர முயற்சியினுல் வெள்ளை இனங்கள் எப்படியோ அழியாமல் இருந்தாலும், கறுத்த இனங்கள் ஏறத் தாழ அழிந்தே விட்டன என்றே கருத வேண்டியுள்ளது. 20 வருடங்களுக்கு முன்பு ஆபிரிக்க காடுகளை நிறைந்திருந்த 65,000 கறுத்த இனங்கள் இன்று 4,000 ஆக அருகி விட்டன என்ருல், இவை அழியும் வேகம் எப்படி என்று நீங்களே ஊகித்துக் கொள்ளலாம்.

1970 இலிருந்து ஆபிரிக்க நாடுகளான சோமாலியா, எத்தியோப்பியா, சாட், உகண்டா போன்றவற்றில் கறுத்த இனங்கள் அழிக்கப்பட்டு விட்டன. கென்யா, சம்பியா, தன்சேனியா போன்ற நாடுகளில் ஏறத்தாழ அழிந்த நிலையிலும், மத்திய ஆபிரிக்கா, சூடான், அங்கோலா, மொஸாம்பிக் போன்ற இடங்களில் விரல் விட்டு எண்ணக்கூடிய விலங்குகளே எஞ்சியுள்ளன.

19ம் நூற்ருண்டில் வெள்ளை இனங்கள் பெருவாரியாக அழிக்கப்பட்டன. வெறும் விளையாட்டுக் காகக் கொல்லப்பட்டது ஒரு தொகை! கத்திகளின் பிடிகளையோ அல்லது சீப்பையோ இக் "கொம்பு" கொண்டு வெறும் நாகரீகத்திற்காகச் செய்ய வேண்டும் என்று கொல்லப்பட்ட அப்பாவிக் காண்டாமிருகங்கள் ஏராளம்.

1960 இல்தான் அழிகின்ற இந்த மிருகங்களைப் பாதுகாக்க வேண்டும் என்ற விழிப்புணர்வு மேலோங்கியது. ஏறத்தாழ 4000 வெள்ளைக் காண்டாமிருகங்கள் பிடிக்கப்பட்டு, பரவலாக, வனவிலங்குப் பாதுகாப்புப் பிரதேசங்களிலும், மிருகக்காட்சிசாலைகளிலும் விடப்பட்டன.

உலக வன வாழ்க்கை நிறுவனம், 1980ம் ஆண்டை க் காண்டாமிருகங்களின் ஆண்டாகப் பிரகடனம் செய்தது. இதை எப்பொழுதோ செய்திருக்க வேண்டும். காரணம் இந்தக் கால எல்லைக்குள், பல்லாயிரம் காண்டாமிருகங்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உயிரை நீத்தன. ஒரு கணக்குப் பிரகாரம் 60,000 காண்டாமிருகங்களின் உடல்கள்,"கொம்பு" அரியப்பட்ட நிலையில், ஆபிரிக்கக் காடுகளில், இந்தக் கால எல்லைக்குள் கண்டெடுக்கப்பட்டன வாம்.

கடந்த 7 வருடங்களுக்குள், தன்ஸேனியாவில் 3800 இலிருந்து 255க்கு இம் மிருகங்களின் தொகை குறைந்து விட்டன. ஸம்பியாவிலோ 2800, 95 ஆகிவிட்டது. மத்திய ஆபிரிக்கக் குடியரசிலோ 3,000 வெறும் மூன்ருகி விட்டது.

இந்த மிருகங்களை அழிய விடாமல் வனவிலங்குப் பாதுகாப்புப் பிரதேசங்களில் பராமரிப்பதும் சாமான்யமான விடயமல்ல. ஏராளமான பணச் செலவில் தான் இது சாத்தியப்படுகிறது என்கிருர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகள்.

ஆயுதங்கள் சகிதமாகக் கோஷ்டியாக வரும் வேட்டைக் காரர்களை மடக்கிப் பிடிப்பது இலகுவான விடயமல்ல. இதற்காக நல்ல பயிற்சி அளிக்கப்பட்ட காவலாளிகள் தேவைப்படுவதோடுஹெலிகொப்டர்,ரேடியோ வசதிகளும் அவசியமாகின்றன.

இக் "கொம்புகளின்" இன்றைய சந்தை விலை என்ன? ஒரு மிருகத்தின் கொம்பு 1 1/2 கிலோகிராமிலிருந்து 3 கி.கிராம் வரையில் இருக்கும். இவற்றின் விலை 5000 அமெரிக்க டாலரிலிருந்து 15,000 அமெரிக்க டாலர் வரை போகும். வருடா வருடம் 3கோடி முதல் 6 கோடி டாலர் வரையிலான வியாபாரம் நடக்கின்றதாம்.

ஆசிய நாடுகளில் தான் இக் கொம்புப் பவுடருக்கு கிராக்கி அதிகம்! சீனு, ஹொங்கொங் ,மக்கோ,தாய்லாந்து ,தாய்வான், யேமன்,புரூணை போன்ற நாடுகளே அடிபட்டுக் கொண்டு இப் பவுடரை வாங்குகின்றன. இங்கே வேடிக்கை என்னவென்ருல், இவற்றில் பெரும் பாலான நாடுகள் "அபாய நிலையில் இருக்கும் விலங்கினங்கள், உயிரினங்களுக்கான சர்வோதய இயக்கத்தின்" அங்கத்தவர்கள். இவ் வியாபாரம் அரச மட்டத்தில் இல்லை. போதை வஸ்து கடத்துவது போல, கள்ளக்கடத்தல் மூலமே, பவுடர் வியாபாரமாகிறது.

இன்று பல அரசுகள், இந்தப் பவுடரின் மூலம் கிடைக்கக் கூடியதை வேறு சிலவற்றில் இருந்து எடுக்க முடியும். அதே பலன் கிடைக்கும் என்று காண்பித்து இக் கொம்பின் மோகத்தை குறைத்து வருகிருர்கள். ஒரு காலத்தில் சந்தையிலிருந்த 50 சதவீதமான பவுடரைக் கொள்முதல் செய்த ஜேர்மன் நாட்டவர் கூட, இன்று மிகக்குறை வாகவே இதை உபயோகிக்கிருர்கள். மத்திய கிழக்கு நாடுகளில் வேலை வாய்ப்புக் குறைந்து விட்டதாலும் யேமன் நாட்டுப் பணமதிப்பு இறங்கி விட்டதாலும் ஆனைவிலை கொடுத்துக் காண்டாமிருகக் கொம்பு வாங்குவதைக் குறைத்து விட்டார்கள்! அது மட்டுமல்ல யேமன் அரசும் கெடுபிடியாக இருப்பதால், எருமையின் கொம்பு கொண்டு தங்கள் குத்துவாளின் பிடியைச் செய்து கொள்கிருர்கள். (இடையில் குத்துவாளைச் செருகியிருப்பது, இந் நாட்டவர் மரபு).

எல்லா ஆபிரிக்க நாடுகளிலும் காண்டாமிருகத் தைக் கொல்வதோ,கொம்பை அரிந்து விற்பதோ தடை செய்யப்பட்டிருந்தாலும் புருண்டி என்ற ஆபிரிக்க நாட்டில் மட்டும் இந்தத் தடை அமுலில் இல்லை. இங்கே பகிரங்க சந்தையில்,யானை, காண்டாமிருகங்களின் தந்தம், கொம்புகளிலான பொருட்கள் விற்பனையாகின்றன.

ஒரு வனவிலங்குப் பாதுகாப்பு நிலைய அதிகாரி விரக்தியோடு"என்னதான் தடைவிதித்தாலும், வேலியே பயிரை மேயும் போது எப்படி இந்த மிருகங்களைப் பாதுகாக்கமுடியும்" என்று கூறுகிருர். உண்மைதான் THE LAW MAKER IS THE LAW BREAKER' என்று அழகாக ஆங்கிலத்தில் சொல்வார்கள். அதாவது சட்டம் இயற்றுபவனே அதை மட்டம் தட்டும் போது, பாவம் இந்த மிருகங்கள் எப்படித் தப்பிப் பிழைக்கும்?

அ.ஜே.ஞானேந்திரன்
-குவைத்-

இன்னல்களைக் கண்டு சோர்வடைந்து விடாமலும் இன்பங்களை கண்டு பண்பு தவறி விடாமலும் இருப்பதே வாழ்வுக்கு இழுக்காகும்.

— பிரைட்



ஆசிரியர்:— பிள்ளைகளே யானை பிளிறும், குதிரைகனைக்கும், மாடு கத்தும், புலி என்ன செய்யும்?

மாணவன்:- புலி பிளேனைச் சுடும் சார்.

ஆசிரியர்:- ? ? ? ?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கொல்லான் புலால் மறுத்தானை எல்லா உயிரும் கைகூப்பித் தொழும்

சக்தி வேல்

கடந்த இதழில் நாம் யகோவாவின் சாட்சிகள் என்ற மதம் புலால் உண்ணலை எவ்வாறு மறுத்துள்ளது என்பதனைப் பற்றி விரிவாக ஆரம்பித்தோம். இம் முறை கிறிஸ்துவ மதம் புலால் உண்ணலைப்பற்றி என்ன சொல்கின்றது என்பதனை ஆராய்வோம். இதன் போது எமது எழுத்தைக்குறைத்து இயன்ற வரையில் பைபிளையே உங்களுக்கு விளக்கி யிருக்கின்றேன். இற்றைக்கு 4000 வருடங்களிற்கு முன்பு வாழ்ந்த மக்களின் அடிப்படைச் சூழலையும், அவர்களுடைய வாழ்க்கை முறையினையும் ஆராய்ந்தால் அவர்கள் மனிதர்களாக வாழ்ந்தார்களா என்று எண்ணத் தோன்றும். ஏனெனில் சுயநலமே உருவான ஒரு காட்டு மிராண்டிக் கூட்டங்களாகக், கடவுள் இருப்பதனை சற்றேனும நினைக்காமல் வாழ்ந்த கூட்டம் அது. எப்படியேனும் உடற்பசியையும், வயிற்றுப்பசியையும் தீர்த்தால் போதும் என்ற நிலையில் எகிப்தில் வாழ்ந்த மக்களிடையே உள்ளஇஸ்ரேலியர்களைத் தான் மோசாஸ் திருத்த முயலகின்றார். இதன் பின்னர் வந்த இயேசுநாதரும் மக்களைத் திருத்தி நல்வழிப் படுத்தும் பணியை தொடர்ந்து செய்தார். மக்களுடைய இழிந்த நிலை அவருக்கு அருவெருப்பை ஏற்படுத்தி இருக்கலாம். இதனால் தானோ என்னவோ யேசுநாதர் கூறினார். உலகத்தின் மீது குற்றம் சுமத்த கடவுள் தனது மகனை அனுப்பவில்லை. உலகத்தைத் திருத்தவே அனுப்பினார். JO 3:17 ஒரு கட்டத்தில் அவர் தனது சீடர்களுக்கு மேலும் சொன்னார். ஓநாய்களுக்கு மத்தியில் உங்களை ஆடுகளாக நான் அனுப்புகின்றேன். எனவே மிகவும் தந்திர -மாகவும், கவனமாகவும் நடவுங்கள். MA10:16

சுருங்கச் சொன்னால் ஒரு நரக உலகத்தைத் திருத்தும் பணியில் மோசசும், யேசுநாதரும் ஈடுபட்டார்கள் என்றால் அது மிகையாகாது. ஒரு அமைப்பின் குறைகளை கண்டறியவோ அல்லது அதனை திருத்தவோ விரும்பின் முதலில் நாம் அந்த அமைப்பில் இருக்கவேண்டும். அப்போது தான் அதனை சரியாக அறிந்து நிவர்த்திக்கலாம். இதனால் தானோ என்னவோ யேசுநாதரும் அம் மக்களிடையே ஆண்டவனால் அனுப்பப்பட்டார். கிறிஸ்துவ மக்களின் புனித நூல் பைபிள் என்பது உலகமறிந்த ஒரு விடயம். இந்த புனித நூல் 66 வெவ்வேறுவித புத்தகங்கள், கடிதங்கள் என்பன -வற்றின் ஒரு தொகுப்பாகும். 1500 வருட காலமாக சேகரிக்கப்பட்டு யேசுநாதர் இறந்து 100 வருடங்களின் பின்பு எழுதப்பட்ட ஒன்றாகும். எனவே இங்கு சில சில சிறு முரண்பாடுகள் காணப்படுவது ஆச்சரியத்திற்குரிய ஒன்றல்ல. எனவே இம் முரண்பாடுகளை நாம் தெளிவான

கண்ணோட்டத்துடன் கவனிக்கவேண்டும்.

யேசுநாதர் கூட ஒரு போதும் நேரிடையாக க்கதைக்கவில்லை. சிறு சிறு உதாரணக் கதைகளாகவே அவரது போதனை அமைந்தது. இதுபற்றி அவருடைய சீடர்கள் கேட்டபோது அவர் சொன்னார்.

சொர்க்கத்தின் இரகசியம் பற்றிய அறிவு உங்களுக்குத்தான் தரப்பட்டுள்ளது. அவர்களுக்கு அல்ல. ஆருக்க நியதி உள்ளதோ அவர்களுக்கு இன்னும் தரப்படும். இதனால் தான் நான் மறைமுக சிறுகதைகளாக பேசுகின்றேன். MATT 13:10-11.

யாருக்குக் கேட்கக் கூடிய காது உள்ளதோ அவர்கள் கேட்கட்டும் சிலேடைக் கதைகளாக நான் கதைப்பது சிலருக்கு அவை கேட்டதும் விளங்காது.MA 4:9,12

எவ்வளவு தூரம் குட்டிக்கதைகளை பாவிக்க முடியுமோ அவ்வளவு தூரம் யேசுநாதர் சிலேடைக் கதைகளை உபயோகித்தார். MA4:33

இதிலிருந்து என்ன தெரிகின்றது? ஆண்டவனுடைய நியதி உள்ளவர்கள் மட்டுமே யேசுநாதருடைய போதனையை விளங்கக் கூடியவர்களாக (ஞான அறிவுடையவர்களாக) இருந்தார்கள் . எனவே அவருடைய போதனைகள் சிலருக்குக் கொடுக்கப்படவில்லை. அதுவே இறைவனுடைய விருப்பமாகும். இத்தகைய பாவிகளினால் யேசுநாதருக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளை நீங்களும் அறிவீர்கள். எனவே ஞானம் அற்ற அறிவிலிகளைப் போல நாமும் நடக்கக் கூடாது. யேசுபிரான் தனது இரத்தத்தைச் சிந்தி எம்மை புனிதமாக்கி உள்ளார். இதனால் இன்று நாம் எல்லோரும் ஒரளவு தூரம் கடவுளுடைய ஞானம் கிடைக்கப் பெற்றுள்ளோம். ஆகவே யேசுநாதருடைய போதனைகளை நாம் சரியாக விளங்கி நடக்கக் கூடிய அளவுக்கு எமக்கு அருளும் அறிவும் உண்டு. இதனை நாம் சரியாக பயன்படுத்தவேண்டும்.

www.tamilarangam.net

நீங்கள் கேட்பதனை மிக கவனமாக அவதானத்தில் எடுக்கவேண்டும். நல்ல மண்ணில் விழுந்த விதை களைப்போல இதனைக் கேட்டு சரியாக விளங்கியவன் நூறுவீதம் பலனை அனுபவிக்கிறான், MA4:24, 13/

எனவே சரியான விளக்கத்துடன் பைபிளை படித்துச் சொந்த லாபத்தை எதிர்பாராது அதன் படி நடப்போமாக. புனித நூலின் முதலாம் அத்தியாயத்தின் படி எல்லாம் வல்ல பரமபிதா உலகத்தைப் படைத்தார். பின்பு அவர் தாவரங்களைப் படைத்தார். இதன்பின்னர் அவர் மனிதனைப்படைத்தார். எனவே கடவுள் மனிதனை தோற்றுவிக்கும் போதே அவன் தாவரங்களைத் தான் உண்ணவேண்டும் என்ற எண்ணம் அவரது திரு உள்ளத்திலே இருந்தது போலும், என்று எண்ணத் தோன்றுகின்றது. இதனை உறுதி செய்யும் விதத்தில் கடவுள் தான் படைத்த முதல் மனிதனை ஏடன் தோட்டத்தில் வாழ வைத்தார். தோட்டத்துள் உள்ள எந்த வொரு மரத்திலிருந் -தும் (ஒரே ஒரு மரம் தவிர) நீ சுதந்திரமாக உண்ணலாம் என்று மனிதனுக்கு கட்டளை இட்டார். GE1:16

நீ தாவர உணவையே உனது வாழ்க்கைக் காலம் முழுவதும் உண்பாயாக. GE 1:18

மண்ணில் இருந்து உருவாக்கப்பட்ட நீ மீண்டும் மண்ணோடு சேரும் வரை தாவர உணவை உண்பாயாக. GE1:19

கடவுள் சொன்னார் பூமியில் மேலுள்ள ஒவ்வொரு விதையுடைய தாவரங்களையும், பழம் தரும் மரங்களையும் நான் உங்களுக்கு தந்துள்ளேன். அவை உங்கள் உணவுக்கு பயன்படட்டும். GE1:29

மேற்கண்டவ்வாறு இறைவன் கூறியது அவரது எண்ணத்தை தெட்ட தெளிவாக பிரதிபலிக்கவில்லையா? இதற்கு எந்த விதமான விளக்கமோ அல்லது விவாதமோ தேவை இல்லை. மனிதன் பிறப்பிலிருந்து இறக்கும் வரை கட்டாயமாக (எந்தவித ஐயப்பாடும் இன்றி) சைவமாகவே வாழவேண்டும். இது இறைவனால் நிட்சயிக்கப்பட்ட ஒரு வரையறுப்பாகும். இதற்கு பின்வரும் கூற்றுகள் மேலதிகமான சான்றுகளைத் தருகின்றன. மனிதனுடைய கெட்ட செயலையும் இவனது மனதில் இருந்து உதிக்கும் ஒவ்வொரு எண்ணமும் பேய்த்தனமானதாக இருப்பதனையும் அறிந்த இறைவன் இறுதியில் வெள்ளப் பெருக்கால் உலகத்தை அழித்தார். இதன் பின்பு புதிய உலகம் உருவாக்கப்பட்டது. மக்கள் காலப்போக்கில் சிறிது சிறிதாக கடவுளிற்கு எதிராக செயற்படத் தொடங்கினார்கள். அதனால் உணவுப் பஞ்சம் உருவானது. இப்படி பஞ்சம் வரமுன்பு இறைவன் தன்னுடைய பக்தர்களை அதிலிருந்து காக்கவும் வழிவகை செய்தார்.

ஈசாக் பயிர்களை நட்டு அந்த வருடம் நூறு மடங்கு விளைச்சலை பெற்றார் கடவுளின் ஆசீர்வாதத் தினால். GE26:12.

சம் வருவதற்கு முன்பு எகிப்தில் அளவுக்கதிகமான தானியங்கள் விளைந்தது. மணல் கடல் போல தானியங்கள் யோசெப்பினால் குவித்து வைக்கப்பட்டது. GE41:47

இறைவனுடைய ஆசீர்வாதம் தாவர உணவுகளிற்கு நேரடியாக கிடைத்ததினால் அவைகளின் விளைச்சல் நூறு மடங்கு அதிகரித்ததாக அறிகின்றோம். ஆனால் மனிதனுக்கு உணவாக பயன்படும் விலங்குகளையோ அல்லது மீனையோ பெருகுமாறு பஞ்சத்திற்கு முன்போ பின்போ இறைவன் ஆசீர்வதித்ததாகவோ அல்லது அவை பெருகியதாகவோ புனித நூலில் கூறப்படவில்லை. பஞ்சத்தின் கோரப்பிடியில் மக்கள் சிக்கித் தவித்தார்கள். அப்போது அவர்கள் தங்களிடம் இருந்த கால்நடைகளை விற்று தானியங்கள் வாங்கி உண்டார்கள். இம் மக்களின் மீது பெருங் கருணை பொண்டார் இறைவன். எனவே எகிப்தில் வாழ்ந்த இம் மக்களை பாலும் தேனும் ஓடும் நிலத்திற்கு கொண்டுவர தீர்மானித்தார் இறைவன் இதனால் தான்-----எகிப்திற்கு வெளியே இஸ்ரேலியர்களை கூட்டிக்கொண்டு மோசஸ் பாலைவனத்தூடாக வருகின்றார். அப்போதும் மக்களுக்கு சைவ உணவே- மன்னா என்று அழைக்கப்படும்- கொடுக்கப்பட்டு வந்தது. மன்னா என்ற உணவு மல்லி விதை போன்றது. பாகுத் தன்மை உடையது. இதனை சேர்த்து மாவாக அரைத்து பானையில் சமைப்பார்கள். இது ஒலிவ் எண்ணெயின் சுவையைப் போன்றது. NU11:6-8

எனவே இங்கு பரமபிதாவின் அன்புக்குப் பாத்திரமாக மோசஸ் என்ற அடியவரை மக்களுக்கு சைவ உணவைத்தான் உண்ணும்படி கொடுத்தார். மோசஸ் இழிந்த நிலையிலுள்ள மக்களைத் திருத்தி

www.tamilarangam.net

அவர்களுக்கு நல்வழியை சமய அறிவை போதிக்கின்றார். கடினமான இருதயம் கொண்ட மக்களை உடனடியாக திருத்த முடியாது. என்பதனை அறிந்த அவர் அவர்களை மெல்ல மெல்லத் திருத்தும் பணியில் அயராது உழைக்கின்றார். ஒரு முறை பாலைவனத் தூடாக வரும் போது உண்ண உணவின்றி மக்கள் தவிக்கிறார்கள். இறைவனிடம் வேண்டுகின்றார்கள். அப்போது இறைவன் அவர்களுக்கு இறைச்சியையோ அல்லது மீனையோ கொடுத்திருக்கலாம். பாலைவனத்தில் கால்நடைகள், ஒட்டகங்கள் உண்டு. அவற்றை உண்ணச் சொல்லி இருக்கலாம். ஆனால் மாறாக

இறைவன் சொர்க்கத்திலிருந்து பானை மழையாக பொழிகின்றார் பாலைவனத்தில் JOHN 6:31

அதாவது அங்கேயும் அவர்களுக்கு கொடுக்கப் பட்டது சைவ உணவாகும். மோசசினால் நல்வழிப்படுத்தப்பட்ட பக்குவம் அடைந்த மக்கள் பலர் கடவுள் நம்பிக்கையுடன் வாழ்கின்றார்கள். இவர்களுக்கு ஞானமார்க்கம் அருள் பாரினில் உதித்தார் யேசுநாதர். அவர் குறிப்பாக மீனவ மக்களிடையே தான் தனது போதனைகளை செய்தார். இம் மக்களை எப்படிக் கையாள்வது என்பதும் அதே போல எவர் எவர்கட்கு இறைவனின் நியதி உண்டு என்பதும் கடவுளின் மகனாகிய யேசுநாதருக்கு தெரியும். எனவே அவர் பக்குவமாகத் தனது போதனைகளை இவர்களிடம் பரப்பினார்.

ஒரு முறை அதிகாலை யேசுநாதர் மிகப் பசியாக இருந்தார். அவர் தனது பசியைப் போக்க குழுழு மரத்தை நாடினார். அதில் பருவகாலம் தவறியதால் பழம் ஒன்றும் இல்லை. 21:19,22.

மீனவர்கள் மத்தியில் அவர் பிரசாரம் செய்தபோதும் அவர் மீன் உண்டதாகவோ அல்லது இறைச்சியை நாடியதாகவோ புனித நூலில் சொல்லப்படவில்லை. தனது வயிற்றுப் பசியைப் போக்க அவரும் சைவ உணவையோ பழத்தையோ நாடினார் என்பது எமக்கு இங்கு தெட்டத் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. உலகத்தைத் தோற்றுவித்த இறைவன் மனிதனைப் படைக்கும் போது அவனுக்கு கொடுத்தது சைவ உணவாகும். பஞ்சம் வரமுன்பும் இறைவனுடைய ஆசீர்வாதத்தால் நூறுமடங்கு விளைச்சல் கிடைத்தது. மோசஸ் கொடுத்ததும் மண்ணா என்றழைக்கப்படும் சைவ உணவே.

பாலைவனத்திலும் சொர்க்கத் திலிருந்து பாண் மழையே பெய்தது. கடவுளின் மகனுமோ (யேசுநாதர்) சைவ உணவையே நாடினார். எனவே பரலோகத்திலிருக்கும் பரமபிதாவை அடைய விரும்புவோர் உண்ண வேண்டியதும் சைவ உணவேயாகும். அடுத்து நாம் யாகப்பலி கொடுப்பதனைச் சற்று அவதானிப்போம்.

வேள்வி அல்லது யாகப்பலி

பலியிடும் மிருகம் ஒரு வயதுடையதாக இருக்கவேண்டும் அதில் ஒரு விதமான குற்றம், அங்கக் குறைபாடோ காயங்களோ இருக்கக் கூடாது. பதின நான்கு நாட்களுக்கு அதனை பேணிப் பாதுகாத்து மங்கிய மாலைப்பொழுதில் அதனைப் பலியிட வேண்டும். EX12:5,8-9

ஒவ்வொரு வருடமும் முதலாம் மாதம் 14ம் நாள் மாலை கடவுள் எகிப்தைக் கடந்ததின விழா வருகின்றது. அது தொடர்பான சட்டங்களுக்கமைய அந்த விழாவைக் கொண்டாடுக. NU9:3

உண்மையில் இந்த விழா எகிப்தில் தான் கொண்டாடப்பட வேண்டும். இதனால் மற்ற இடங்களில் உயிர்ப்பலி தடுக்கப்பட்டுள்ளபோதும் இப் பலிக்கு எல்லாமிருகங்களையும்பயன்படுத்தமுடியாது. குறிப்பிட்ட சில மிருகங்களையே இதற்கு உபயோகிக்கலாம். அதுவும் மேற்குறிப்பிடப்பட்ட சட்டங்களுக்கமையவே இதனை நிறைவேற்றலாம். இப்படியான சட்டங்கள் மூலம் பல தடைகள் விதிக்கப் பட்டுள்ளது, உண்மையில் இத்தடைகள் பல உயிர்களை பாதுகாக்கின்றது. ஒரு வயது உடையது என்று ஒரு ஆணித்தரமான தடையே முதல் தடையாக கூறப்பட்டுள்ளது. ஒரு உண்மையான பக்தன் சரியாக ஒரு வயதுடையஆட்டை அல்லது ஒரு வகை மலைச்சாதி இனத்தைச் சேர்ந்த ஆட்டை தெரியவேண்டுமாயின் அதனை வீட்டில் வளர்க்கவேண்டும். அப்படி வீட்டில் வளர்த்தாலும் எல்லா ஆடும் பொருந்தாது. காரணம் வருட தொடக்கத்தில் அது ஒரு வயதுடையதாக இருக்கவேண்டும். அதாவது ஒரு உண்மையான பக்தன் சரியாக முதலாம் மாதம் 14ம் திகதி ஒரு வயது பூர்த்தியாகும் ஆட்டையே தேடுவான் யாகப்பலிக்கு. இன்றைய விஞ்ஞான உலகில் இதனை ஓரளவு இலகுவாக செய்யலாம்.

(தொடரும்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மௌனத்தைக் கலைக்கும் மணியோசைகள்

மௌனத்தைக் கலைக்கும் மணியோசைகள்

டாங்...டாங்.....
அந்த மாதா கோயில் மணி ஒலிக்கிறது. ஜெபத்தில் மூழ்கியிருந்த அந்த கன்னியாஸ்திரி ஸ்டெல்லாவின் மௌனம் கலைகிறது.
யேசுவே......
உலகெங்கும் சமாதானம் நிலவட்டும்.
உள்ளங்கள் எங்கும் அன்பு நிலவட்டும்.
உயிர்களிடத்தில் காருண்யம் பிறக்கட்டும்
உன்னை என்றும் இதயத்தில் எண்ணட்டும்
கர்த்தரே உமக்கு ஸ்தோத்திரம்......... என்று தனது ஜெபத்தை முடித்துக் கொண்டு மெதுவாக எழுகிறாள் சிஸ்டர் ஸ்டெல்லா. கையில் தனது புத்தகங்களை எடுத்துக் கொண்டு மீண்டும் ஒருமுறை எல்லாம் சரியா என்று பார்த்து விட்டு மௌனமாக அந்த கான்வென்டில் இருந்து வெளியேறினார் பாடசாலையை நோக்கி. கதவைத் திறந்து ஒரு அடி வெளியே வைத்திருப்பாள், தூரத்தில் அவனது சகோதரன் போல் மிகவும் பதட்டத்துடன் ஓடி வருவதைக் கண்டாள்.

ஐயோ ஸ்டெல்லா..........
நியூஸ் கேள்விப் பட்டாயா?.......போல் மிகவும் அவசரமாகக் கேட்டான்.
என்ன நியூஸ்?......பதட்ட மில்லை. ஆறுதலாகவே வினவினாள் சிஸ்டர் ஸ்டெல்லா. அதை எப்படி உன்னிடம் சொல்லுவன்?.......ஓவென அழுதான் போல்.
எதுவானாலும் சொல்லு போல்... எல்லாம் அந்தக் கர்த்தரின் கிருபையால் நடப்பவை தானே.... ஆறுதலாகச் சொன்னாள்.
ஜெயதாஸ் எங்களையெல்லாம் விட்டுவிட்டுப் போயிட்டான் ஸ்டெல்லா.... மீண்டும் அழுதபடி போல் கர்த்தரே உமக்கு ஸ்தோத்திரம்...... பதட்டமில்லாமல் சொல் போல் ...ஒரு பெருமூச்சுடன் வினவினாள் சிஸ்டர் ஸ்டெல்லா.

அவன் செத்து ஒரு கிழமை யாகுது. இப்ப தான் அவனோட பிரண்ட்ஸ் யாரோ ஒரு ஆள் மூலமா சொல்லி அனுப்பிருக்காங்க. எல்லோரும் அவன்ட வீட்டில் கத்துறாங்க, தாஸ்.... உன்னை என்றைக்காவது ஒரு நாள் சந்திப்பன் என்றுதானே காத்திருந்தன். ஏமாற்றிட்டாயே.... காட்டுக்குள்ள ஆர்மி சுட்டுப்போட்டுதாம்....அடுத்தவார்த்தையை எதிர்பார்க்காதவள் போல் மௌனமாக அடியெடுத்து வைத்தாள். நடந்தாள் போல் விறைத்துப் போய் நின்றான். கண் இமைக்காது சிஸ்டர் ஸ்டெல்லாவையே பார்த்துக் கொண்டு நின்றான்.

டாங்....டாங்....மீண்டும் அந்த மாதாகோயில் மணி ஒலிக்கிறது. மீண்டும் அவளின் மனம் கலைகிறது. அவளின் சக்தியையும் மீறி, அவளையும் அறியாமலே அவள் தனது கடந்த கால வாழ்க்கையை ஒருதடவை எண்ணுகிறாள்.

டாங்....டாங்......மணி ஒலிக்கிறது.
சேர்ச்சினுள் பூசை முடிந்து எல்லோரும் வெளியேறுகிறார்கள். ஸ்டெல்லா கூட பூசையைப் பார்த்துவிட்டு, சேர்ச்சினுள்ளிருந்து துள்ளி ஓடி வருகிறாள். துள்ளிக் குதிக்கும் அந்த மூவாறு வயதில் தள்ளாடியா நடப்பார்? என்ன?

வெளியே ஜெயதாஸ், ஸ்டெல்லாவுக்காகக் காத்து நின்றான். இருவரும் ஒரே வகுப்பு மாணவர்கள். அதனாலோ ஈருள்ளமும் ஒருள்ளமாகி விட்டது. தூரத்தில் இந்த சின்னஞ் சிறு இளஞ்சிட்டு ஓடி வருவதையே பார்த்துக் கொண்டான் ஜெயதாஸ். தான் ஒரு பாக்கியசாலி தான் என்று நினைத்தானோ தெரியவில்லை முகத்தில் அவ்வளவு பெருமை. ஸ்டெல்லா என்றைக்குமே இந்த தாஸிற்குத் தான் சொந்தம், என்று வாய்க்குள் முணுமுணுத்துக் கொண்டான் தாஸ்.

வெளியே வந்த ஸ்டெல்லா. ஓ தாஸ் என்ன இதிலே நிக்கறே உள்ள வந்து பூசையைப் பாத்தா என்ன?....ஸ்டெல்லா வினவினாள். நான் தானே இப்படியான இடங்கள்ள பொறுமையாய் இருக்க மாட்டன். அந்த நேரத்துக்கு நல்ல சினிமா ஒன்ன பாத்திட்டுப் போயிடலாம் அட்டகாசமாகப் பதிலளித்தான் ஜெயதாஸ்.

உன்னைத் திருத்தவே முடியாது தான்....நீயாகத் திருந்தி வந்தால் தான்.... என்ன விஷயம் தாஸ்.... பெரிய ஹப்பியாக இருக்கிறியே....ஸ்டெல்லா கேட்டாள்.

ஓ...மைகோட்.... நீகூடவா என்றபேர்த்டேயை மறந்து விட்டாய்?....ஓ ஐ ஆம் வெரி சொரி தாஸ்..... விஷ் யூ ஓல் த பெஸ்ட் தாஸ்... தாங்ஸ்.. ...ம்....ஸவீட் எடுத்துக்க....தாங்யூ தாஸ்.... தாஸ் நீ இன்னுமே சுட்டியாக இருக்கிறே... ஒரு பொறுப்புணர்ச்சியே உங்கட்ட கேட்டு கேட்டுப் புளிச்சிப் போயிட்டு ஒங்காது ரெண்டும்.
சரி நான் போறன ஸ்டேல்லா...
ஜெயதாஸ், ஸ்டெல்லாவிடமிருந்து விடை பெற்றான். அட நம்ம காதலுக்குக் கூட மூனு வயசாகிறதே... என்று அப்போது ஸ்டெல்லா எண்ணி பெருமை கொண்டாள். அன்று ஏதோ மனம் நிறைந்த சந்தோஷத்துடன் வீடு திரும்பினாள் ஸ்டெல்லா. ஆனால் அந்த மகிழ்ச்சி நீண்ட நேரத்திற்கு நிலைக்கக்கூடாது என்பது போல் அடுத்த நாட்காலை காத்திருந்தது அந்தக் கோரமான செய்தி ஸ்டெல்லாவின் அப்பா ஓடி வந்தார்.

ஸ்டெல்லா..மேரி...சர்மிளா... இங்கவாங்க தாஸோட அப்பாவ ஆர்மி சுட்டுப் போட்டாம் என்ன அப்பா எங்க... அன்டன் அங்கிள் ஆமா ,அவரையே தான், இப்போதான் பாடியைக கொண்டு வந்தாங்க. ஏம்பா ஆர்மி சுட்டுது.. மார்க்கட்டில் சாமான் வாங்கிக் கொண்டு நின்றார் அந்த நேரம்

www.tamilarangam.net

ஏதோ பிரச்சனை ஏற்பட்டிருக்கு அந்தத் தங்கமான மனுஷனுக்கா இப்படி ஒரு நிலை ஸ்டெல்லாவின் அம்மா பெருமூச்சு விட்டாள். ஸ்டெல்லா கண்ணீர் சிந்தினாள் தகப்பனின் இறுதிக் கிரியைகள் எல்லாம் நல்லபடியாக நடந்து முடிந்தது. அடுத்த நாளே ஜெய தாஸ், ஸ்டெல்லாவைச் சந்திக்க சேர்ச்சுக்கு வந்தான். வழமை போல் வெளியே காத்து நின்றான். பூசை முடிந்து ஸ்டெல்லா வெளியேவந்தாள்.

ஸ்டெல்லா.. மெதுவாகக் கூப்பிட்டான் தாஸ் அமைதியாக இரு..... கடவுள் ஒருவன் இருக்கிறான்...ஸ்டெல்லா...
உனக்கு ஒரு விஷயம் சொல்ல வேணும் அதுக்குத் தான் வந்தனான். என்ன விஷயம் தாஸ்?.. ஸ்டெல்லா ஐ ஆம் சொரி.. நான் நாளைக்கே காட்டுக்குப் போகிறேன் தாஸ் என்ன?.. என்ன சொல்ற... நான் இயக்கத்தில் சேரப் போகிறன். தாஸ்... ஸ்டெல்லா வின் இதயம் வெடிப்பது போல் இருந்தது. நிச்சயமாக அவளுக்கு அதை ஜீரணிக்க முடியவில்லை ஆனாலும் அடக்கிக் கொண்டு. அப்போ நம்ம காதல்... ஸ்டெல்லா பிளீஸ் என்ன மன்னித்து விடு... என்னைத் தடுக்காதே... இல்ல தாஸ் எனக்கு உன்னைத்தவிர வேறு யாரையும் நினைச்சுப் பார்க்க முடியாது தாஸ். நீ இப்படி என்னை விட்டுட்டுப் போனா ....ஸ்டெல்லா.. உனக்கு ஒரு முடிவு சொல்றன்.. நீ இன்றையிலிருந்து பத்து வருஷத்துக்கு காத்திருக்க முடியுமா எனக்காகக் காத்திரு...பத்து வருஷத்துக்குள்ள நான் திரும்பிட்டா அதுக்கப்புறம் உன் விருப்பம் தப்பேயில்லை ஸ்டெல்லா... உன் பேரன்ட்ஸ் என்ன சொல்லுறாங்களோ அதன்படி நடந்து கொள்.. என்ன மன்னிச்சிடு ஸ்டெல்லா... நான் போறன்... குட் பாய்... எதையோ சொல்ல நினைத்த ஸ்டெல்லா அப்படியே நின்றாள். நிலையாகி விட்டாள். தாஸ் சைக்கிளில் மிக வேகமாகச் சென்றுவிட்டான்.

பத்து வருடங்களாகக் காத்திருந்தாள் இந்த ஸ்டெல்லா அந்த நாளிற்காக. அவன் அவளைத் தேடிவரவேயில்லை. அவன் நாட்டுக்காக, இல்லை தாய் மொழிக்காகப் போராடப் போனான். எந்த நேரத்தில் ஆபத்து அவனை அணைத்துக் கொள்ளுமோ தெரியவில்லை. இப்படியான ஒரு வாழ்க்கை அவனுக்கு. அவன் எப்படித் திரும்பி வருவான்?

பற்றில்லை, பன்னிரண்டு வருடங்கள் அவனுக்காக காத்திருந்தாள் ஸ்டெல்லா. அவன் திரும்பி வரவேயில்லை. மதத்தில் மிக மிக அன்பும் பற்றும் கொண்ட அந்த இளம் உள்ளம் தன்னை, முற்று முழுதாக வாழ்நாள் பூராவும் சேவை செய்ய அர்ப்பணித்துக்கொண்டது. மதத்துக்கும் மக்களுக்கும் செய்யும் அந்த சேவையில் தான் எத்தனை எத்தனை சுகம்? எத்தனை எத்தனை இன்பம்? இன்பமாக வாழ்க்கையை ஓட்டுகிறாள்.

டங்..டங்...டங்...டங்....
பாடசாலை மணி ஒலிக்கிறது. மீண்டும் சிஸ்டர் ஸ்டெல்லாவின்
மௌனம் கலைகிறது.


Good Morning சிஸ்டர்.......
Good Morningசிஸ்டர்.......
அந்த சின்னஞ்சிறு உள்ளங்களில் தான் எத்தனை இன்பம். சிஸ்டர் ஸ்டெல்லாவை காலை வணக்கம் சொல்லி வரவேற்றனர் அந்தப் பாலர்கள். குட்மோர்னிங் சிஸ்டர்.... பதிலுக்குக் காலை வணக்கம் சொல்லிக் கொண்டு படிகளில் காலை வைக்கிறாள் சிஸ்டர் ஸ்டெல்லா. ஓய்ந்து போயிருக்கும் அந்த அமைதியான உள்ளத்தில் கர்த்தர் யேசுவே சத்தமிட்டுக் கொண்டிருக்கிறார்.

---

ஒன்றை உற்பத்தி செய்தல் கடினமானதன்று அஃது இயற்கையானதும் தானே அமைவதுமாகும். அதைப் பராமரிப்பது தான் மிகவும் கடினம். —

ஜி. டி. நாயுடு

## மாவீரர் வாரம்



ஈழ சுதந்திரப் போரில் வீர மரணம் அடைந்த வீரர்களுக்கு மரியாதை செலுத்துவதற்காக "மாவீரர் வாரம்" ஒன்றை சென்ற வாரம் விடுதலைப் புலிகள் கொண்டாடினார்கள்.

அப்பொழுது வீரத் தியாகிகளின் பெயர்கள் பொறிக்கப்பட்ட பெரிய பலூன் ஒன்றையாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகள் பறக்கவிட்டார்கள்.




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



திருமங்கலம் கற்பழிப்பு பரிதாபம்



# அகதிப் பெண்ணிடம் காக்கிச்சட்டையின் காட்டுமிராண்டித்தனம்



முகாம் காட்ட மறுத்தாள்!

இலங்கையில் இருந்து அகதிகளாக வந்திருக்கும் ஒவ்வொருவரும் எப்படிப்பட்ட கஷ்டங்களை எல்லாம் சந்தித்திருப்பார்கள் என்பதும், அவைகளை தாங்க முடியாத பட்சத்தில் இந்தியாவிற்கு ஓடிவந்து பாவப்பட்ட ஜென்மங்களாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதும் நமக்குத் தெரியும். சிங்கள ராணுவத்தினரின் வெறிச் செயல்களை தாங்க முடியாமல் கற்புக்கும், உயிருக்கும் பாதுகாப்பு கருதி நம் தமிழ்நாட்டுக்கு வந்திருந்த ஒரு இளம்பெண் பாதுகாக்க வேண்டிய நம் நாட்டு போலீசாரால் கற்பழிக்கப்பட்டிருக்கிறாள். இந்த மனிதாபிமானமற்ற செயல், கடந்த மாதம் 15-ம் தேதி மதுரை மாவட்டம் திருமங்கலத்தின் அருகில் உள்ள அச்சம்பட்டி அகதிகள் முகாமில் நடந்திருக்கிறது.

ஜெயமலர்.

இலங்கையில் ஓரளவு வசதியான குடும்பத்தில் பிறந்து, தனியார் கம்பெனியில் வேலை பார்த்துக் கொண்டிருந்தாள். இலங்கையில்

> “சிங்களவர்களிடம் பலியாகி விடக் கூடாது என்று இங்கு தப்பி வந்திருக்கும் பொழுது, தமிழ்நாட்டைச் சேர்ந்த ஒருவர் அதுவும் போலீஸ்காரர் எனக்கு இந்த அநீதி இழைத்திருக்கிறார்”

நாளுக்கு நாள் சிங்கள ராணுவத்தினரின் அட்டகாசங்கள் பெருகிக் கொண்டிருந்ததால், குடும்பத்துடன் கிளம்பி இந்தியாவிற்கு வரும் பொழுது, அவளது குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் வேறு முகாமிலும், இவர் அச்சம்பட்டி முகாமிற்கும் போகும்படியான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

கடந்த மாதம் 2-ம் தேதி இங்கு வந்த ஜெயமலர், உறவினர்கள் எந்த முகாமில் இருக்கிறார்கள் என்று கண்டுபிடித்து அங்கு போவதற்கான முயற்சியில் இருந்திருக்கிறாள். இந்த சூழ்நிலையில் உடல்நிலை கொஞ்சம் மோசமாகி விடவே, சம்பவ தினத்தன்று ஆஸ்பத்திரியில் ஊசி போட்டு விட்டு காய்ச்சலுடன் அவளது குடியிருப்பில் படுத்திருந்திருக்கிறாள். வழக்கம் போலவே கதவை நன்றாக சாத்தி விட்டு, உறங்கிப் போயிருக்கிறாள்.

இரவு 1.30 மணி சமயத்தில், ஜெயமலர் தனியாக இருப்பதைத் தெரிந்து கொண்ட ஏட்டு பரமசிவம் உள்ளே நுழைந்து ஜெயமலரின் கழுத்தில் கையை வைத்து, 'கத்தி, கூச்சல் போட்டால் கொன்று விடுவேன்' என்று மிரட்டி, உடல்நிலை சரியில்லாதவள் என்பதைக் கூட யோசிக்காமல் அவரது மிருக வெறியைத் தணித்திருக்கிறார்.

சம்பவம் நடந்த பின்னரும், அதிர்ச்சியில் இருந்து மீளாத ஜெயமலர் காலை வரை அழுது கொண்டே இருந்திருக்கிறாள். இதைக் கண்ட பக்கத்து குடியிருப்புக்காரர்கள் அவளிடம் விஷயத்தைக் கேட்டதும் கொதித்துப் போயிருக்கிறார்கள். உடனே அவர்கள் இன்ஸ்பெக்டர் தயாளன், ஏ.எஸ்.பி. ஸ்ரீலட்சுமிராவிடம் முறையிட்டதும், விஷயம் பெரியதாகிக் கொண்டு வருவதைக் கண்ட ஏட்டு, உடனேயே ஊரை விட்டு தப்பியோடியிருக்கிறார்.

சம்பவம் நடந்த முகாமிற்கு நாம் சென்ற பொழுது, குடியிருப்பின் மத்தியில் இருந்த போலீஸ் அவுட்போஸ்ட்டை குடியிருப்பின் ஆரம்பத்தில் மாற்றியிருந்தார்கள். ஜெயமலரைப் பார்த்து விபரம் கேட்ட பொழுது, "நான் இலங்கையில் எந்த இடத்தில் இருந்து வந்திருக்கிறேன் என்ற விபரத்தையோ, என் போட்டோவையோ தயவு செய்து வெளியிட்டு விடாதீர்கள். இந்த விஷயம் தெரிந்தால் வேறு முகாமில் இருக்கும் எனது உறவினர்கள் என்னை குடும்பத்தில் சேர்த்துக் கொள்ள மாட்டார்கள் என்று கூறிவிட்டு, "அன்று இரவு உடல் சரியில்லாத நிலையில், படுத்து உறங்கிக் கொண்டிருந்தேன். திடீரென உள்ளே நுழைந்த போலீஸ்காரர், என் கழுத்தில் கையை வைத்து அமுக்கி கற்பழித்து விட்டார். அதிர்ச்சியில் இருந்த என்னால் அழுவதைத் தவிர வேறு ஒன்றும் செய்ய முடியவில்லை. பக்கத்து குடியிருப்பில் உள்ளவர்கள் சொல்லியும் கூட நானாக கம்ப்ளைண்ட் கொடுக்கவில்லை, என்னை மருத்துவ பரிசோதனை செய்து நான் கற்பழிக்கப்பட்டதை தெரிந்து கொண்டார்கள். எனக்கு நேர்ந்த கொடுமையை வெளியில் சொல்லாமல் மறைத்து விடத்தான் நினைத்திருந்தேன். ஆனால் அதற்குப் பின்புதான் என்னை இந்த நிலைமைக்கு ஆளாக்கியவருக்கு தண்டனை வாங்கித் தராமல் விடக்கூடாது என்று முடிவு செய்திருக்கிறேன். சிங்களவர்களிடம் பலியாகிவிடக் கூடாது என்று இங்கு தப்பி வந்திருக்கும் பொழுது, தமிழ்நாட்டைச் சேர்ந்த ஒருவர் அதுவும் போலீஸ்காரர் எனக்கு இந்த அநீதி இழைத்திருக்கிறார் என்பதை நினைக்கும் பொழுது என்னால் தாங்கவே முடியவில்லை" என்று அழுதார்.

இந்த விஷயத்தை இன்ஸ்பெக்டர், ஏ.எஸ்.பி. என்று கொண்டு போய், நடவடிக்கை எடுக்க காரணமாக இருந்த, வவுனியாவைச் சேர்ந்த இளைஞர் செல்வராஜன் என்பவரைச் சந்தித்தோம். "முதலில் இந்த விஷயத்தைக் கேள்விப்பட்டவுடன் நான் போலீஸ் அவுட்போஸ்ட்டில் போய், பரமசிவத்திடம் அவர்தான் இதற்கான காரணம் என்று தெரியாமலே எங்களது இளம் பெண்ணை போலீஸ்காரர் கற்பழித்து விட்டார், உடனே நடவடிக்கை எடுங்கள்" என்று கேட்டுக் கொண்டேன். அதற்கு அவர், "இதை இப்படியே விட்டுவிடு, இல்லையென்றால் உனக்குத்தான் பிரச்னை வரும்" என்றார். அதனால்தான் இன்ஸ்பெக்டரிடமும், ஏ.எஸ்.பி. அவர்களிடமும் சொன்னோம். அவர்கள் நடவடிக்கை எடுக்கப் போகிறார்கள் என்பது தெரிந்ததும், அவர் ஓடி விட்டார். இங்கே வந்து தமிழர்களிடம் அவமானப்படுவதற்கு நாங்கள் அங்கேயே செத்திருப்போம்" என்று சோகமாய் சொன்னார்.

இந்த கற்பழிப்பு சம்பவத்தில், என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள் என திருமங்கலம் இன்ஸ்பெக்டர் தயாளனை கேட்டோம். இந்த விஷயம் மருத்துவ பரிசோதனையில் தெளிவானதும், எஸ்.ஐ. வெட்கட்ராமனையும், ஏட்டு பரமசிவத்தையும் சஸ்பெண்ட் செய்திருக்கிறோம். இது எங்களது டிபார்ட்மெண்டுக்கே கெட்ட பெயர் ஏற்படுத்தியுள்ள நிகழ்ச்சி என்றவரை போட்டோ எடுக்க முனைந்த பொழுது, "ஏட்டு தப்பிக்க போய் 10 நாளாச்சி, இன்னமும் பிடிக்கலையான்னு, மேலிடத்துல இருந்து தொடர்ந்து கேள்வியா வந்துக்கிட்டிருக்கு. இந்த நேரத்துல என் போட்டோ வந்தா நல்லாயிருக்காதுங்க" என்று மறுத்து விட்டார்.

காவல் துறையினரால் ஒரு பெண் பாதிக்கப்பட்டிருக்கிறாள் என்பதால், அவளது நல்வாழ்வுக்கு ஏதாவது முயற்சி செய்திருக்கிறீர்களா என்று திருமங்கலம் ஏ.எஸ்.பி. ஸ்ரீலட்சுமிராவ் அவர்களை சந்தித்து கேட்டோம். "இது ஒரு மிருகத்தனமான செயல். கற்பழித்தவனை ஒரு ஆண் என்ற கண்ணோட்டத்தில்தான் பார்க்கிறோம். அவர் போலீசாராக



அகதிகள் முகாம்
செல்வராஜ்

இருப்பதால், தண்டனை கூடுதலாக கிடைக்கும். அவ்வளவுதான். அதைத்தவிர அந்த பெண்ணுக்கு நிதியுதவி வழங்கவோ அல்லது வேறு நல்வாழ்வுக்கு ஏற்பாடு செய்யவோ எனக்கு எந்தவிதமான அதிகாரமும் இல்லை" என்றார்.

பெயர் சொல்ல விரும்பாத போலீஸ்காரர் ஒருவர், "பரமசிவத்திற்கு 4 பிள்ளைகள் இருக்கிறது. இவர் ஏற்கெனவே பெரிய பிரச்னையில் சிக்கி, எஸ்.ஐ.ஆக இருந்தவர் ஹெட் கான்ஸ்டபிளாக ஆகியிருக்கிறார்" என்றதோடு, "அகதிகள் முகாமில் தங்கியிருப்பவர்களுக்கு அரசாங்கம் கொடுக்கும் தொகை மிகவும் குறைவு. அதனால் சமாளிக்க முடியாத ஒரு சிலர் வேறு வழியின்றி, விபச்சாரம் செய்ய வேண்டிய சூழ்நிலைக்கு தள்ளப்பட்டிருக்கிறார்கள். சம்பவத்தன்று பரமசிவம் இரவு 10 மணி சமயத்தில் ஒவ்வொரு வீட்டிலும் யார் யார் இருக்கிறார்கள் என்று பார்த்து வந்தார். நாங்கள் இது வழக்கமான ரவுண்டுதான் என்று நினைத்திருந்தோம். அப்பொழுது ஜெயமலர் தனியாக இருப்பதை பார்த்துவிட்டுத்தான் எல்லோரும் அசந்த சமயமாய் அங்கே நுழைந்து கற்பழித்திருக்கிறார்" என்று தெரிவித்தார்.

ஒரு பெண் கற்பழிக்கப்படுகிறாள் என்பதே-ஒரு மிருகச் செயல். அதுவும், நம் நாட்டில் தஞ்சம் தேடிவந்த பெண்ணிடம் ஒருபோலீஸ்காரனே... எனும் பொழுது இது மிகவும் பயங்கரமாக தண்டிக்க வேண்டிய விஷயம். உடனடியாக பரமசிவத்தை கண்டுபிடித்து கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லாமல் வெறுமனே இலங்கை தமிழர்களுக்கு தஞ்சம் தந்தோமென்று நீலிக் கண்ணீர் வடித்து பிரயோஜனமில்லை. அந்த சகோதரிக்கு நல்வாழ்வு ஏற்படுத்தி தரவேண்டியது தமிழக அரசின் கடமையே.

- எம்.கே.எம்
படங்கள்: மோனா

நன்றி - நக்கீரன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

**உண்மை நிகழ்ச்சி:**

# ராஜலட்சுமியின் எதிர்காலம் கேள்விக்குறி...?

## அம்மா, அப்பா எங்கே?

## 'சுட்டுட்டாங்க... சுட்டுட்டாங்க...!'

சினிமாவிலும், கதைகளிலும் வருவதைப் போன்ற நம்பமுடியாத—ஆனால் நடந்த நிகழ்ச்சி!

ராஜலட்சுமிக்கு இப்போது 18 வயதாகிறது. ஆனால் 10 வயது சிறுமியைப் போல இருக்கிறாள்.

அவளது 4-வது வயதில் தாய்-தந்தையை சிங்கள ராணுவம் சுட்டுக் கொன்ற சம்பவத்தை அவள் கண் முன்னே கண்டதால் அந்தக் கொடூரமான நிகழ்ச்சியினால் ஏற்பட்ட அதிர்ச்சி ராஜலட்சுமியின் மூளை-உடல் வளர்ச்சியைப் பாதித்து விட்டது.

இப்போதும் யாராவது அவளிடம் பேச்சுக் கொடுத்தால் 'சுட்டுட்டாங்க! சுட்டுட்டாங்க!' என்று மட்டும் சொல்கிறாளே தவிர எதையும் நினைவுபடுத்திப் பேசும் சக்தி அவளுக்கு இல்லை. எப்போதும் வெறுமையை வெறித்துப் பார்த்துக் கொண்டிருக்கிறாள்.

12 வருடங்களாக ராஜலட்சுமியை பாதித்து இருக்கும் அதிர்ச்சியிலிருந்து அவள் மீளுவாளா? இந்தச் சிறுமியின் எதிர்காலம் என்ன?

—இதற்கு இனி காலம்தான் பதில் கூற வேண்டும்.

ராஜலட்சுமியின் கதை தமிழ் முத்தில், இலங்கை மலைப்பகுதி தேயிலைத் தோட்டங்களில் சிங்கள இனவெறி அரசின் ராணுவத்தின் லக்களில் தமிழின மக்கள் காலம் காலமாக அனுபவித்து வரும் அடக்கு முறைகளில் ஒரு துளி நிகழ்ச்சியாகும்.

இலங்கை மலைப்பகுதியில் ஹபுதன எஸ்டேட்டில் தம்பேதன என்ற இடத்தில் வசித்து வந்த முத்துச்சாமி— வள்ளியம்மாள் தம்பதியின் ஒரே செல்ல மகள்தான் ராஜலட்சுமி.

இவர்களுக்கு நீண்ட காலமாக குழந்தைப் பேறு இல்லாமல் இருந்தனர். முத்துச்சாமி தேயிலை எஸ்டேட் ஸ்டோரில் வேலை பார்த்தார். வள்ளியம்மாள் தேயிலை பறிக்கும் கூலி தொழிலாளி. அதிகாலை 6 மணிக்கு வேலைக்குச் சென்று மாலை 6 மணிக்குத்தான் கூலி. தொழிலாளர்களுக்கான குடிசை குடியிருப்புக்கு திரும்புவார்கள்.

திருமணமாகி நீண்ட நாட்கள் கழிந்த பிறகும் குழந்தை இல்லாததால், இவர்கள் போகாத கோவில் இல்லை. வேண்டாத சாமி இல்லை.

நீண்ட காலத்துக்குப் பிறகு முத்துச்சாமி- வள்ளியம்மாள் தம்பதியரின் ஏக்கம் தீர்ந்தது. வள்ளியம்மாள் குழந்தை உண்டாகி இருந்தாள். அப்படி தவமிருந்து பெற்ற பெண் குழந்தைக்குத்தான் ராஜலட்சுமி என்று பெயரிட்டு அருமையாக வளர்த்தனர்.

1976-ல் ராஜலட்சுமிக்கு 4 வயது நடந்து கொண்டிருக்கும்போதுதான் அந்த எதிர்பாராத கொடிய நிகழ்ச்சி நடந்தது. அப்போது சிங்களர்கள் தமிழர்களை அழித்தொழிக்கும் இனப்படுகொலைகளில் ஈடுபட்டிருந்தனர். சிங்கள ராணுவமும் சிங்கள காடையருக்கு துணை புரிந்து வந்தது.

ஒருநாள் முத்துச்சாமியும் வள்ளியம்மாளும் வேலைக்குப் போய் மாலை 6 மணிக்கு திரும்பியதும் ராஜலட்சுமியுடன் கொஞ்சிப் பேசிக் கொண்டு இருந்தனர். அப்போது ராஜலட்சுமி பசியினால் அழ ஆரம்பிக்கவே 'அந்தக்கு சாப்பிட ஏதாவது கொடு!' என்றார் முத்துச்சாமி.



18 வயதுள்ள ராஜலட்சுமியின் இன்றைய தோற்றம்.

ஆனால் சாப்பிடக் கொடுக்க வீட்டில் ஒன்றும் இல்லை. ஆகவே கடையில் போய் காபி வாங்கி வருகிறேன் என்று கிளம்பினாள் வள்ளியம்மாள். அப்போது மணி மாலை 6-30. மாலை 6 மணிக்கு மேல் காலை 6 மணி வரை வீட்டை விட்டு யாரும் வரக்கூடாது என்று சிங்கள ராணுவம் ஊரடங்கு உத்தரவை போட்டு இருந்த நேரம்.

எனவே மனைவியை தனியாக கடைக்கு அனுப்ப முத்துச்சாமிக்கு மனமில்லை. ராஜலட்சுமியோ, அழுகையை நிறுத்துகிறபாடில்லை. ஆகவே தம்பதிகள் இருவருமே பக்கத்து தெருவில் இருக்கும் கடைக்கு போய் காபி வாங்க தீர்மானித்தார்கள். ஊரடங்கு உத்தரவு இருப்பதால் கடையை மூடிக்கொண்டு வியாபாரம் நடத்துவது வழக்கம். குழந்தை ராஜலட்சுமியை வீட்டு வாசலில் உட்கார வைத்து விட்டு முத்துச்சாமியும், வள்ளியம்மாளும் நைசாக வீடுகளின் மறைவில் நடந்து கடைக்குச் சென்று காபி வாங்கிக் கொண்டு திரும்பி வந்தனர்.

வீடு வரை வந்து விட்டனர். வாசலில் குழந்தை ராஜலட்சுமி அழுகையை நிறுத்தி விட்டு பெற்றோர்களைப் பார்த்து கையை அசைத்து சிரித்தது. அந்த வேளையில்தான் அந்த கொடூர சம்பவம் நடந்தது. சிங்கள காடையர்கள் வீட்டுக்கு வெளியே நிற்கும் தம்பதியரை பார்த்து எந்திர துப்பாக்கியால் படபடவென சுட்டனர். கொலை வெறி பிடித்த தோட்டாக்கள் இருவரின் மார்பிலும் புகுந்து முதுகு வழியாக பொத்துக் கொண்டது. குருதி சொட்டச் சொட்ட அந்த இடத்திலேயே குழந்தை ராஜலட்சுமியின் முன்னாலேயே அவள் பெற்றோர் விழுந்து மடிந்தனர்.

துப்பாக்கி சத்தத்தையும் பெற்றோர்கள் தரையில் வீழ்வதையும் பார்த்து சற்று நேரம் கண் சிமிட்ட மறந்த ராஜலட்சுமி பெருங்குரலெடுத்து அலறவே ராணுவம் போன பிறகு அக்கம் பக்கம் உள்ளவர்கள் மெதுவாக கதவுகளைத் திறந்து கொண்டு வெளியே வந்தனர்.

முத்துச்சாமியும் வள்ளியம்மாளும் பிணமாகி கிடக்க வீறிட்டழும் குழந்தையைப் பார்த்து பதை பதைத்தனர். குழந்தைக்கு பெற்றோரைத் தவிர வேறு உறவினர்கள் யாரும் இல்லை. ஏனவே பக்கத்து வீட்டுக்காரர்களான கோவிந்தசாமி- கிருஷ்ணம்மாள் தம்பதியர் 4 வயதான ராஜலட்சுமியை தாங்கள் வளர்ப்பதாக எடுத்துக் கொண்டனர்.

கோவிந்தசாமி அதே தேயிலை எஸ்டேட்டில் வாட்ச்-மேனாக வேலை பார்த்தார். அவரது குடும்பம் மிகப் பெரிது. மனைவி கிருஷ்ணம்மாள் உட்பட எட்டு பேர் கொண்ட பெரிய குடும்பம். ஆனாலும் வறுமையையும் மிஞ்சிய விசாலமான மனம் இருந்ததால் அந்தக் குடும்பத்தில் ராஜலட்சுமிக்கு அடைக்கலம் கிடைத்தது.



ராஜலட்சுமியுடன் பத்மாவதி.

இதற்கிடையில் சிங்கள ராணுவ அடக்குமுறை தீவிரமாகவே கோவிந்தசாமி தன் குடும்பத்தோடு அகதியாக இந்தியாவுக்கு வந்தார். தஞ்சாவூரில் ஒரு சிறிய வாடகை வீட்டில் ராஜலட்சுமியோடு 9 பேர் கொண்ட இந்தப் பெரிய குடும்பம் குடியேறியது. சிறு சிறு வேலைகளில் கிடைத்த குறைந்த வருமானத்தில் சிரமமான வாழ்க்கை.

கோவிந்தசாமி- கிருஷ்ணம்மாள் தம்பதியின் 3-வது மகள் பத்மாவதிக்கு ராஜலட்சுமி மீது கொள்ளை பிரியம். எப்போதும் அவர்கள் இருவரும் சேர்ந்து விளையாடிக் கொண்டு இருப்பார்கள். ஆனாலும் ராஜலட்சுமி சில நேரங்களில் ஏதும் பேசாமல் எதையோ வெறித்துக் கொண்டு திக்பிரமை பிடித்தது போல் அமர்ந்து இருப்பாள்.

'சிறு குழந்தைதானே வளர்த்தால் சரியாகி விடுவாள்' என்று எல்லோரும் நினைத்தார்கள். ராஜலட்சுமிக்கு 5 வயதாகும் போது, தஞ்சாவூரில் உள்ள ஒரு பள்ளியில் சேர்த்தார்கள். பள்ளியிலும் ஒரு மூலையில் அப்படியே எதையோ பறிகொடுத்தவள் போன்று உட்கார்ந்து விடுவாளாம். இதனால் 'பைத்தியம்' என்று வகுப்புப் பிள்ளைகள் ராஜலட்சுமியை வேடிக்கை பொருளாக்கி விட்டனர். போதாக் குறைக்கு அவளை கல்லால் அடிப்பது, புத்தகங்களை பிடுங்கிக் கொள்வது என்று துன்புறுத்தத் தொடங்கி விட்டனர். ஒரு முறை ஒரு சிறுமி ராஜலட்சுமியை கல்லால் மண்டையில் அடித்து காயப்படுத்தி விட்டவே அன்றோடு அவள் பள்ளி படிப்புக்கு முற்றுப்புள்ளி விழுந்தது.

தன் கண்முன் பெற்றோர்கள் கொல்லப்பட்ட அதிர்ச்சியில் அப்பேதைச் சிறுமியின் மூளை வளர்ச்சி பாதிக்கப்பட்டு இருப்பதாக தெரிய வந்தது. மூளை வளர்ச்சி இல்லாததால் அவள் தேவையில்லாமல் சிரிக்கிறாள், அழுகிறாள், எதையோ வெறிக்கிறாள்.

இப்போது ராஜலட்சுமிக்கு 18 வயது ஆகி விட்டது. ஆனால் அவள் உடல் வளர்ச்சி 10 வயது சிறுமியை போலவே இருக்கிறது. யாருடனும் எதுவும் பேசாமல் மூலையில் முடங்கிக் கொள்கிறாள்.

அப்பா, அம்மா எங்கே என்று கேட்டால் 'சுட்டுட்டாங்க... சுட்டுட்டாங்க'. என்கிறாள்.

எந்த ஊர் என்று கேட்டாலும், மீண்டும் 'சுட்டுட்டாங்க! சுட்டுட்டாங்க' என்றே கூறுகிறாள். அவள் எந்த வார்த்தையை முதலில் கூறுகிறாளோ அதையேதான் திரும்பத் திரும்ப கூறுகிறாள்.

கோவிந்தசாமி- கிருஷ்ணம்மாள் தம்பதியின் குடும்பம் தஞ்சாவூரிலிருந்து கடந்த 5 ஆண்டுகளுக்கு முன்னால் மதுரையில் குடியேறியது. அரசு ஆஸ்பத்திரியிலும் ராஜலட்சுமிக்கு சிகிச்சை அளித்தனர். பலன் இல்லை. தனியார் மருத்துவமனையில் சேர்க்க கையில் பணம் இல்லை. ஒரு தனியார் நிறுவனத்தில் மாதம் ரூ.300 சம்பளத்தில் வேலை பார்க்கும் கோவிந்தசாமியால் குடும்பத்தை பராமரிக்கவே பெரும்பாடாக இருக்கும் போது சிகிச்சை செலவுக்கு எங்கே போவது?

கோவிந்தசாமியின் ஒரே மகன் மதுரையில் ஒரு டீக்கடையில் வேலை செய்கிறார். 2 மகள்களை திருமணம் செய்து கொடுத்து விட்டார். மாப்பிள்ளைகள் இருவருமே இலங்கையைச் சேர்ந்தவர்கள். இன்னும் 3 மகள்கள் உள்ளனர். அவர்கள் வேலையின்றி இருக்கிறார்கள்.

இதுவரை ராஜலட்சுமியை கஷ்டப்பட்டு வளர்த்துவிட்ட போதிலும் அவள் மனம் மட்டுமின்றி உடலும் வயதுக்கேற்ற வளர்ச்சி அடையாததால் அவள் எதிர்காலத்தை எப்படி அமைத்துக் கொடுப்பது என்பது கோவிந்தசாமி தம்பதியரின் தீராத கவலையாகி விட்டது.

ராஜலட்சுமி நல்ல நிலையில் இருந்தால் ஏதாவது கைத்தொழில் மூலமாவது பிழைத்துக் கொள்வாள். அதற்கும் வழி இல்லையே என்பது தான் பிரச்சனையாக இருக்கிறது.

கோவிந்தசாமியின் 3-வது மகள் பத்மாவதி (21) அஞ்சல் வழி கல்வியில் பி.எஸ்சி. கணிதம் படித்து விட்டு வீட்டில் இருக்கிறார். அவர் 'தேவி' வார இதழ் தவறாமல் படிப்பது வழக்கம். அதில் வாசகர்கள் உதவி செய்யும் 'ஒரு கை கொடுங்கள்' பகுதிக்கு ராஜலட்சுமி பற்றி எழுதியவர் இவர்தான்.

ராஜலட்சுமி பற்றிய குறிப்பு 11-4-90 தேவி இதழில் வெளியானது. அதைத் தொடர்ந்து நார்வே நாட்டில் வசிக்கும் 'தேவி' வாசகர் எஸ்.ஏ.சுகுமாரன், ராஜலட்சுமியின் சிகிச்சைக்காக அனுப்பிய தொகை ரூ.1,800 பத்மாவதியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

—கட்டுரை: 'துரை'

(நன்றி - தேவி)

* * * * *

**வீடு என்றால் சமையலறை இருக்க வேண்டும்.**
**நாடு என்றால் படை இருக்க வேண்டும்.**
**மாந்தன் என்றால் கொள்கை இருக்க வேண்டும்.**

— சோ. சுவி...



www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உலகக் கிண்ணத்திற்கான உதைபந்தாட்டப் போட்டியும் - நாடற்ற இலங்கைத் தமிழரும்

உலகக் கிண்ணத்திற்கான உதைபந்தாட்டப் போட்டி இத்தாலியில் நடைபெற்றது. இறுதியாட்டம் ரோமில் நடைபெற்றது. அதில் மேற்கு ஜெர்மனி வெற்றி பெற்று அடுத்தநான்கு ஆண்டுகளுக்கு உலகக் கிண்ணத்தைத் தமதாக்கிக் கொண்டது யாவரும் அறிந்ததாகும்

இலண்டனில் இருந்து எங்கள் குடும்பமும் ,நண்பர் குடும்பமும் ஒரு வார விடுமுறையிஇத்தாலி நாட்டிற்கு சுற்றுலாவிற்கென சென்றோம் . எமது திட்டப்படி கீழ்க் குறிப்பிட்ட இடங்களைப்பார்ப்பதற்காக முடிவு செய்தோம். மிலான், வெனிஸ், ரியூரின், பிசா, ரோம். திட்டமிட்டபடி எல்லா இடங்களுக்கும் சென்று எம்மால் அதிக நாட்கள் நிற்கக்கூடியதாக நேரம் கிடைக்கவில்லை.

நாம் சென்ற அடுத்த நாள் நேப்போலில் இத்தாலிக்கும் ஆர்ஜன்டீனாவிற்கும் இடையில் போட்டி நடைபெற்றது. மிலானின் தொலைக்காட்சியில் போட்டியைப் பார்க்கும் வாய்ப்பு எமக்குக்கிடைத்தது. அவ்விடம் உள்ள இலங்கைத் தமிழர்கள் முழுக்க முழுக்க இத்தாலியின் ரசிகர்களாகிவிட்டனர். அவர்களுக்கு உள்ள பற்றுதலைப் பார்க்கும் போது நமக்கென்று ஒரு நாடு இருந்து உதைபந்தாட்டக்குழுவும்இருந்தாலஎவ்வளவுக்குஆதரவதருவார்களஎன்பதை தஉணரமுடிந்தது.அவ்விடம் உல்லாச விடுமுறையில் நிற்பவர்கள் கூட தங்களின் ஆதரவை நண்பர்களுடன் சேர்ந்து தெரியப்படுத்தினர்.

இத்தாலி அப்போட்டியில் வெற்றி பெறவில்லையெனினும் அந்த நகர் முழுவதும் வெடிச்சத்தமும் கார்கள் மற்றும் வாகனங்களின் ஈடிசுச சத்தங்களும் கேட்காமல் இல்லை.காரணம் ஆஜெனடீனாவின் கப்டின் மரடானோ இத்தாலியின் ஒரு நகரான ஞயிடிடந என்ற இடத்தில் உள்ள கோஸ்டிக்கு விளையாடுகிறார்.

அடுத்து அன்று இரவோடு இரவாக ரயில் மூலம் ஏநளைஉந நகருக்குச் சென்று கடலில் மூழ்கிக் கொண்டிருக்கும் நகரான வெனிஸையும், அடுத்து இத்தாலியின் கைத்தொழில் நகரானரியூரினுக்குச் சென்றோம் .அன்று அவ்விடம் இங்கிலாந்திற்கும் மேற்கு ஜேர்மனிக்கும் அரையிறுதிப் போடடி நடைபெற்றது. இறுதியாகப் பைசாக் போபுரத்தையும் , ரோம் நகரையும் பார்க்கப் புறப்பட்டோம். சாய்ந்த நிலையில் நிற்கும் பைசாக் கோபுரத்தைப் பார்த்து விட்டு இலண்டனுக்கு நாம் திரும்பிக் கொணடிருக்கும் பொழுது உலகக் கிண்ணத்திற்கான இறுதிப் போட்டியின் முடிவுகளை விமானத்தில் அறிந்தோம்.

தகவல்- இரத்தினராஜா .மயூரன்.

**தகப்பன்:-** என்ன பிள்ளை போன கிழமைதான் கல்யாணம் முடிச்சு கட்டித்தந்த புது வீட்டிற்குக் குடித்தனம் போனாய், இப்ப பெட்டி படுக்கையோடுதிரும்பி வந்திருக்கிறாய்? ...... என்ன விசயம்?..

**மகள்:-** நீங்கள் வீடு கட்டித்தரேக்கையே வளவுக்குள்ளேயே பங்கர் வெட்டித்தரேல்லையாம் அதுதான்அதை வெட்டித் தந்துபோட்டு வீட்டுக்குள்ள வரட்டாம்.

வயலகளுக்கு குப்பை உரமாவது போல் வாழ்க்கையில் செய்யும் தவறுகளும் நம் வளர்ச்சிக்கு உரமாகும்.

— இராஜாஷி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# யாழ் கோட்டை இடிபடுகிறது!

யாழ்ப்பாணத்தில் உள்ள கோட்டையை விடுதலைப் புலிகள் இடித்துக் கொண்டு இருக்கிறார்கள்!

3 மாதம் முன்பு விடுதலைப் புலிகளுக்கும், சிங்கள இராணுவத்துக்கும் இடையே போர் மூண்ட பொழுது, இந்தக் கோட்டையை விடுதலைப் புலிகள் முற்றுகையிட்டார்கள். கோட்டைக்குள் 200 சிங்கள சிப்பாய்கள் இருந்தார்கள்!


விமானப் படை- கப்பல் படை- தரைப்படை ஆகிய முப்படையையும் பயன்படுத்தி, இரண்டு மாத காலம் சிங்கள இராணுவம் போராடியது. கடைசியில் கோட்டைக்குள் இருந்த சிங்கள சிப்பாய்களை மீட்டுச் சென்றார்கள். ஆனால், கோட்டையைத் தக்க வைத்துக்கொள்ள முடியவில்லை. விடுதலைப் புலிகளின் தாக்குதலை சமாளிக்க முடியாமல், இலங்கைப் படை கோட்டையைக் கைவிட்டு விட்டுச் சென்றது!

விடுதலைப்புலிகள் கோட்டையைப் பிடித்தார்கள். கோட்டையில் தங்கள் கொடியைப் பறக்க விட்டார்கள்.

ஆனால், இப்பொழுது விடுதலைப் புலிகள் கோட்டையை இடித்துக்கொண்டு இருக்கிறார்கள். "அது அடிமையின் அடையாளம். ஆகவே, இடிக்கிறோம்" என்று விடுதலைப் புலிகள் சொன்னார்கள்.

ஆனால், முழுவதுமாக இடித்துத் தரைமட்டம் ஆக்கப் போவது இல்லை. சில முக்கியப் பகுதிகளை வைத்துக் கொள்ளப் போகிறார்கள்.

ஏறத்தாழ 200 ஆண்டுக்கு முன் யாழ்ப்பாணத்தைப் பிடித்த போர்த்துக்கீசியர் (வெள்ளையர்) கட்டிய கோட்டை, இது. ✱



யாழ்க் கோட்டையில் விடுதலைப்புலிகள் கொடி

யாழ்க் கோட்டைக்குள் விடுதலைப்புலிகள் நுழைகிறார்கள்.

ஜானி வெடி

இராணுவ லாரிகள், ஜீப்புகளைக்கூட இந்தக் கண்ணி வெடிகள் தூள் பரத்தி விடுகின்றன!

இந்தக் கண்ணி வெடிகளுக்கு ஜானி (ஜோனி) வெடி என்று விடுதலைப் புலிகள் பெயர் சூட்டியிருக்கிறார்கள்.

விடுதலைப்புலி தளபதிகளில் ஒருவர், ஜானி. ஈழத்தில் இந்தியப் படைகள் இருந்தபொழுது, "பிரபாகரனிடம் சமரசம் பேச வேண்டும். அவர் இருக்கும் இடத்துக்கு எங்களை அழைத்துப் போங்கள்" என்று ஜானியை இந்தியப்படை அழைத்துப் போயிற்று. பிரபாகரனைப் பிடிக்கும் தந்திரமே இது என்று ஜானிக்குத் தெரிந்துவிட்டது. பிரபாகரனை காட்டிக்கொடுக்க ஜானி மறுத்துவிட்டார். இதனால் கோபம் அடைந்த இந்தியப்படை அவரை சுட்டுக்கொன்று விட்டது. அந்தத் தியாகியின் பெயரை (ஜானி) இந்த வெடிக்கு விடுதலைப் புலிகள் சூட்டியிருக்கிறார்கள்.

இந்தக் கண்ணி வெடியை நினைத்தாலே சிங்கள சிப்பாய்களுக்கு சிம்ம சொப்பனம்! அதனால்தான் இலங்கை அரசு விமானப்படை தாக்குதலைத் தீவிரப் படுத்தியிருக்கிறது! ✱

நவீன் - ராணி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## பொன் மயிலாளின் அரங்கேற்றம்



3.11.90 சனிக்கிழமை மாலை செல்வி. தமிழினி. சிறிபாலனின் நடன அரங்கேற்றம் வோல்தம் பொறஸ்ற் அசெம்பிளி மண்டபத்தில் நடைபெற்றது. ஆயிரம் பேர் அடங்கக் கூடிய அழகிய மண்டபம் அழகாக அலங்கரிக்கப்பட்டு, வாசலிலே அழகிய நங்கையர்கள் சந்தனம், கற்கண்டு தந்து வருபவர்களை வரவேற்றுக் கொண்டிருந்தார்கள். அழைப்பிதழில் மாலை 6.30 மணிக்கு நிகழ்ச்சி ஆரம்பமாகும் என்றிருந்த போதும் 7.00 மணியளவிலேயே நிகழ்ச்சிகள் ஆரம்பமானது ஏனோ தெரியவில்லை.

இந்தியாவிலிருந்து அரங்கேற்றத்திற்கென பிரத்தியேகமாக வந்திருந்த திரு. ராமராவ் மாகாகணபதிம் என்ற நாட்டை ராக கணேச உருப்படியுடன் ஆரம்பித்தார். வாய்ப்பாட்டு திருமதி. மாதினி. சிறீஸ்கந்தாராஜா என்று போடப்பட்டிருந்தும் அனேக உருப்படிகள் திரு.ராமராவ் அவர்களால் பாடப்பட்டது வியப்பாக இருந்தது. நிகழ்ச்சிகளின் ஆரம்பத்தில் செல்வி தமிழினிக்கு குரு மூவர் எனவும், திருமதி. பத்மினி.குணசீலனிடம் நான்கு ஆண்டுகளும், ஒரு சில மாதங்கள் திரு. ராமராவ் அவர்களிடமும், ஒரு சில மாதங்கள் திருமதி. ராகினி. ராஜகோபாலிடமும் பயின்றுர் என்றும் குறிப்பிடப்பட்டது. நான்கு ஆண்டுகள் பயிற்றுவித்த திருமதி. பத்மினி. குணசீலன் மேடைக்கு வராதமை ஏன் என்று அருகில் இருந்தவர்கள் கதைத்தது நம் காதுகளில் விளத் தவறவில்லை. புஸ்பாஞ்சலியுடன் செல்வி தமிழினி. சிறிபாலனின் நடன அரங்கேற்றம் ஆரம்பமாகியது. அலாரிப்பில், நாட்டிய ஆரம்பம் கை வைத்திருந்தமையை மூன்று குருக்களும் கவனிக்காதமை ஏனோ தெரியவில்லை. அதுவும் இந்தியாவில் பிரசித்தி பெற்ற இலட்சுமணனின் சகோதரர் ராமராவ் கவனிக்காதமை பெரும் கவலைக்குரிய விடயமாகும். தமிழினி நல்ல தாள லயத்துடன் ஆடினுர். ஆடும் போது அவர் கைகள் முகத்தை மறைத்தமையால் அவரது முகபாவத்தைக காணும் வாய்ப்பைக குறைந்தது.

புஸ்பாஞ்சலியைத் தொடர்ந்து ஜதீஸ்வரமும், நடேச கௌத்தவமும் இடம் பெற்றன. அதனைத் தொடர்ந்து வர்ணமும் இடம் பெற்றது. இந்தப் பெரிய நாற்பது நிமிட வர்ணத்தில் சளைக்காமல் செல்வி. தமிழினி மிகவும் நன்ருக ஆடினுர். பின்னர் இடைவேளையும் இடம் பெற்றது. இடையில் இசை இடைவேளையின் போது எப்படிப் பாடினுரோ முதல் இன்னும் இரு பாடல்களால் தனது இசையெனும் இன்ப வெள்ளத்தில் எமையெல்லாம் திளைக்க வைத்தார் திருமதி. மாதினி. சிறீஸ்கந்தராஜா.

தனது கம்பீரமான குரலால் பாட்டையும் பாடி, நட்டுவாங்கமும் செய்து நடன அரங்கேற்றத்தை மிகவும் திறம்பட இயக்கி வைத்தார் குருவாகத் திகழ்ந்த திரு. ராமராவ். இடைவேளையைத் தொடர்ந்து திருப்பாங்குன்ற வேலா என்ற பதம், தில்லானு என்பனவும் மிகவும் திறம்படச் செல்வி. தமிழினி. சிறிபாலனிஞல் ஆடப்பட்டது.

பிரதம விருந்தினர் திருமதி. சரஸ்வதி. பாக்கியராஜாவின் உரை தனது கலையுணர்வை, மேடையில் தோன்றிய எல்லாக் கலைஞர்களோடு, செல்வி. தமிழினியின் ஆரம்ப குருவான திருமதி. பத்மினி குணசீலனையும் பாராட்டி எல்லோரையும் மெய்சிலிர்க்க வைத்திருக்குமென்ருல் ஐயமில்லை. மேடையில் தோன்றிய சக கலைஞர்களான திரு.முத்து .சிவராஜா, திரு.கோதண்டபாணி, திரு.க.சிதம்பரநாதன் ஆகியோரின் பங்களிப்பைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

www.tamilarangam.net





**The Bharatha natiya arangatram of Delaney Chitra Murugiah is to be held on 15th December 1990 at Acton Town Hall, Acton from 7p.m to 10p.m.**


**Delaney Chitra is the disciple of Well Known dancer Mrs.Vijayambikai. Indrakumar.**

**Delaney is the Youngest Daughter of Mr & Mrs. Murugiah of 27, Stoneleigh Road, clayhall, Essex.**

She started lesson at London Sri Murugan Temple, Manorpark for one year and then she went to Mrs. vijayambikai . Indrakumar . She started at the age of five and now she is nine.

## TWO BRIGHT SONS

The two sons of Mr. & Mrs .S.K. Rajasingham of 103,Green Lane, NorthWood , Middlesex , have done very well in their studies. The youngest son Srikaran aged 13, have won Andrew scholarship and joined Mr. Chant Tayloro Norwood Oreparatory School. He has won this year the prizes for Maths, Science and Art. He won also awarded the school cups for Languages and academic standard. Eldest son Kirubakaran age 15 have obtained 9 A's at the June 1990 G.C.S.E Examination.



**ஒருவர்** என்ன விதானையார் டி.வி. டெக் எல்லாத்தையும் எடுத்து உள்ளுக்குள்ளை வைச்சிட்டீர் போலை கிடக்கு?.....

**விதானையார்** சீ,...சீ.. அப்படியொண்டுமில்லை.உவங்கள் ஷெல் அடிக்கேக்கை நேரம் போகுதில்லை அதுதான் பங்கருக்குள்ளை கொண்டுபோய் வைச்சிருக்கிறன் படம் பார்க்கலாம் தானே....





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பாரீஸ் தமிழர் கல்வி நிலையத்தின் ஆண்டு விழா



பாரீஸில் நவம்பர் முதலாம் திகதி பாரீஸ் தமிழர் கல்வி நிலையத்தின் நான்காவது ஆண்டு நிறைவு விழா நடைபெற்றது. நிகழ்ச்சிகள் சம்பிரதாய முறைப்படி ஆரம்பமாகி சிறுவர், சிறுமியரின் தமிழ், பிரெஞ்சு, ஆங்கிலப் பேச்சுப் போட்டிகள், பாடல்கள், பிரதம, சிறப்பு விருந்தினர்களின் சொற்பொழிவுகளும், பரிசளிப்பு வைபவமும் கலைநிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

கடந்த நான்கு வருடங்களாகக் கல்வி நிலையத்தின் சேவை கணிசமான அளவு வளர்ச்சியடைந்திருக்கின்றது என்பதை கண்டுணரக் கூடியதாயிருக்கின்றது. தமிழ் மூலம் பிரெஞ்சு, ஆங்கிலம், தையல் சிறுவர்களுக்கான தமிழ், கணிதம் வகுப்புக்களையும் நாடாத்தி வந்த இக் கல்வி நிலையம் தொண்ணூறும் ஆண்டு ஜனவரி மாதத்திலிருந்து தமிழ் ஆங்கில மூலம் கம்பியூட்டர் வகுப்புக்களையும் நடாத்தி வருகின்றது. கம்பியூட்டர் பயிற்சி பெற்ற பலருள் மிகச் சிலர் கம்பியூட்டர் வேலை வாய்ப்புக்களையும் பெற்றிருக்கின்றனர்.

ஆசிரியர் திரு. காராளபிள்ளை அவர்களைப் போஷகராகவும், திரு. அ. ஜெயகுமார் அவர்களைத் தலைவராகவும் கொண்டு பல ஆதரவாளர்களின் அயரா உழைப்பாலும் சமூகநலன் விரும்பிகளினது ஊக்கத்தினாலும் ஒத்துழைப்பினாலுமே இந்தப் பரிணாம வளர்ச்சியை இக் கல்வி நிறுவனம் கண்டிருக்கின்றது. அடுத்த ஆண்டில் சாரதிப் பயிற்சி வகுப்புக்களையும் நடாத்த இருப்பதோடு பாரீஸ் நகருக்கு வெளியேயும் சிறுவர்களுக்கான தமிழ் வகுப்புக்களையும் நடாத்தவிருக்கின்றது.

தாய் மொழி மூலம் பிரெஞ்சு மொழிப் பயிற்சியை முடித்துக் கொண்டு வெளியேறிய ஆயிரக் கணக்கானோரில் சிலர் தகுதியான வேலை வாய்ப்புக்களையும் பெற்றிருக்கின்றனர். கல்வி நிலையத்தின் வளர்ச்சியைப் பார்க்கும் போது அதன் சேவை மேலும் பல்கிப் பெருகித் திகழும் என்ற நம்பிக்கைக் கீற்றுத் தென்படுகின்றது. இக் கல்வி நிலையம் கல்வியோடு மட்டும் நின்று விடாமல் உடலுறுதிக்கு விளையாட்டுப் போட்டிகளையும் நடாத்தி விளையாட்டுத் திறனையும் உருவாக்குகின்றது.

நிறைவு விழா நிகழ்ச்சிகளில் சிறுவர் சிறுமியரின் பேச்சுக்களைத் தொடர்ந்து உன்னையே நீ அறிவாய் சிறப்பு மலர் வெளியிடப்பட்டது. பின்னர் விருந்தினர் உரைகளினைத் தொடர்சிறுவர்கள் தயாரித்தளித்த புதிய தூண்கள் நாடகம் இடம் பெற்றது.ஒற்றுமை பற்றி நல்லமுறையில் சொல்லியிருந்தார்கள்.

வருடாந்தச் சிறுகதை, கவிதைப் போட்டியிலும் விளையாட்டுப் போட்டியிலும் வென்றவர்களுக்கும் பரிசில்கள், வெள்ளிக் கிண்ணங்கள் வழங்கப்பட்டன. நிகழ்ச்சியின் இறுதியாக கல்விநிலைய ஆசிரியர்கள், அங்கத்தவர்கள் தயாரித்தளித்த இந்த நிலை மாறுமா? நாடகத்தின் நடிப்பு இடம் பெற்றது.

கருணாநிதி

எமது பிரெஞ்சு நிருபர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# காற்றினிலே வந்த கீதம்

Academy of Indian Music and Cultural Studies ஸ்தாபனம் ஒழுங்கு செய்திருந்த இளம் புல்லாங்குழல் வித்துவான் சசாங் சுப்பிரமணியத்தின் புல்லாங்குழல்க் கச்சேரி 07.09.1990 சனிக்கிழமை, மெல்பனில் இடம்பெற்றது. கச்சேரி ஆரம்பத்தில், நூற்றுக்கணக்காக வந்திருந்த ரசிகர்கள் அனைவரது கண்களும் மேடையில் சகவாத்தியக்காரர்களுக்கு மத்தியில் அமர்ந்திருந்த 11 வயதுச் சிறுவனிலேயே நிலைகுத்தி நின்றன. வயதுக்கு அதிகமான அனுபவத்தைப் பெற்றிருந்ததைப் போல அமர்ந்திருந்த அந்தச் சிறுவனின் குறும்புக் கண்களோ, சபையோரை வட்டமிட்டுவிட்டு கட்டளைக்காகக் காத்திருந்தவன் போல, முன்வரிசையில் அமர்ந்திருந்த தந்தையாரின் கை அசைந்ததும் குழலை எடுத்து எங்களை இசை விருந்துக்கு அழைத்துச் சென்றான்.

குழலிலிருந்து வந்த முதலாவது விருந்து வர்ணம். பைரவி ராகத்தில் இசைத்த வர்ணத்தின் இனிமையில் ரசிகர் கூட்டத்திலிருந்த மேலை நாட்டவர் கூட தம்மை மறந்து தலையாட்டத் தவறவில்லை. மேலும் வர்ணத்திலே திரிகால மும், திஸ்ரமும் படுத்தி வாசித்த அந்த அசாத்தியத் திறமையை மிருதங்கம் வாசித்தவரின் முகமலர்ச்சியிலிருந்தே ஊகிக்க முடிந்தது. தொடர்ந்து ரஞ்சனி ராகத்தில் அமைந்தது கீர்த்தனம். அதன் நுணுக்கங்களைச் சிறு பிசகுமில்லாமல் தன் பிஞ்சு விரல்களால் அழகுற இயக்கினான். சண்முகப்பிரியா ராகத்தில் எடுத்த 'ராகம் தானம் பல்லவி', இராகமாலிக்காக என்றாற் போல் அமைந்தி ருந்தது. பல தென்னிந்திய ரசிகர்களுக்குப் பரிச்சயமில்லாத ராகம் 'த்ஜாவந்தி'. வட இந்திய சாயல் கொண்ட இந்த ராகத்தைக் கூட இந்தச் சிறு வனின் 'ராக மாலிகை' விட்டு வைக்கவில்லை.

குழலிசையிலிருந்து வேறுபடுத்திப் பார்க்க இயலாதவாறு ஒலித்த K.S.மணியின் வயலினையும் இந்த இடத்தில் குறிப்பிடாமல் இருக்கமுடியாது. இதற்குக் கிடைத்த கைதட்டல் ஒலியடங்கி எழுந்த அமைதியைக் கிழித்துக் கொண்டு வந்தது இரவிச்சந்திராவின் மிருதங்க நாதம். இவர் சகவாத்தியக் காரர்களான ஜோய் மகேஸ் (கடம்), டாக்டர் செல்வேந்திரா (மோர்சிங்) ஆகியோருடன் இணைந்து ஆதி தாளத்தில் இரண்டு களை சவுக்கம், சுண்டுவிரல் சமத்தில் வாசித்த ஆவர்த்தனத்திற்கு, சிறுவன் சசாங் புன்னகை தவழ தாளம் போட்டவிதம் ஒரு கண்கொள்ளாக் காட்சி.

அடுத்த விருந்துக்கான அறிவித்தல் விநோதமாக இருந்தது. 'காபி ராகத் தில் எப்போ வருவாரோ'.காபி என்று ஒரு ராகம் இருப்பதையே முதன்முதலாக அன்றுதான் அறிந்தவர்கள் கூட கீதத்தின் இனிமையை அநுபவிக்கத் தவறவில்லை. பாட்டுக்கொரு புலவன் பாரதி தன் பாடலைப் பாடினால் இனிமையாக இருக்குமோ இல்லையோ...அவனின் 'சின்னஞ்சிறு கிளியே' பாடலை இந்தச் சிறு வனின் குழலில் கேட்க மெல்பன் மக்கள் தவம் செய்திருக்க வேண்டும். அடுத்து 'யமுன்-கல்யாணி' ராகத்தில் வந்த 'கிருஷ்ணா நீ பேகனே', கண்ணனை இசை வடிவத்தில் தோன்றவைத்தது.

இறுதியாகக் கச்சேரிக்கு மகுடம் வைத்தது போல் 'வீணா வேணு வயலின்' இணைந்து அளித்த 'பல்லியம்' அவுஸ்திரேலியாவில் முதல் தடவை அரங்கேறிய ஒரு புதுமை. பைரவி ராகத்தில் S.ராம்நாத் வீணையில் இசைத்த 'தானம்' சுத்த மான வாசிப்புக்கு ஒரு எடுத்துக்காட்டு மட்டுமின்றி, வீணா வேணு வயலின் என்ற இக்கச்சேரியை களைகட்டவும் செய்தது.

முடிவில், நிகழ்ச்சிக்குச் சிறப்பு விருந்தினராக வந்திருந்த Monash பல்கலைக்கழக இசைத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் Ress Flora, சிறுவனின் திறமையைப் புகழ்ந்து, வாழ்த்தி விருதும் வழங்கினார்.

குமு - ஷண்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# VERANDAH

A TASTE OF PARADISE

**Indian and Sri Lankan Tandoori Cuisine**

**Our Specialities include Dosai, Kothu Roti, Frech Crab, Mutton, Chicken,**

**Fish & Squid Curry cooked in authentic Sri Lankan style,**

**Also Specially Vegetarian dishes**

**Come & try our Eat as much as you like Sunday Buffet Lunch**

**at only £6.95 per head. (£3.50 children)**

OPENING HOURS SUNDAY 12 NOON to 3.30
SUNDAY - THURSDAY 6.00 P.M. - 11.30 P.M
FRIDAY / SATURDAY 6.00 P.M - 12 MIDNIGHT

FOR RESERVATIONS, TELEPHONE 081 659 1185 & 081 659 6348

150, HIGH STREET, PENGE, LONDON SE20

**The most spacious Sri Lankan restaurant in Europe**

# TILKO

PROPERTY SERVICES

**Complete letting and property management services**

**LANDLORDS**

Quality tenants guaranteed in 2 weeks
Efficient computerised matching & administration services
Lowest Commission Charged

**TENANTS**

Friendly service provided
No fees at any stage
Negotiable Deposits & Rent terms
DHSS WELCOME

**Sellers**

Problem in selling your properties?
Why not try our special rates?
Sole Agency 1%
Multiple Agency 1.5%

**Buyers**

Find a suitable property from our comprehensive list ranging from 1 bed flats to 5 bed houses

**FINANCIAL REQUIREMENTS**

MORTGAGES - RE-MORTGAGES - SAVINGS PENSIONS ETC.

271, FOREST ROAD, WALTHAMSTOW, LONDON E17 6HD
Tel: 081 - 527 1810 (Near Palmerston Road) Fax: 081 - 527 3673


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# CAPITAL

**Specialist in V.W. & Audi Repairs**

# AUTOS

- *RECOVERY SERVICE*
- *COMPUTER TUNING*



- *WELDING, RESPRAYS*
- *PRE MOT CHECKS*
- *INSURANCE WORK*
- *ALL MECHANICAL & ACCIDENTAL REPAIRS*
- *FREE ESTIMATES*
- *VW AUDI SPECIALIST*
- *VW AUDI 2nd HAND CAR SPARES*
- *2nd HAND CARS SALES*



N.Ratha
(Proprietor)

311, Sprowston Mews,
Forest Gate E 7
(Rear of 311 Romford Road)

**TEL: 081 519 6187 081 519 3041 0860 570031**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்